Setlur Sandana Kandanam

ஸ்ரீரஸ்து.

1. பேரருளாளன் பெருமைவிளக்கம்,

...க்ஷேத்திரம் திவ்யதேசமல்லவென்றும் தேவப்
...பெருமாளுக்கு ஆழ்வார்மங்களாசாஸனமில்லை
...ம் திருவயிந்திரபுரம் சேட்லூர் நரஸிம்ஹாசாரியர்
எழுதியிருப்பதற்கு ஸப்ரமாண ஸமாதானம்.

...ட்லூர் தாண்டவகண்டநம்.

2. ஸ்ரீதேசிக ப்ரபாவ பரிஷ்காரம்.

...குறித்த சேட்லூரையங்கார் ஸ்ரீதேசிகன் சரித்திர
...விக்கும் முகத்தினல் பிரமாண விருத்தமான பல
...யங்களை யெழுதியிருப்பவற்றுக்கு விடையளிப்பு.

நூலாசிரியர்

ஸ்ரீசைல கிருஷ்...

(சின்ன காஞ்சிபுரம் ... வண்டை மாடவீதி ...)

சென்னை மாடல் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீமுகவூ ஆனித்திருவோணம்.

1933.

...ன் விலை] [0-8-0

ஸ்ரீரஸ்து.

1. பேரருளாளன் பெருமைவிளக்கம்,

காஞ்சீக்ஷேத்திரம் திவ்யதேசமல்லவென்றும் தேவப் பெருமாளுக்கு ஆழ்வார்மங்களாசாஸனமில்லை யென்றும் திருவயிந்திரபுரம் சேட்லூர் நரஸிம்ஹாசாரியர் எழுதியிருப்பதற்கு ஸப்ரமாண ஸமாதானம்.

சேட்லூர் தாண்டவகண்டநம்.

2. ஸ்ரீதேசிக ப்ரபாவ பரிஷ்காரம்.

மேற்குறித்த சேட்லூரையங்கார் ஸ்ரீதேசிகன் சரித்திர மெழுதுவிக்கும் முகத்தினுல் பிரமாண விருத்தமான பல விஷயங்களை யெழுதியிருப்பவற்றுக்கு விடையளிப்பு.

நூலாசிரியர்

Author

ஸ்ரீசைல கிருஷ்ணமாசாரியர்,

(சின்ன காஞ்சிபுரம்-வடவண்டை மாடவீதி.)

சென்னை மாடல் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீமுகஹு ஆனித்திருவோணம்.

1933.

[விலை] [0-8-0

ஸ்ரீ:

இந்நூலின் சுருக்கமான அட்டவணை.

ஆரியர்காள்!, ஸ்ரீமான் உ. வே. திருவஹீந்திரபுரம் சேட்லூரர். நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி ஸமீபகாலத்தில் வெளியிட்ட இரண்டு புத்தகங்களை ஆராய்ச்சி செய்யப் பிறந்த இந்நூலில் ப்ராஸங்கிகமாக அந்தச் சேட்லூரருடைய நூல்களிலிருந்து சில வழுக்களை யெடுத்துக் காட்டியிருக்கின்றேன். ஒன்றுக்குக்கூட அவரால் ஸமாதாநம் சொல்லமுடியாதென்பது கல்வெட்டேயாகும்; விவேகிகள் சோம்பலைவிட்டு இந்நூலை முழுதும் கடாக்ஷித்தருளவேணும். இதை முழுதும் படிக்க இரண்டுமணி அவகாசத்திற்குமேல் ஆகாது. சேட்லூரருடைய சப்ததோஷங்கள், அர்த்த தோஷங்கள், அபிப்ராயதோஷங்கள் முதலிய பலவகைத் தவறுகள் இதில் விளங்கக் காட்டப்பட்டுள்ளன. இங்ஙனே காட்டக்கூடிய தவறுகள் அவருடைய பதிப்புகளில் பல்லாயிரக் கணக்காகவே யுண்டென்பது அதிசயோக்தியல்ல, ஸபைகூட்டி விசாரிக்கப் புகுந்தால் அத்தனையும் வெளியிடப்படும். வீண்பணச் செலவு செய்து விரிவாக அச்சிட ஸௌகரிய மில்லாமையாலே சுருக்கமாகவே இதில் காட்டியிருக்கிறேன். சேட்லூரருடைய பதிப்புகளெல்லாம் நம்மிடமில்லை. தலைகாலில்லாதபடி ஏதோ சில சில ஸஞ்சிகைகளே நமக்குக் கிடைத்தன. ஒன்றிரண்டு முழுப்புத்தகங்களும் கிடைத்தன. அவற்றிலும் தேடாமல் திடீர் திடீரென்று கிடைத்த வழுக்களையே இதில் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த வழுக்களுக்கு பக்கலக்கத்துடன் அட்டவணை யெழுதுகிறேனிப்போது. பக்கலக்கமென்பது இந்த நமது புத்தகத்தினுடையது. அந்தந்த பக்கங்களிற் பார்த்தால் அந்த வழுக்களின் விவரணம் செவ்வனே விளங்கும்.

ஆக (52) விஷயங்கள் சேட்லூராருடைய தவறுதல்களாக இந்நூலில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன, இந்த நிரூபணங்களினிடையிடையே ஒவ்வொருவரும் அவசியமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய பலபல ஸாரமான விஷயங்கள் மூதலிக்கப்பட்டிருக்கின்றன. மேற்குறித்த தவறுதல்களில் ஒன்றுக்குக் கூட சேட்லூரார் சொல்லக்கூடிய ஸமாதானம் சிறிதுமில்லை யென்பதே எமது துணிபு. ஒருகால் ஸமாதானம் வெளியிட அவர் முன்வருவரேல் மேற்குறித்த நெம்பர்வாரியாக விஷயங்களைத் தலையங்கமாகவைத்து அடைவே ஸமாதானங்களை வெளியிட்டால் ஆண்மையே.

இங்ஙனம்:—

ஸ்ரீ சைல கிருஷ்ணமாசாரியன்.

(தாண்டவகண்டநப்ரணேதா.)

ஸ்ரீரஸ்து.

பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவஹீந்திரபுரம்

ஸ்ரீமான் உ. வே. சேட்லூர். நரஸிம்ஹாசாரியார் ஸ்வாமிகளின்

அகாண்ட தாண்டவங்களுக்குக் கண்டனமாகிய

சேட்லூர் தாண்டவ கண்டநம்.

𑌶𑍍𑌲𑍋॥ 𑌶𑍇𑌟𑍍𑌲𑍂𑌰𑍍 𑌶𑍍𑌰𑍀 𑌨𑌰𑌸𑌿𑌂𑌹𑌸𑍂𑌰𑌿𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌤𑌾𑌨𑍁
𑌵𑍍𑌯𑌰𑍍𑌥𑍈𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑍋𑌰𑌾𑌶𑌿𑌭𑌿𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌲𑌸𑌨𑍈𑌃 𑌪𑌰𑌦𑍂𑌷𑌿𑌤𑍈𑌶𑍍𑌚
𑌹𑌸𑌿𑌤𑌾𑌨𑍁 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌶𑍇𑌷𑌾𑌣𑍍𑌯𑌪𑌿। 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑌤𑍇𑌰𑍍𑌵𑍇𑌗𑌷𑍍𑌟𑍍𑌯 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍
𑌮𑌤𑍍𑌯𑌾𑌲𑌵𑌂 𑌖𑌣𑍍𑌡𑌂 𑌕𑌰𑍋𑌤𑍍𑌯𑌯𑌂 𑌶𑍇𑌟𑍍𑌲𑍂𑌰𑍍 𑌤𑌾𑌣𑍍𑌡𑌵𑌖𑌣𑍍𑌡𑌨𑌾
𑌹𑍍𑌵𑌯𑌕𑍃𑌤𑌿𑌂 𑌕𑌾𑌵𑍇𑌰𑍍 𑌪𑍍𑌰𑌮𑍋𑌣𑌾𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌾𑌤𑍍॥

அதில் முதல் பாகம்

பேரருளாளன் பெருமை விளக்கம்.

𑌶𑍍𑌰𑍀 𑌹𑌸𑍍𑌤𑌿𑌶𑌿𑌖𑌰𑌿𑌶𑌿𑌖𑌰𑍇 𑌵𑌿𑌰𑌾𑌜𑌮𑌾𑌨𑍋 𑌮𑌹𑌾𑌹𑌕𑍋 𑌦𑌿𑌵𑍍𑌯𑌃।
𑌮𑌷𑍍𑌟𑌤𑌾 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑍋 𑌮𑌯𑌿 𑌵𑌿𑌶𑍍𑌰𑌂𑌭𑌮𑍋𑌤𑍍𑌸𑌵𑌿𑌷𑍍
𑌵𑌿𑌮𑍋𑌦𑌯𑌤𑍁𑌵𑌿𑌸𑌾𑌯𑌾𑌤𑍍॥

𑌶𑍍𑌰𑍀 𑌹𑌸𑍍𑌤𑌿𑌗𑌿𑌰𑌿𑌶𑍃𑌙𑍍𑌗𑌮𑌾𑌨𑌸𑌦𑍍𑌮𑌾𑌨𑍈𑌃
𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍍𑌹𑌾𑌮𑌨𑌿𑌹𑌿𑌮𑌹𑌾𑌤𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌰𑌤𑍍𑌨𑍈𑌃!
𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌸𑌿𑌤𑌾𑌨𑍍𑌯𑌦𑌯𑌮𑌾𑌜𑍍𑌞𑌮𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌂
𑌦𑍇𑌵𑌾𑌧𑌿𑌰𑌾𑌜𑌮𑌨𑌿𑌶𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌭𑌾𑌵𑌯𑍇𑌯𑌮𑍍॥

𑌶𑍍𑌰𑍀 𑌮𑌦𑌹𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍁𑌰𑌸𑍍𑌥𑌿𑌤 𑌶𑍇𑌟𑍍𑌲𑍂𑌰𑍍 𑌨𑌰𑌸𑌿𑌂𑌹
𑌸𑍂𑌰𑌿𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌤𑌮𑍍। 𑌦𑍇𑌵𑌾𑌧𑌿𑌰𑌾𑌜 𑌪𑌰𑌣𑌾𑌵𑌚𑌾𑌰 𑌦𑍂𑌷𑌿𑌤𑌂
𑌮𑌯𑌾 𑌵𑍍𑌯𑌾𑌦𑍂𑌷𑍍𑌯𑌤𑍇॥

அவதரணிகை.

திருவயிந்திரபுரத்தில் வாழும் சேட்லூர் நரஸிம்ஹாசாரியார் ஸ்வாமிகள் ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனுடைய திவ்ய ஸ்ரீஸூக்திகளுக்கு மொழி பெயர்ப்பாகவும் உரையாகவும், மற்றும் ஸ்வதந்திரமாகவும் சில நூல்களை யெழுதி அச்சிடுவித்து வெளியிட்டுள்ளாரென்பது பலருமறிந்ததே. இவருடைய வெளியீடுகளில் பண்டிதர்களுக்காவது பாமரர்களுக்காவது உபகாரகமான அம்சம் அணுமாத்திரமுமில்லை யென்பதை விவேகிகள் பலரும் நன்கு அறிந்தேயுள்ளார்கள்.

ஆனால், ஏதோ வொரு த்வேஷத்தையோ ஆக்ரஹத்தையோ நெஞ்சிற்கொண்டு இங்ஙனம் நாம் எழுதுவதுபோல் சிலர் நினைக்கலாம். உண்மையில் அப்படிக்கு இல்லை. இவருடைய ஒவ்வொரு நூலையும் எடுத்துக்கொண்டு ஒவ்வொரு வரியிலும் ஒவ்வொரு பதத்திலும் ஒவ்வொரு அக்ஷரத்திலும் உள்ள அவத்யங்களை (அல்லது அஸாரத்தன்மையை) நான் எந்த ஸதஸ்ஸிலும் நிரூபிக்க முன்வருவேன். அதில் சிறிதும் கூச்ச முடையேனல்லேன். * விதிவாய்க்கின்று வாய்க்குங்கண்டீர்.

பெரிய பெரிய க்ரந்தங்களுக்கெல்லாம் இவர் தமிழில் மொழி பெயர்ப்பு எழுதி வெளியிட்டுவிடத் துணிவுகொண்டுள்ளார். அந்த மொழிபெயர்ப்புகளை ப்ராஜ்ஞர்கள் படித்துப் பார்க்குமிடத்து "அந்தோ! இவ்வகையான காரியத்தில் இந்த ஸ்வாமி தலையிடாதிருந்தால் இவரை பஹுப்ராஜ்ஞராகவே உலகம் ஸ்துதித்தேயிருக்க ஸௌகர்யமாயிருக்குமே! ஐயோ, அநியாயமாய் தம்மைத் தாமே குறைத்துக்கொள்ளுகிறாரே!" என்று அநுதபிக்கத்தான்நேருகிறது.

கீதாபாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகா, ஸ்தோத்ரபாஷ்யம், ஈசாவாஸ்ய பாஷ்யம், ஶததூஷணீ, ஸச்சரித்ரரக்ஷா, ஸங்கல்பஸூர்யோதயம் என்றிப்படிப்பட்ட பெரிய திவ்யக்ரந்தங்களுக்கு இவர் எழுதி

வெளியிட்டிருக்கும் மொழி பெயர்ப்புகளை நோக்கினால் மூலத்தில் ஒரு வாக்யத்தினுடைய தாத்பரியமும் இவருடைய புத்திக்கு ஹோவஹிக்கவேயில்லையென்பதும், ஹிரவெண கூநுஷாஹரஹண மே அளவற்றதென்பதும் ஸ்பஷ்டமாக விளங்குகின்றது.

'காடிக்குப் பிடித்தவிடமெல்லாம் மயிர்' என்பதுபோல் இவருடைய நூலில் எந்த இடத்தை நாம் எடுத்துக்கொண்டாலும் மேற்கூறிய விஷயங்களை அங்கு நன்கு மூதலிக்கலாம். ஸாதாரணமாகக் காவ்யம் வசனம் வாசித்தவர்கள் எளிதாகத் தெரிந்துகொள்ளக்கூடிய இடங்களில் இவருடைய மொழி பெயர்ப்பு ஒருவாறு இணங்குகின்றது என்று கொண்டாலும், எந்த இடங்களுக்கு அர்த்தம் புரியவேண்டுமென்று நாலுபேர் எடுத்துப் பார்க்க நேருமோ அந்த இடங்களில் தெளிவு பெறுவிப்பதென்பது லவலேசமுமில்லை. 'எழுதுவதற்கு ஸாமக்ரீ—காகிதமும் மசிக்கூடும் பேனாவுந்தானே' என்று இந்த ஸ்வாமி நினைத்துவிட்டாரேயல்லது, அது ஒரு விலக்ஷணபாண்டித்ய க்ருத்யம் என்று சிறிதும் நினைத்திலர். தமிழிலக்கண இலக்கியங்களில் சிறிதும் பிரவேசமின்றியே தமக்குத் தோற்றினவாறெல்லாம் சொற்களைச் சொரிந்து புத்தகங்களை வெளியிட்டுவிடுவது இந்த ஸ்வாமிக்கு அஸாதாரணமான இயல்பு. ஒன்றுபாருங்கள்; இவருடைய எந்த நூலையெடுத்தாலும் பரப்ரும்மம், ப்ரும்மா, ப்ரும்மசாரி, ப்ரும்மவித்யை என்கிற பதங்கள் பல்லாயிரந்தடவை காணப்படும். இன்றைக்கும் நாளைக்கும் இவர் ப்ரும்மம், ப்ரும்மம் என்றே எழுதுகிறவரேயன்றி, இந்த பதத்தின் ஸம்ஸ்க்ருத ஸ்வரூபம் என்ன? இதைத் தமிழில் எழுத வேண்டிய முறைமை என்ன? இதில் ரு என்னுமெழுத்திற்கு என்ன ப்ரஸக்தி? இத்யாதிகளைச் சிறிதும் ஆலோசிப்பவரல்லர்; ஆலோசிக்க ஸ்வரூப யோக்யதையுடையவருமல்லர். இந்த ஒரு விஷயத்தைக்கொண்டே இவருடைய வைதுஷ்யத் திறமையைப் படிகண்டறியலாம்.

சேத்தான் சேற்றான், எத்தினன் எற்றினன் என்பன போன்ற ஸாதாரண பதங்களின் வாசியையும் இவர் அறியார். இதற்கெல்லாம் நாம் உதாரணங் காட்டப்புகுதல் வீண்காரியம். இத்தகைய

வழுக்கள் இவரது நூல்களில் கொள்ளை கொள்ளையாகக் காணக் கிடைக்குமன்றே. ஆனாலும் ஒரு உதாரணமாவது காட்டாவிடில் தடஸ்தர்கள் இசையார்களே. காண்மின்; இப்போதுவெளி வந்துள்ள இவரது ஹஸ்திகிரிமாஹாத்மியப் பதிப்பில் * மெய் விரத நன்னிலத்து மேன்மை யேற்றி என்ற மூலப்பதிப்பும், ஏற்றி-ஸ்தோத்திரஞ் செய்து என்ற விவரணமும் ஸூாஸ்ரீவஷாகநீத்ரா காணத்தக்கன. ஏற்றி என்றால் 'ஆரோபணஞ்செய்து' எனப் பொருளாகுமேயன்றி 'ஸ்தோத்திரஞ்செய்து' என்று ஒருபோதும் பொருள்படாது. இவைபோல்வன பலகோடி நூறாயிரம்.

இவர் தம்முடைய ஸொந்த வாக்குக்களை எப்படியாயினும் எழுதிக்கொள்க; அருளிச்செயல்களை உதாஹரிக்குமிடங்களில் காணும் விபரீதங்கள் வரம்பிலடங்கா. இதற்கும் ஒன்று காட்டுவோம்:—மேற்குறித்த பதிப்பிலேயே (பக்கம் 83ல்) திருவாய்மொழிப் பாசுரத்தை * எண்ணாதனகளெண்ணும் நன்முனிவரின்பம் தலைச் சிறைப்ப-என்று காட்டியிருக்கிற வெட்கக்கேடென்னே!. யார்தலையைச் சிரைப்பதாக $ இவர் தாம் அர்த்தம் செய்துகொண்டாரோ அறியோம். தேசிகனது வாழி திருநாம மோதும்போது இவர் "திருமலைமால் திருமணியாய்ச் சிறைக்கவந்தோன் வாழியே" என்று ஓதுகிறாரே! கேட்கப் பிடிக்கவில்லையே! என்று ஒருமஹான் அடிக்கடி வருந்திக் கூறுவதுண்டு. அதனை அதிவாதமென்று நம்பாதிருந்த நம்மை, மெய்யேகாணென்று இவர்தாமே நம்புவித்துவிட்டாரின்று. இவ்வளவு மோசமான மஹாநுபாவர்க்கு 'பகவத்விஷயம்' உபநாமமாம். இதெல்லாம் ஒருபுறமிருக்கட்டும்.

எழுதுந்திறத்தில் ஸம்ப்ரதாய க்ரந்தநடை யென்பது இவர்க்குக் கனவிலுங் கண்டறியாததென்னுமிடம் புநருக்தம். சுதேசமித்திரன், ஆனந்தபோதினி முதலிய பத்திரிகைகளிலும், மோஹ

$ * செருக்குற்றான் வீரஞ்சிதையத்தலையைச் சிரைத்திட்டான் வன்மையைப் பாடிப்பற என்ற பெரியாழ்வார் திருமொழியும் * காம்பறத்தலை சிரைத்து என்ற திருமாலையருளிச்செயலும் இந்தஸ்வாமியை இங்ஙனே மயங்குவித்தனபோலும்.

னுக்கி, மனோன்மணி போன்ற நாவல்களிலுமே பழக்கமென்று காட்டவல்ல பதங்களை இவரது நூல்களில் மிகமிகவுளவாம். சிறந்த ஸம்ப்ரதாய நூல்களில் சிறிதும் புகத்தகாத க்ராம்யமான—ஜுகுப்ஸிதமான—நீசமான—சொற்களைக்கொண்டே இவரது நூல்கள் நிரப்பப்பட்டுள்ளன. ஒன்று காட்டுவோம் காண்மின்;—இவரது ஸங்கல்ப ஸூர்யோதய மொழி பெயர்ப்புப் பதிப்பில் (பக்கம் 169ல்) "விரக்திம் பந்தீக்ருத்ய" என்கிற மூலத்திற்கு "விரக்தியைப்பிடித்து ஜெயிலில் வைப்பதற்காக" என்றெழுதியுள்ளார். க்ரந்தமோ பரம பாவநமான வேதாந்த விழுப்பொருள் விளக்கநூல். காலக்ஷேப க்ரந்தமாகவும் பாராட்டப்படுமது. இதில் இத்தகைய நீச பாஷை யை உபயோகிக்கிறோமே யென்று இவர் சிறிதேனும் வெள்க வில்லையே. பள்ளிப்பிச்சான் சுவடிகளிலாவது இப்படிப்பட்ட சொற்பிரயோகத்தைத் தேடிப் பிடித்தாயினும் இவர் காட்டுவாரா? சிறையில் என்றெழுதினல் கை வேகுமோ? பகவத்விஷயம் என்று நிரர்த்தகோலாஹலத்தைக் கூட்டிக்கொள்ளுமிவர்க்கு இத்தகைய சொற்கள் எந்த பகவத்விஷயத்தில் கிடைத்தனவோ அறியோம். இப்படிப்பட்ட துஷ்டஶப்தப்ரயோகங்களை இவரது நூல் களில் ஆயிரக்கணக்காகவே காட்டுவோம். விரைவில்தானே ஸம யம் வாய்க்கும்.

மூலத்தின் பொருளை விபரீதமாகவே காட்டுந்திறமும் இவரது மொழிபெயர்ப்பில் மிக மிகவே மிடைந்துளது. இதற்கும் ஒன் றிரண்டு உதாரண முரைப்போம்;—அதே ஸங்கல்ப ஸூர்யோதய மொழிபெயர்ப்பு நூலில் (பக்கம் 161ல்) "ஹந்த! பரிக்ருஹீத பௌண்ட்ரகதேவதாநுஜீவிஷு" என்ற மூல ஸ்ரீ ஸூக்தியை மொழி பெயர்க்கிறார் காண்மின்;—"பௌண்ட்ரக வாஸுதேவன் போன்ற அத்வைதிகளான இவர்களால் பரிக்ரஹிக்கப்பட்ட" இத் யாதி. அஹஹ! என்ன மொழிபெயர்ப்பு வல்லமை! என்ன வ்யுத்பத்திஸௌஷ்டவம்! என்ன விவேசந சாதுர்யம்! என்ன ஸிம்ஹாவலோகந நைபுண்யம்! என்ன ஸ்வாபிப்ராய நிர்வசந வைசித்ர்யப் பெருமை! * வெள்கிப்போய்த் தம் முள்ளே தாம் விலவறச் சிரித்திடாரோ?

இங்கே மூலத்தில், 'பரிக்ருஹீத' பதம் உள்ளது; 'பரிக்ர ஹிக்கப்பட்ட' என்று அதற்கு அர்த்தம் எழுதிவிட்டார். "ஐகாத்ம்யவாதிநாம்' என்கிற மூலத்திற்கு 'அத்வைதிகளான' என்று அர்த்த மும் எழுதிவிட்டார். அந்தோ! எந்த பதம் எங்கே அந்வயிக்கிறது. என்று இறையேனுமாராய்ந்திலரே? "பௌண்ட்ரகனோடு ஒற் றுமை பெற்றிருக்கின்ற இவர்கள் (தம்மை) நித்யமுக்தரென்று சொல்லிக்கொள்வது........" என்று எழுதியிருந்தாலன்றோ ஏற்கும். இவரது நூலில் ஒவ்வொரு வரியும் இப்படி நாம் திருத்திக்காட்ட வேண்டிய இடங்கள்தான். ஸச்சரித்ரரக்ஷையில் (இவருடைய பதிப்பில் பக்கம் 196ல்) "தச் ச ஶ்வத்ருதிப்ராஹ்மணீஸுராபா நாதிவச் சவந்யாயஸித்தக்ஷாச் சநாதநமணீயம்" என்ற மூலத் திற்கு—"அது நாய்க்கொடையை சாப்பிடுவது ப்ராம்மண ஸ்திரீ கள் ஸுராபானம் செய்வது முதலியவற்றைப்போல........" என்று இவர் மொழிபெயர்ப்பு எழுதியிருப்பதைக் காணுங் கண்ணுடை யோர் 'எதுக்கு இப்படி உலகத்தை வஞ்சிக்கவேண்டும்!' என்று வருந்தாதாராருமிலர். இப்படி நாம் சில சில இடங்களைக் குறிப் பாக எடுத்துக்காட்டுவது கொண்டு 'ஏதோ சில இடங்களில்தான் தவறுபோலும்; தேடிப்பிடித்துக் காட்டவேண்டியதாகத் தானே யிருக்கிறது' என்று சிலர் நினைக்கலாம். பெருமோசம் என்னத் தக்க இடங்கள் இவைபோல்வன பதினாயிரம்.

சததூஷணி முதலான க்ரந்தங்களுக்குக் கூசாமல் இவர் எழுதியுள்ள மொழி பெயர்ப்பை யெடுத்துக்கொண்டாலோ வெகு ஆச்சரியம். ந்யாயஸித்தாஞ்ஜநம், ஸ்ரீபாஷ்யம், தத்வடீகா, ந்யாய பரிசுத்தி முதலிய ஸகலசாஸ்த்ரக்ரந்தங்களையும் இந்த ஸ்வாமி மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கலாமே. தர்க்கதர்க்கஷட்ய வாதவாரணவாரீணஃ என்ற விருதையும் கூட்டிக் கொள்ளலாமே. அந்த மொழி பெயர்ப்புக்களுக்காக இவர் சிறிதும் கஷ்டப்பட வேண்டியதுமில்லையே. "ஸர்வமேவேதம் ஜகதநாதி அவித்யாயாம் ப்ரஸம்ஸக்தம் ஸம்ஸக்தஸ்ய ஸாஸநம் ஸாக்ஷாத் " என்பது வ்யுத்பத்திவாதத்தின் முதல்வாக்யம்: இதற்கு—"ஸர்வத போதத்திலும் ஒரு பதார்த்தத்தில் வேறு பதார்த்தத்தினுடைய

ஸம்ஸர்க்கமானது ஸம்ஸர்க்க மரியாதையினால் பாஸிக்கின்றது" என்று இவ்விதமாகவே முழுதும் எளிதாக மொழிபெயர்ப்பு எழுதி விடலாமன்றோ.

இப்படியே, "அநுமிதிகாரணீபூதாபாவ ப்ரதியோகி யதார்த்தஜ்ஞாந விஷயத்வம் ஹேத்வாபாஸத்வம்" இத்யாதிக்கும்— "அநுமிதிக்குக் காரணமாகிய இல்லாமைக்குப் பிரதியோகியான உண்மையுணர்வுக்கு இலக்காயிருக்கை ஹேத்வாபாஸத்தன்மை" என்று இவ்விதமாய் தாராளமாகவே கடகடவென்று ப்ராசீந வாக்யங்களுக்கும் தர்ஜிமா எழுதிவிடலாமன்றோ? இப்படி ஸகல சாஸ்த்ர க்ரந்தங்களையும் அவலீலையாக மொழிபெயர்த்து இந்த ஸ்வாமி அச்சிட்டுவிட்டால் ஸர்வஜ்ஞத்வம் ஸித்திப்பதோடு அடியேனைப் போன்ற அல்பஜ்ஞர்களும் ஒருவரிடத்தும் தலைகுனியாமல் அநாயாஸமாகவே எல்லாம் தெரிந்துகொள்வோமன்றோ. ஆரியர்காள்! இப்படி நாம் எழுதுவதன் கருத்தை உணர்வீரோ? ஒருவர்க்கும் பயன்படாததும், பெரும்பாலும் விபரீதார்த்த ப்ரதீதியை விளைவிப்பதும், ஸ்ருஷ்டிபோலெழுதவேண்டிய வைவரிக்குச் சிறிதும் ஒவ்வாததுமான நடையில் இரவும் பகலுமாய்ப் பல்லாயிரக்கணக்கான காகிதங்களைக் கறுப்பாக்கிப் பதினாயிரம் ரூபாய்களுக்கு மேற்படவே செலவு செய்து இத்தகைய புத்தகங்களை வெளியிடுவதிற் காட்டிலும் உள்ளடங்கிக் கிடக்கின்ற எத்தனையோ அரும் பெரு நூல்களை வெளியிடும் மஹா கைங்கர்யத்தில் அந்த த்ரவ்யங்களை விநியோகித்திருந்தால் ஐஹிகாமுஷ்மிக ஆநந்தம் அளவற்றதாகுமே! அந்தோ! அத்தகைய லோகோபகாரத்தில் கண்ணோட்டமில்லையே! ஸ்வகாவ்யமஹிமாபிமாநமத்தர்களால் வீணாக உலகம் வஞ்சிக்கப்படுகின்றதே! என்ற நிர்வேதமே எம்மை இங்ஙனம் எழுதுவிக்கின்றது.

இந்த ஸ்வாமி சில ஸம்வத்ஸரங்களுக்கு முன்பு இப்படிப்பட்ட க்ரந்தங்களை யெழுதி வெளியிட்டுக்கொண்டிருந்து, ஒரு ஸமயத்தில் ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியினால் மறுப்பாக எழுதப்பட்ட சில ஸஞ்சிகைகளைப்பெற்றுத் தம்முடைய தவறுதல்களுக்கு அநுசயித்து இடையில் தத்ஸம்ஸர்க்கத்தைக்

கரியத்தை ஏற்றுக்கொண்டிருந்து, மீண்டும் ‘[illegible] பாங்காயிருக்கிறதா பார்ப்போம்’ என்று பரீக்ஷித்துப் பார்த்துக் கொள்பவர் போன்று இப்போது இரண்டு க்ரந்தங்களை அச்சிடுவித்து வெளியிட்டுள்ளார். (1) ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனருளிச்செய்த ஹஸ்திகிரி மாஹாத்மியத்திற்கு உரை என்பது ஒரு நூல். (2) ‘தேசிகனும் அவருடைய ஸ்ரீஸூக்திகளும்’ என்பது மற்றொரு நூல். இவற்றுள் ஹஸ்திகிரி மாஹாத்மியவுரை இவர் தம்மாலேயே இயற்றப்பட்டதாக வெளிவந்துள்ளது. அடுத்தநூல் இவர் உபந்யஸித்த வார்த்தைகளை இவருடைய மாணுக்கரொருவர் எடுபடுத்தி வெளியிட்டதாகவுள்ளது. அதிலுள்ள விஷயங்கள் முழுவதும் இந்த சேட்லூர் ஸ்வாமியின் உக்திகளே யென்பது அதில் ஸ்பஷ்டமாகக் காட்டப்பட்டிருக்கிறது. நிற்க.

தேசிகனுடைய திவ்யஸூக்திகளுக்கு வியாக்கியான மெழுதுவதிலும் தேசிகனுடைய பெருமைகளைப் பன்னியுரைப்பதிலும் நமக்கு யாதொரு விப்ரதிபத்தியுமில்லை. மேற்கண்ட இரண்டு விஷயங்களிலும் நாம் இவரைவிட மிகையாகவே உத்ஸாஹமுடையோம். இவருடைய ப்ரவ்ருத்தியானது எதிலும் [illegible]வாகச் செல்லுமதன்று. இதர தூஷணத்திலேயே முக்கிய நோக்காக இவர் நூலியற்றுமியல்புடையார். பிரகிருதம் ப்ரஸ்தாவிக்கப்பட்ட இரண்டு க்ரந்தங்களும் முறையே ஸ்ரீ[illegible]ராஜனை பேரருளாளனையும் தென்னாசார்யர்களையும் தூஷிப்பதற்காகவே பிறந்தவை. அந்த தூஷணங்களைத் தூக்கி யெறிவதற்காகவே இப்போது நமது ப்ரவ்ருத்தி.

‘[illegible]த்தாலோ [illegible]நிவேசத்தாலோ ஸாஹஸமாக நாம் எதையாவது எழுதிவிட்டால் உடனே நம்மைத் தகர்க்க வல்ல மஹான்கள் பலருள்ளர்’ என்று இவர் தாம் அறிந்துவைத்தும் [illegible]களான [illegible]க்திகளை இவர் கூசாமல் எழுதி வெளியிட்டுவிடுவது இன்னமும் இவருடைய பரிஹாஸ்யத்தையை ப்ரகாசப்படுத்திக்கொள்வதற்கு உறுப்பாகின்றதேயன்றி வேறில்லை. ஏற்கனவே இவருடைய [illegible]க்திகளுக்கு ப்ரத்யக்ஷா

வஞ்சநமாக ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் வெளியிடப்பட்டுள்ள சேஷாவதாரச் சிறப்பு, ஹேத்வாபாஸநிரஸநம், வாதஹ்ருதய விவரணம் முதலிய நூல்களால் இவருடைய பாண்டித்யப் போக்குகள் வெகு விரிவாக விவரிக்கப்பட்டிருக்கின்றனவென்பது நாடு நகரமும் நன்கறிந்ததே. எம்பெருமானாருடைய சேஷாவதாரத்வம் உபப்ரும்ஹண நூல்களிலும் கோஷிக்கப்பட்டிருக்க, ஒரு நூலையும் பாராமல் தப்புந் தவறுமாய் எழுதினதற்குப் பெற்ற ப்ரதிநாமம் சேஷாவதாரச்சிறப்பு. இதன் மேல் என்றைக்காவது வாய் திறக்கவுண்டோ வழி. 'இவர்க்கு ஸாஹித்யவ்யுத்பத்தியும் ஸ்வல்பம்' என்று முதலில் ஸவிஸ்தரமாக நிரூபித்துள்ளதற்கு எந்த ஜந்மத்திலாவது ஸமாதாநம் கிடைக்க வகையுண்டோ?

ஸ்ரீ தேசிகனது ஸ்தோத்ர பாஷ்யத்தைத் தமிழில் மொழி பெயர்த்தவிவர் அதன் முடிவில் "ஸ்ரீஸ்தோத்ரரத்னத்தில் சில ஆக்ஷேபஸமாதானங்கள்" என்ற அஸங்கதமான மகுடமிட்டுப் பெரியவாச்சான்பிள்ளையின் ஸ்தோத்ரரத்ந வியாக்கியானத்தில் ஆறு தூஷணங்களெழுதினர். அந்த ஆறும் ஸ்வநாஶநிபந்தநமென்பதை அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அற்புதமாக நிரூபித்துள்ளார். அதுதான் ஹேத்வாபாஸஶோதநம். அந்த க்ரந்தத்தில் இவர் படுகிற பாட்டுக்கு வாலியின் கக்ஷத்தில் இராவணன் நெருக்குண்டுபட்ட பாடுதான் உவமை கூறத்தகும். 'பெரியவாச்சான்பிள்ளை ஸகலவேதாந்தஸாரஸங்க்ரஹமாக ஓரிடத்தில் வியாக்கியானித்தார்' என்று தூஷித்தவிவர் ஶாஸ்த்ரஜ்ஞவேதஜ்ஞரென்றும் ஒன்றையாவது இவர் நேராகவுணர்ந்தவரல்லரென்றும் நிரூபிக்கப்பட்டு ஸவிஸ்தரமாக எழுதியிருக்கிற அந்த க்ரந்தத்திற்கு இவர் 'ஸ்வேநைவ தேந ஸஹாதேநாதி' என்றிருக்குமிருப்பொழிய வேறு ஏதேனும் ப்ரதிக்ரியையை எற்றைக்கு மேலேழ்பிறவிக்கும் செய்பவரல்லரன்றோ.

ஸ்ரீ தேசிகனுடைய ஸஹஸ்ரத்தை மொழிபெயர்த்தவிவர் அதன் முகவுரையில் ஸ்ரீ ஶ்ருதப்ரகாஶிகாசார்யரை ஸத்ராஜ

ணிகளென்று கைகூசாமல் எழுதிவைத்து ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின் வாத்ஸல்யாய விவரண ஸஞ்சிகையினால் தகர்ப்புண்டவாறு நெஞ்சால் நினைப்பரிதால். இங்ஙனே பட்டுக்கிடந்த பெரியாரிவர் ஸரோஷிபோடே காலங்கழித்துப்போந்து மீண்டுமந்தோ படவிழிந்தார். ' அநதிஶங்கநீயா ஹி பவதீ பவிதவ்யதா॥

உத்தரதாரணிகா.

ஸ்ரீ தேசிகனுடைய ஹஸ்திகிரிமாஹாத்ம்ய ரஹஸ்யத்திற்கு இவருடைய வியாக்கியானமென்று ஒரு சிறுபுத்தகம் சென்ற வாரத்தில் வெளிவரக் கண்டோம். இந்த ஸ்வாமிக்குப் பேருளாளனிடத்தில் நெடுநாளாகவேயுள்ள த்வேஷந்தானே இப் புத்தகரூபமாக வடிவெடுத்து வெளிவந்ததுபோலும்! என்று பல மஹான்கள் பேசிக்கொண்டார்கள். இப்புத்தகத்தில் பேருளாளனுடைய தூஷணந்தவிர வேறொன்றும் இவர்க்கு விவக்ஷிதமன்று. ஸ்ரீ தேசிகனுடைய திவ்ய ஸூக்திகளுக்கு வியாக்கியானமெழுதுகிறேனென்றால் பதார்த்த வாக்யார்த்த ஸம்க்ஷேபார்த்த தாத்பர்யார்த்த பாவார்த்த விஶிஷ்டார்த்த ஸ்பஷ்டார்த்த விக்ரஹார்த்த நிஷ்கர்ஷிதார்த்த பதப்ரயோஜந பதஸ்வாரஸ்ய வாக்யஸ்வாரஸ்ய ஸம்ப்ரதாயதாஶிகாஶங்கா ஸமாதாநாத்யஶேஷ விஶேஷ பரிவேஷமாக எழுதுவதன்றோ உசிதக்ரமம். அப்படிப்பட்ட விசேஷங்களில் ஒன்றையாவது உரையாமல் ஏற்கனவேயுள்ள வியாக்கியானங்களில் சில மாறுதல்களைச் செய்து பகுதி விகுதி பகுத்துணர்வுமின்றியே பதங்களை யெழுதி ஏலாதபொருள்களை யிட்டெழுதிவைக்கின்றார். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்திற்கு இவர், தம்முடைய வியாக்கியானமாக ஒரு பெருஞ்சுமைச் சுவடி பதிப்பித்துள்ளார். ஒவ்வொருவரும் அதையெடுத்துக் காணலாம். மூலத்திலுள்ள ஒரு ஸூக்திக்காவது மெய்ப்பொருள் எழுதிற்றுண்டோ? உதாஹ்ருதஶ்லோகங்களுக்கும் சூர்ணிகைகளுக்கும் பதவுரை யெழுதிவிட்டு, மூலத்திலுள்ள [பரிஹவம், விஸ்தரணம், விவக்ஷிதம்] என்றும் போலுள்ள பதங்களுக்கு யாருக்கும் பொருள் தெரியாதென்று

கொண்டு அப்படிப்பட்ட பதங்களுக்கு [ஷட்:—ஸம்பந்தீ ரஹஸ்ய வாத் ஸ்ரீ நிதிபாவக என்னுமிடையிலே] வெகு சிரமப்பட்டுப் பொருள் விளக்கிவிட்டு ஷஷ்டவ்யாக்யாதாவாகின்றார். ஸ்ரீபாஷ்யத்தில் உதாஹரித்துள்ள உபநிஷதாதி வாக்யங்களுக்கும் மற்றுஞ் சில பதங்களுக்கும் அர்த்தம் எழுதிவிட்டு நானும் ஸ்ரீஹர்ஷவ்யாக்யாதா வென்று பெயர் பெறலாம் போலும்.

ஆரியர்காள்! இந்த ஸ்வாமி, வியாக்கியானங்களையோ மொழி பெயர்ப்புகளையோ எவ்விதமாகவேனும் எழுதிக்கொள்ளட்டும்; எந்த உபாகளையாவது பெறட்டும்; அவற்றில் நமக்குக் கண்ணோட்டம் சிறிதுமுண்டாக ப்ரஸக்தியில்லை. உலகில் எத்தனையோ பேர்கள் எத்தனையோ நூல்கள் எழுதி வெளியிட்டுக்கொண்டிராநின்றார்கள். அவற்றிலெல்லாம் குற்றங்குறை கூறிக்கொண்டிருக்கவோ சொத்தல் புழுத்தல்களைச் சொல்லிக்கொண்டிருக்கவோ யாருக்குக் கர்மச்ரத்தை. இந்த ஸ்வாமி தாமும் தமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயங்களை ஒருமரியாதையிலே நிறுத்திக்கொண்டு தமது அதிகாரத்திற்கு எவ்வளவு உசிதமோ அவ்வளவோடு நின்றால் இவருடைய சாயங்களை வெளியிட யார் முன்வருவார்? விரலுக்குத் தகாத வீக்கத்தை இவர் ஏற்றுக்கொள்ளவேயன்றோ இவருடைய சரக்கு இத்தகைத்தென்பதை வ்யுத்பந்நர்களுக்கு எடுத்துக்காட்டவேண்டிய ஆவஸ்யகதை நேர்ந்ததெமக்கு.

ஸ்ரீதேசிகனுடைய ஹஸ்திகிரிமாஹாத்மிய திவ்ய க்ரந்தத்திற்கு அவசியம் எழுதவேண்டிய ஸந்தர்ப யோஜந ஸந்தர்ப்பார்த்த விசேஷார்த்தாதிகளை வெகுதூரத்தில் விலக்கிவிட்டு, தேவப்பெருமாளுக்கு ஆழ்வார்பாடல் கிடையாது என்பதைப் பெரிய விஷயமாக வைத்துக்கொண்டு அஸந்தர்ப ஸம்ரம்பம் செய்யப் புகுந்தார். ஆழ்வாரருளிச்செயல்களிலும் அவற்றின் வியாக்கியானங்களிலும் இவர்க்கு எவ்வளவு அவகாஹநமென்பது இதில் விளங்காநின்றது. இவருடைய ஸௌவதீயதையைப் பன்னியுரைப்போமிங்கு.

இந்த சேட்லூர் ஸ்வாமி மேற்குறித்த புத்தகத்தில் (பக்கம் 3ல்) எம்பெருமானுடைய க்ஷேத்திரங்களுக்குச் சில வகைகளிட்டு

விபாகஞ் செய்துகொண்டு போய், திருக்கோவலூர், ஸ்ரீரங்கம், திருவகிந்திரபுரம், திருக்குடந்தை என்ற நான்கு திவ்ய தேசங்களைச் சிறப்பித்தெழுதி, அதற்குமேல்,—

"இப்படி நம் பூர்வாசார்யர்களுக்கு விசேஷ உபகாரம் செய்தருளிய ஆகாரத்தினாலே திவ்ய தேசங்களுக்கு ஒரு பெருமை எற்பட்டாப்போலே திவ்ய தேசங்களல்லாத க்ஷேத்திரங்களில் சில நம் ஆசார்யர்களால் அங்கு தங்களுக்கு உண்டான விசேஷ பகவத் கடாக்ஷத்தை முன்னிட்டு பஹுமானிக்கப்பட்டிருக்கும். அவைகள் காஞ்சீபுரம் மதுராந்தகம் திருநாராயணபுரம் முதலியவையாகும்"

என்று ஸ்ரீகாஞ்சியை ஆழ்வார் மங்களாசாஸநமற்ற க்ஷேத்திரமாக ஸ்தாபித்து அதற்குமேல்,—

"இவற்றில் முதலில் சொல்லப்பட்ட க்ஷேத்திரத்திற்கு ஹஸ்திகிரி என்கிற மற்றொரு திருநாமம். ஹஸ்திகிரி க்ஷேத்திரம் பூதத்தாழ்வாராலும் கலியனாலும் மங்களாசாஸநம் செய்யப்பட்ட வற்றம் பெற்றதாயிருந்தபோதிலும் அந்த மங்களாசாஸனம் அங்கு மலையடிவாரத்தில் ஸேவை ஸாதிக்கும் அழகிய சிங்கர் விஷயம் என்றும் ஸ்ரீ தேவாதிராஜன் விஷயமானதல்ல என்றும் பூர்வர்கள் நிஷ்கர்ஷித்தார்கள். ஆகிலும் சிலர் அந்த மங்களாசாஸனம் ஸ்ரீ தேவராஜனைப் பற்றியது என்று நிர்வஹிக்கப் பார்க்கிறார்கள். இது உசிதமல்ல. ஏனெனில் ஸ்ரீ தேசிகன் தாமே ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்தில் 'யஸ்ா நாஹா வஶயிமஞாஶேஷஷைவனொ ஶாஹஸ்ஸஶ்ுஹஂமாயி யொ ஶாமிஸாவஹளஶஃ' என்று அருளிச்செய்திருக்கிறார். ....ஆழ்வார்களும் ஸ்ரீதேவாதிராஜனைப் பார்த்து அவருடைய வடிவழகில் ஈடுபட்டு மோஹத்தையடைந்தபடியினால் அவர் விஷயமாகக் கவிபாடினார்களில்லை. அதாவது ஆழ்வார்களின் மங்களாசாஸநம் ஸ்ரீதேவப் பெருமாளுக்கு இல்லையென்பதை இப்படி நிரூபித்தருளினாராயிற்று."

என்று வரைந்துள்ளார். அந்தோ! இவருடைய ஔாஹஸ ஜ்ஞாந விஜ்ரம்பிதங்களை என் சொல்லுவோம். பூதத்தாழ்

வாருடையவும் கலியனுடையவும் பாசுரங்கள் தேவப்பெருமாள் விஷயமல்லவென்று பூர்வர்கள் நிஷ்கர்ஷித்தார்களென்றெழுதா நின்ற இவர் எந்த பூர்வர் எந்த நூலில் எந்த பாசுரங்களைக்குறித்து என்னவிதமாக நிஷ்கர்ஷித்துள்ளார் என்பதை விளக்கிக் காட்டக் கடமைப்பட்டவரன்றோ. இவருடைய அகாண்ட தாண்டவங்களுக்கு எல்லாரும் தலை துலுக்கிவிடுவார்களென்று இவரது கருத்துப்போலும். ஒரு பூர்வரும் அப்படி எங்கும் நிஷ்கர்ஷித்ததில்லை. ஒருதலை, 'தேவப்பெருமாள் விஷயமே இப்பாசுரங்கள்' என்று பூர்வசார்யர்கள் வியாக்கியானங்கள் அருளிச் செய்துள்ளார்கள். விளக்கிக்காட்டுகிறோம், கண்ணுடையீர்! காண்மின்;—

பூதத்தாழ்வாரருளிய இரண்டாந் திருவந்தாதியில் (95, 96 பாசுரங்களில்) * உலகேத்துமாழியான் அத்தியூரான் என்றும், * அத்தியூரான் புள்ளையூர்வான் என்றும் உள்ள ஸ்ரீஸூக்திகள் தேவபிரானையன்றி மற்று எந்த மூர்த்தியையும் ஸ்பர்சிக்க விரகில்லை. பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம் இங்கு ஊநூறு யாவிலுமாகவேயுள்ளது. * உலகேத்துமாழியா னத்தியூரான் என்றவிடத்தில் "திருவத்தியூரிலே நிற்கிறவன்" என்றும் * அத்தியூரான் புள்ளையூர்வான் என்றவிடத்திலும் "எங்கள் பிரானுகைக்காகத் திருவத்தியூரிலே நின்றான்" என்றும் அருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் நோக்கத்தக்கன. அத்திகிரியடி வாரத்திலுள்ள அழகிய சிங்கர் விஷயம் இப்பாசுரமென்னில், வீற்றிருந்த திருக்கோலமாகிய அப்பெருமானை, "நிற்கிறவன், நின்றான்" என்ற சொற்களால் அருளிச்செய்ய உபபத்தியில்லை. அப்பாசுரத்தில் * தானவனை வன்னெஞ்சங்கீண்ட மணிவண்ணன் என்று நரஸிம்ஹமூர்த்தியின் அநுபவம் உள்ளதனால் அந்த விசேஷணம் மட்டும் அழகிய சிங்கரைத் திருவுள்ளம்பற்றியதென்று நிர்வஹிப்பதுண்டேயன்றி அத்தியூரான் என்ற விசேஷ்ய பதம் தேவபிரானை நோக்கியதன்றென்று ஒரு ஆசிரியரும் ஓரிடத்திலும் உரைத்திலர். ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருளிச்செய்த திவ்யார்த்த தீபிகையிலும் அந்த விசேஷண பதத்தின் நோக்கமே குறிப்பிடப்பட்டுள்ளது,

திருவந்தாதியின் அப்பிள்ளாருரையிலும் * என்னேஞ்சமே யான் என்கிற ப்ரக்ருத பாசுரத்திற்கு—"ஸர்வலோக சரண்யனன வன் திருவத்தியூரிலே நின்றருளி என்னுடைய ஸர்வாவயவங்களி லும் வந்து புகுந்தானென்கிறார்" என்று அவதாரிகையும், [ஆழியா ணித்யாதி.] "திருப்பாற்கடலிலே அநிருத்தரூபியாய்க் கொண்டு கண்வளர்ந்தருளினவனாய் அங்கு நின்றும் நரஸிம்ஹரூபியாய் வந்தவதரித்து ஆஸுரப்ரக்ருதியான ஹிரண்யனுடைய........ஹ்ரு தயத்தைக் கிழித்துப் பொகட்டவனாய், சிறுக்கன் விரோதி போகப் பெறுகையாலே நீலமணிபோலே யிருண்டு குளிர்ந்த வடிவையுடை யனாய் அக்காலத்திற் பிற்பட்டாரையும் ரக்ஷிக்கைக்காகத் திருவத்தி யூரிலே வந்து நின்றருளின நீர்மையிலேற்றத்தை யுடையவன்" என்று வியாக்கியானமும் ஸ்பஷ்டமாகவுள்ளன. பூருவர்களின் வியாக்கியானங்களெல்லாம் இங்ஙனேயிருக்க இவற்றுக்கு மாறாக யார் எவ்விடத்தில் என்ன நிஷ்கர்ஷம் செய்யக்கூடும்? ஆகார மி ஞ்சமின்றியே ஸ்ரீமத் கம்பீரமாய் "பூர்வர்கள் நிஷ்கர்ஷித்தார் கள்" என்று இவர் எழுதிவைப்பது விஷமஸாஹஸமேயாகும். 'ஹ்ரீ வ்ரீடாதிகளோடு விஷவிஷயம் தமக்குப் புஷ்கலம்' என்று விளக்குதற்கே இந்த பிரஸங்கத்தில் இவர் ஊன்றினர் காண்மின்.

இனி, கவியன் மங்களாசாஸநப் பாசுரத்தையும் விவரிப்போம். பெரியதிருமொழியில் பரமேச்சுர விண்ணகரப்பதிகத்தில் (2-9-3) "வரந்தரும் மாமணிவண்ணனிடம் மணிமாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி" என்ற அருளிச்செயலும் நம் வரதராஜனை தேவபிரானையே ஐபந்திரிபறப் போற்றுகின்றது. இவ்விடத்திற்கு நஞ்சீயர் வியாக் கியான ஸ்ரீஸூக்தி;—"வரந்தரும் பெருமாள் என்று விருதுபிடித்து ஸர்வர்க்கும் ஸர்வாபேக்ஷிதங்களையும் கொடுத்தருளுகிறவனுக் கிடம்" என்றுள்ளது. பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி:—"அருளாளப் பெருமாளாய் நின்று ஸர்வாபேக்ஷிதங் களையும் தருகிறவனுக்கு வாஸஸ்தானம்" என்றுள்ளது. அவ் விடத்து அரும்பதவுரையில்—" வரந்தருமவனாய்=(வைவஸ்வத ...) ...ஸ்ர... என்கிற வரதனாய்." என்

றும், அருளாளப் பெருமாளென்று தேவப் பெருமாளுக்கு ப்ரஸித்தமான திருநாமமிறே. எம்பெருமானார் யஜ்ஞமூர்த்திக்கு அருளாளப் பெருமாளென்று தேவப்பெருமாளுடைய திருநாமம் சாத்திற்றுப் ப்ரஸித்தமிறே" என்றும் விளக்கமுள்ளது. இந்த வியாக்கியானங்கள் தாம் இல்லையெனினும் மூலத்தில் "வரந்தரும் மாமணி வண்ணனிடம்—கச்சி" என்றுள்ளதில் என்ன அந்யதாஸித்தி சொல்லமுடியும். திருவந்தாதிப் பாசுரங்களிரண்டினுள் முதற் பாசுரத்தில் அழகிய சிங்கருடைய வ்ருத்தாந்த கீர்த்தனமுள்ளதனால் அதனை அழகிய சிங்கர் விஷயமாக நிர்வஹிக்கச் சிறிது இடமிருந்தாலும் * வரந்தரும் மாமணிவண்ணனிடமென்ற கலியன் பாசுரத்தை அழகிய சிங்கர் திறமாக்க என்ன ப்ரஸக்தியுள்ளது? ஹஸ்திகிரி க்ஷேத்திரத்திற்குக் கலியனுடைய மங்களாசாஸனமுண்டென்று இந்தச் சேட்லூரரே (பக்கம் 4ல், முதல் வரியில்) எழுதியுள்ளார். அந்த கலியன் பாசுரம் எது? எடுத்துக்காட்டுக. அதில் அழகிய சிங்கர் பிரஸ்தாவம் ஏதேனுமுண்டோ? திவ்யப்ரபந்த மூலத்திலுங்கூட முழு மோசமான பேர்வழிகள் * வீணாவாரமூதண்டமுற விளைவிப்பதென்கொல்? 'வடமொழிவேதத்தை வாய் வந்தபடியும் கை போனபடியும் தூஷிப்பதில் சாலவும் சிறப்புடையாரிவர்' என்னலாமத்தனை போக்கி, அருளிச்செயலில் அவகாஹநமுடையாரென்று வாய்திறக்கவும் வஸகயில்லைகிடீர். ஏன்? ஆழ்வார் திருவடிகளில் மெய்யன்பு இருக்குமேல் உண்மைப் பொருள் உள்ளம்புகாதொழியுமோ?

ஸம்ஸ்க்ருத வித்வான்களின் திரளிலே வந்தால், 'தமிழில் பெரும்புலி; பகவத்விஷயத்தில் பெரிய கைகாரர்' என்று சொல்லியொழிதலும், தமிழ்ப்புலவர் திரளிலேவந்தால் 'ஸம்ஸ்க்ருத சாஸ்திரங்களில் மஹாஸிம்ஹமாக்கம்; ஸ்ரீ பாஷ்யத்தில் நாம் இட்டது பிச்சையாக்கம்' என்று சொல்லி யொழிதலுமாகிய * சதிரமென்று தம்மைத் தாமே சம்மதிக்கும் சதிர் எனைநாளைக்கு விலைச்செல்லும்? "யத்ர தார்கிகாஸ்தத்ர ஶாப்திகா: யத்ர ஶாப்திகாஸ்தத்ர தார்கிகா:। யத்ரோபயம் தத்ர நோபயம் யத்ர நோபயம் தத்ரோபயம்" என்றாற்போன்ற வீறுபாடுபோலும். இது நிற்க.

திருவரங்கத்தமுதனருடைய $ திருக்குமாரரான பிள்ளைப் பெருமாளையங்கார் அருளிய நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் தொண்டைநாட்டுத் திருப்பதிகளில் திருக்கச்சி அத்திகிரிப்பதியே முதன்மையாகப் பாடப்பட்டது. அதுதன்னில், அழகிய சிங்கர் விஷயம் என்கிற தான்தோன்றி வாதம் தலைகாட்ட இடமில்லாத படியாகவே "அருளாளன் கச்சித் திருப்பதியாம் அத்தியூர்க் கண்ணன்தாள், இச்சித் திருப்பதியாமென்று" என்று பேரருளாளப் பெருமாளே போற்றப்பட்டார். அச்செய்யுளின் உரை முடிவில்— "இங்கு மலையடிவாரத்திலுள்ள அழகிய சிங்கப்பெருமாளே ஆழ்வாரது மங்களாசாஸனம் பெற்றவரென்பது பலரது கொள்கை" என்று நவீநர்கள் எழுதிவைத்திருக்கின்ற அதனையே இந்த சேட்லூர் ஸ்வாமி நிதியாகப் பற்றிக்கொண்டு எழுதிவிட்டார். இனியாகிலும் இவரது ஹ்ருதயம் கல்மஷமற்றுத் தெளிவுபெறுமா? திருவரங்கத்தமுதனார் தாமும் இராமாநுச நூற்றந்தாதியில் "தென்னத்தியூரர் கழலிணைக் கீழ்ப்பூண்ட வன்பாளன்" என்று எம்பெருமானாரை விசேஷித்தருளினர். பூதத்தாழ்வாருடைய (அத்தியூரான் என்ற) நிர்தேசமும் அமுதனாருடைய இந்த நிர்தேசமும் ஸமாநவிஷயகமாகவேயிருக்கத் தகுதியுடையன. 'எம்பெருமானார் அழகிய சிங்கர் திருவடிகளில் அன்பு பூண்டவர்' என்றுதானோ அமுதனார்க்கு விவக்ஷிதம். எதையும் விபரீதமாக க்ரஹித்துத் தீரவேண்டிய இவர் இது தன்னையும் இப்படியே தான் க்ரஹிக்கக் கடப்பாடுடையார். அத்தியூரான் புள்ளையூர்வான்—அழகிய சிங்கரேயோ பெரிய திருவடியை யேறி நடத்தாநின்றார்?. இதற்குமேல் * அணிமணியின் துத்திசேர் நாகத்தின்மேல் துயில்வான் பேரருளாளனேயோ? என்பரேல; ஆம்; 'ஹணிவதிஶய நீயாஷு தீதஂ ஸஂ ஆஹாதெவாஶ:!' இத்யாதி ஶ்ரீக ஸூக்தியை நோக்குமின்னென்போம்.

இன்னமும் இவருடைய வாசகங்களை அலசியலசியுதறுவோம். மதுராந்தகத்தையும் காஞ்சீபுரத்தையும் ஒரு வகுப்பாக எழுதினரிவர். காஞ்சீபுரமென்பதும் ஹஸ்திகிரியென்பதும் பரியாயமென்

$ திருப்பேரனர் என்பாருமுளர்.

றும் அடுத்தபடியாக விவரணம் செய்தார். இதுவும் அவிவேக விலஸிதம். காஞ்சீ என்பது நகரம் முழுமைக்கும் $ ஏற்பட்ட பொதுப்பெயர். ஹஸ்திகிரி யென்பது பேரருளாளன் ஸந்நிதி யொன்றுக்கு மாத்திரம் ஏற்பட்ட சிறப்புப்பெயர். புராணத்தில் காஞ்சீ மாஹாத்மியமென்றும் ஹஸ்திகிரி மாஹாத்மியமென்றும் உண்டான பாகுபாட்டைக்கொண்டும் இந்த வாசி அறியற்பால தாம். * கல்லுயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சி * நிறைந்த கச்சி * காமருபூங்கச்சி * மன்னுமதிட்கச்சி என்று காஞ்சீ திவ்ய தேசமும் ஆழ்வார் வாக்கில் புக்குப்புறப்பட்டதே; * அத்தியூர் என்று ஸ்ரீ ஹஸ்திகிரியும் ஆழ்வார்வாக்கில் புக்குப் புறப்பட்டதே. இந்தச் சேட்லூராருடைய துராக்ரஹத்தின்படியோ ப்ராந்தியின்படியோ பேரருளாளன் ஆழ்வார் திருவாக்கில் புகுந்து புறப்படவில்லையென்றே வைத்துக்கொள்வோம். காஞ்சியும் ஹஸ்திகிரியுமாகிய ஸ்தாநங்கள் ஆழ்வார்கள் மங்களாசாஸநம் பெற்றவையே என்று இவர் தாமே ஸ்பஷ்டமாக அங்கீகரித்திருக்கும்போது இந்த திவ்ய தேசமும் மதுராந்தகமும் ஒரு வகுப்பாக எங்ஙனே கணக்கிடப்பெறும். 'ஸ்தலம் பாடல் பெற்றதா அன்று' என்று பிரகிருதம் விசாரமேயொழிய எந்த பெருமாள் பாடல் பெற்றவர் என்கிற விசாரம் ஸுதராம் அப்ரஸக்தம். அதுவும் ப்ரஸக்தந்தான் என்று சொல்ல இவர்க்கு வாயில்லை. ஏனெனில்; "ஆழ்வார்கள் மங்களாசாஸனம்

$ ஊரகம், பாடகம், பரமேச்சுரவிண்ணகரம், வெஃகா, அட்டபுயகரம், வேளுக்கை முதலிய திருப்பதிகளைப் பற்றின ஆழ்வார் பாசுரங்களில் **கச்சி** என்கிற உபபதம் உள்ளமையை நோக்குக. வேறு ஓரிடத்திலுங் காணமுடியாதபடி பதினன்கு திவ்ய தேசங்கள் ஒருங்கு சேரப்பெற்ற பரமவிலக்ஷண திவ்யதேசமான ஸ்ரீ காஞ்சியை திவ்ய தேசமன்றென்று கைகூசாதே யெழுதுகின்ற இச் சேட்லூராருடைய துராக்ரஹத்தின் அளவை விவேகிகள் உய்த்துணர்க. ஸ்ரீ தேசிக வைபவப்ரகாசிகா ஸ்தோத்ரத்திலுள்ள "[illegible] ॥ 37॥ என்ற ச்லோகார்த்தத்தை நித்யஜபம் செய்து தெளிவாராக. இவருடைய அபிந்தைக்ராமத்துக்கு இங்ஙனே லவலேசோக்தி தானுமுண்டோ?

செய்தருளிய க்ஷேத்திரங்களை திவ்ய தேசங்களென்கிற ஏற்றம் பெற்றவைகளாயிருக்கும்" என்றுதானே இவர் உபக்ரமித்திருக்கிறார். எம்பெருமானைப்பற்றிய பேச்சை இவர் உபக்ரமிக்கவில்லையே. 'ஆழ்வாரால் பாடப்பட்ட க்ஷேத்திரங்கள் திவ்யதேசங்கள்; அப்படியல்லாதவை வெறும் தேசங்கள்' என்று இவர் எழுதி வைத்திருக்கிறார். காஞ்சியும் ஹஸ்திகிரியும் ஆழ்வார் பாடல் பெற்றவையே என்றும் நிராக்ஷேபமாக ஒப்புக்கொண்டிருக்கிறார். 'கீழ்ப் பெருமாளா மேல் பெருமாளா' என்கிற விசாரம் அப்படி கிடக்கட்டும். இவருடைய பிரதிஜ்ஞையின்படி ஹஸ்திகிரிக்கு திவ்ய தேசத்வம் உண்டா இல்லையா என்பதே கேள்வி. இல்லையென்று சொல்ல வழியில்லை யிவர்க்கு. ஆகவே,

> ஸர்வஸ்வ ப்ரஸாதைக வாஞ்சிதேந விஶேஷிதஃ।
> காஞ்சீக்ஷேத்ரே ஹஸ்திஶைலே ஶ்ரீவரதாய பூஜிதா ॥

திருவரங்கம் பெரியகோயில் முதலான திவ்ய தேசங்களில் ஆழ்வார் மங்களாசாஸனம் பெறாத எம்பெருமான்களும் பலர் ப்ரதிஷ்டிதர்களாயுள்ளனர்; தாவதா ஸ்ரீரங்கத்திற்கு திவ்ய தேசத்வம் போய்விடுமோ? ஆக்ரஹம் தலைமண்டை கொண்டால் அஜ்ஞானந்தானே அதிகரிக்கவேண்டும்.

இனி, * யஸ்யாநுபாவமதிகந்துமஶக்நுவந்தோ முஹ்யந்த்யபங்குரதியோ முநிஸார்வபௌமாஃ என்று ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்திலுள்ள திவ்ய ஸூக்தியை யெடுத்துக்கொண்டு இவர் எழுதியிருப்பவைகளும் அத்யந்தாநுசித ப்ரஸங்கமென்று நிரூபிப்போம்.

> "ஆழ்வார்களும் ஸ்ரீதேவாதிராஜனைப் பார்த்து அவருடைய வடிவழகில் ஈடுபட்டு மோஹத்தை அடைந்தபடியினால் அவர் விஷயமாகக் கவிபாடினார்களில்லை. அதாவது, ஆழ்வார்களின் மங்களாசாஸனம் ஸ்ரீதேவப் பெருமாளுக்கு இல்லை என்பதை இப்படி (தேசிகன்) நிரூபித்தருளினாராயிற்று."

என்று எழுதியுள்ளார். இதனால், ஆழ்வார்கள் தேவப்பெருமாளை ஸேவித்தார்களென்றும், அவனுடைய வடிவழகில் ஈடுபட்டார்களென்றும், அதனால் மோஹித்தார்களென்றும் இவர் ஸ்பஷ்ட

மாக அங்கீகரித்தமை விளங்கிற்று. இதைவிட வேறு மங்களா சாஸனம் என்னோ? ஆழ்வார்களின் அநுபவம் எல்லாத் திருப்பதிகளிலும் ஏகரூபமாக இருக்கிறதோ?

சில திருப்பதிகளில் வயலையும் பொழிலையும் வாய் குளிரப் பேசிப் போருகிறார்கள். சில திருப்பதிகளில், எம்பெருமானது வடிவழகை மாத்திரம் வருணிக்கிறார்கள். சில திருப்பதிகளில், எம்பெருமானே! எமக்கு நீ ஸேவைஸாதிக்கமாட்டேனென்கிறாயே! என்கிற நிர்வேதத்தோடேயே தலைக்கட்டிப் போகிறார்கள். திருப்பதியின் திருநாமத்தைக்கூட வாய்விட்டு உரையாத விடமுமுண்டு. [கபிஸ்தலத்தை ஸ்மரிப்பது.] பல திருப்பதிகளில் எம்பெருமான்களுடைய அஸாதாரண திருநாமங்களை அருளிச்செய்யாமலே விபவாவதார சேஷ்டிதாநுஸந்தானத்தளவிலே நின்று ஸ்தலத்தை மாத்திரமே பேசிப்போகிறார்கள். சிலதிருப்பதிகட்குப் பலபாசுரங்கள் பாடுகிறார்கள். சில திருப்பதிகட்குத் துணுக்கை தருகிறார்கள். இங்ஙனே ஆழ்வார்களின் அநுபவவைகரிகள் விசித்திரமாயிருக்கும். ஸாதாரண திருப்பதிகட்குப் பலபல பாசுரங்களிட்டருளின நம்மாழ்வார் திருவரங்கம் பெரியகோயிலுக்கு *கங்குலும் பகலுமென்கிற பதிகந்தவிர வேறொரு துணுக்கையும் திருவாய்மொழியிலே அருளிச்செய்திலர். திருக்குடந்தையிலே மஹாபிநிவேசமுடையரான திருமங்கையாழ்வார் ஆராவமுதனுக்கு ஒரு பத்துப்பாசுரம் சேர அருளிச் செய்திலர். ஸ்ரீவில்லிபுத்தூரிலே திருவவதரித்தருளின பெரியாழ்வாரும் ஆண்டாளும் அத்திருப்பதிக்கு ஒரு துணுக்கையே தந்தருளினர். இதெல்லாம் ஒருபடியாக நிற்க, திருநாகையெம்பெருமானை ஸேவித்த திருமங்கையாழ்வார் அத்திருப்பதியையாவது அப்பெருமானையாவது வ்யக்தமாகப் பேசாமல் "அச்சோவொருவரழகியவா!" என்று விலக்ஷணமாகவே ஒன்பது பாசுரங்களையும் பேசித்தலைக்கட்டினார். இவ்வாழ்வார் தாமே "ஆழியொடும் பொன்னார் சார்ங்கமுடைய அடிகளை இன்னாரென்றறியேன்" என்கிறார். அஸாதாரண லக்ஷணங்களை வாய் வெருவா நிற்கச் செய்தேயும் "கொங்கார் சோலைக் குடந்தைக் கிடந்தமால்" என்று நல்ல ஞாபகத்தோடே அப்போதுதான் பேசியிருக்கச் செய்தேயும் * இன்னாரென்றறியேன் என்றது ஒரு விலக்ஷணப்ரக்ரியையிறே.

ஆக இங்ஙனே உஜ்ஜ்வலங்களாகச் செல்லும் அநுபவரீதிகளிலே ஆழ்வார்கட்குப் பேரருளாளனிடத்திற் சென்ற அநுபவம் ஒரு விலக்ஷணரீதியாயிற்று என்று இந்த சேட்லூரார் சொல்லுகின்றதாகத் தேறுகின்றதேயன்றி, பேரருளாளனை ஆழ்வார்கள் உபேக்ஷித்து விட்டார்களென்று குறைபாகச் சொல்ல நினைத்து வரையவந்தவிவர்க்கு ஸமீஹிதம் செவ்வனே ஸித்திக்குமாறில்லையே.

இதற்குமேல் இவர் என் சொல்வரென்னில், ஆழ்வார்கள் தேவப்பெருமாளைப் பாடவில்லை யென்பது மாத்திரமே * யஸ்ய நாஹாவஜயிமஹோ வித்ருதிஸ்லோகத்தில் விவக்ஷிதம். பாடாமைக்கு ஒரு ஹேதுவை ஸ்வாமி தேசிகன் உத்ப்ரேக்ஷித்தாரேயல்லது, உண்மையில் ஆழ்வார்கள் தேவப் பெருமாளை ஸேவித்தார்களுமல்லர், வடிவழகில் ஈடுபட்டார்களுமல்லர், மோஹித்தார்களுமல்லர். தேவப்பெருமாளுக்கு ஆழ்வார் பாடவில்லையே யென்று குறைபுறுவார்களின் கண்ணைத் துடைப்பதற்காகவே தேசிகன் ஒரு உல்லேகம் இட்டருளினர் என்று சொல்லப்புகுவர். அநந்யயாவிஷமாகக் கீழே நாம் நிரூபித்துக் காட்டிய அருளிச்செயல்கள் பேரருளாளன் விஷயமாக நன்கு விளங்கும்போது அவற்றோடு விரோதிக்குமாறு தேசிகன் விபரீதமாகத் திருவுள்ளம் பற்றினரென்று இவர் சொல்லுவதானது பரம போக்யமே யாகும். 'தேசிகதர்பநாசார்யர்' என்று இவர் இட்டுக் கொண்ட விருதுக்கு இதுவன்றோ அநுரூபம். திருக்குறுங்குடியில் எழுந்தருளியுள்ள பேரருளாளன் விஷயமென நினைக்கலாம்படி திருமங்கையாழ்வாரருளிச்செய்த "தேவபிரான் திருமாமகளைப் பெற்றும் என்னெஞ்சகங் கோயில்கொண்ட பேரருளாளன்" என்கிற சந்தையையும் நம் தேவப்பெருமாள் பரமாகவே யாக்கிப் பாசுரமிட்டருளின தேசிகன் ஸஹஸ்ரமுகமாகவேயுள்ள பாசுரங்களை அநந்யவரங்களாகத் திருவுள்ளம் பற்றுகைக்கு என்ன ப்ரஸக்தியுள்ளது. [தேசிகனது ஹஸ்திகிரி மாஹாத்மியப் பிரபந்தத்தில் மூன்றுவது பாசுரங் குறிக்கொள்க. அப் பாட்டியுரையில் இந்தச்சேட்லூரார் தும்மட்டிக்காய்ப் பட்டாகவே திகழ்கின்றமையும் தெரிந்து கொள்ளற்பாலது.]

வஸ்துதஃ * யஸ்ய நாஹாவஜயிமஹோ வித்ருதி ஸ்லோகத்தில் திவ்யஸூக்தியானது பல கருத்துக்களை உள்ளடக்கி அவதரித்துள்ளது. அவை

ஸதாசார்ய ஸேவாஸேவநே அறியத்தக்கவை. ஆழ்வார்கள் பலரும் ஸ்ரீரங்கநாதன் திருவேங்கடமுடையான் முதலான எம்பெருமான்களிடத்திலே யீடுபட்டு அவர்களுடைய பெருமைகளைப் பரக்கப் பேசினாப்போலே பேரருளாளன் பெருமையையும் நூற்றுக் கணக்கான பாசுரங்களினால் பேசி யிருக்கவேண்டுமே! அங்ஙனம் ஏன் பேசவில்லை? சில சில துணுக்கைகளாகத்தானேயுள்ளது. அட்டபுயகரத்திற்கும் பரமேச்சுர விண்ணகரத்திற்கும் போலே பத்துப் பாசுரமாவது பேசிவைக்கலாகாதா? அவ்வளவு கூட ஏன் இல்லை? என்று சங்கிப்பார்க்கு ஸமாதாநமாக அருளிச்செய்வது இந்தச்லோகம்—என்பது ஸ்ரீமத்ரஹஸ்யா விளங்கும் விஷயம். ஸ்ரீரங்கநாதன் முதலான எம்பெருமான்களளவிலே தரித்து நின்று பேசவல்லராயிருந்தார்கள் ஆழ்வார்கள்; பேரருளாளன் திறத்திலோ வென்னில்; * காலாழும் நெஞ்சழியுங் கண்சுழலும் என்னும்படியான விருபாடாதலால் தரித்து நின்று பெருமைகளைப் பேசகில்லாதொழிந்தனர்; அவர்கட்கும் நிலமல்லாத பெருமைகளை நான் பேசப்புகுவது ஸாஹஸம்; பேரருளாளனே! இதை க்ஷமித்தருளவேணும் என்று தேசிகன் பேசுமிதனால் ‘ஹஸ்திகிரி திவ்ய தேசமன்று’ என்று இந்த சேட்லூரார் எழுதுவதற்கு என்ன ப்ரஸக்தியுள்ளது. திருக்குடந்தை கோபால தேசிகன் சிஷ்ய வர்க்கத்திலொருவர் பணித்ததாகச் சொல்லப்படும் ஸ்ரீஸூக்திரத்நாகரத்தில் இந்த * யஸ்யாநுபாவமதிகம்யதி ஶ்லோக வ்யாக்யாநமாகவே ஒரு ஶ்லோகம் ஒரு நண்பர் சொல்லக் கேட்டதுண்டு;—* வாஸீ ஸ்ரீ வரகாருஶைலஶிகரே யஸ்ய ப்ரஹ்லாதோத்யவ்யாவ்யாநே வடாதாரவிஷ்ணுஹஹ வ்யாஸப்ரவணவாஹவஷ். தத்தாஶ்யக்ஷவ ஶாவிஶ்வாஸஹிதா ஸ்ரீகாந்தஸேவாநாயஃ ஸூரீ ஸூக்திய ஶாஹரிஸு ஶிஸத பூர்யாம்ஸி ஸ்ருயாம்ஸி நஃ. இதி॥ இதுகொண்டு ஆராவமுதனுக்குக் கலியன் மங்களாஶாஸநமில்லையென்று இனி இந்தச் சேட்லூரார் சொல்லியே விடுவர் போலும். திருக்குடந்தையைச் சுற்றியுள்ள திருப்பதிகட்குப் பத்தும் முப்பதும் நாற்பதும் நூறு மீந்தருளின கலியன் திருக்குடந்தைக்கு ஒரு பத்துப் பாசுரங்கூடப் பகர்ந்திலரே! என்று குறையுறுமைக்

காகவன்றோ மேற்குறித்த ச்லோகமவதரித்தது. தயாவாயு; தஸாதயா॥

* பத்துடையடியவரில் ஆழ்வார் எத்திறமென்று ஆறுமாஸம் மோஹித்துக் கிடந்ததும் நவநீத வளயமாவதாநத்வெந பேரருளாளன் விஷயமாகவேதான்—என்கிற திருவுள்ளத்தையே தேசிகன் இந்த ச்லோகத்திலுல் வெளியிட்டருளினரென்பது ஸம்ப்ரதாயம். ஆழ்வானும் ஸ்தவத்தில் * உஷணிதாதியால் ஸ்ரீ க்ருஷ்ண வாஜராஜயோகெளக்த்தை வ்ஜிப்பித்தருளினர். அதனை உபஜீவித்தே தேசிகன் ஈதுரைத்தாரென்கை மிகப் பொருத்தம்.

* யதொவாவொ நிவதநெ கூராவா உநவஸாவஹ என்று உபநிஷத்து ஓதுமளவைக்கொண்டு, 'வேதபுருஷன் எம்பெருமானுடைய ஆநந்தகுணத்தை நெஞ்சாலும் நினைக்கவேயில்லை, எங்கோ ஓடிச்சென்றொழிந்தான்' என்று எந்த விவேகியாவது சொல்லப்புகுவனே? அப்படி ஓதின உபநிஷத்தின் உட்கருத்து என்ன? என்று ஆராய்வதே விவேகிக்ருத்யம். அங்ஙனமே இங்கும் கொள்க. விஸ்வாஸ வாவ்ஜாக॥ இனி,

"ஆகிலும் சிலர் ஸ்ரீதேசிகன் ஸ்ரீத்ரமிடோப நிஷத்ஸாரத்தில் வாகவாதெஷ்ரிதும் வஶிவாண ஸக்தொமாணமணெ வூஹம் ஸெவாயொமும் வூயஉஸதகெ வீக்ஷூவாஉ என்று அருளிச் செய்திருப்பதைக்கொண்டு திருவாய்மொழி முதற்பத்து முழுவதும் ஸ்ரீதேவப்பெருமாள் விஷயமென்று நிர்வஹிக்கப்பார்க்கிறார்கள்..................உசிதமாகாது"

என்று இவர் எழுதியிருக்குமவற்றை விமர்சிப்போம். இதுவும் அபஹாஸ்யமான ப்ரஸங்கமே. ஸ்ரீசைல ஸ்ரீநிவாஸார்ய மஹாதேசிகன் என்பவர் த்ரமிடோபநிஷத்ஸாரத்திற்கு வியாக்கியானமியற்றியுள்ளார். அது அச்சிடப்பட்டுப் பல பதிப்புகளேறியுமுள்ளது. * வூயஉஸதகெவீக்ஷூவாஉ மென்கிற விடத்திற்கு அவர் மிகவிரிவாக வியாக்கியானமியற்றியுள்ளார். ஸம்ப்ரதாய வ்ருத்தர்கள் அநுஸந்தித்துப்போரும் ஐதிஹ்யங்களையும் அங்கே ப்ரகப் பண்ணியுரைத்துள்ளார். * விஷ்வாவவி ஜொஹஊவஹ

ஞோவிதஹெசிஹ்யஸஹஸ்ரவணேநேந என்றவிகூடகவியின் வாதலையை இந்த சேட்லூரார் அந்த ஸஹ்ருதயர்க்கும் பரிசளிப் பாராயின் அளிக்கட்டும். ஸ்தோவஸ்த்ருந்யாயமுமாகட்டும். அங்கே அந்த வ்யாவ்யாதா * யஸ்யாநாஹாவதி த்யாதிஶ்லோகத் தையும் எடுத்து இவர்போல்வாருடைய ஜாஶங்கையையும் மடிவித் துள்ளார். நிற்க.

சேட்லூரார் எழுதுகிறார்—"இந்த (த்ரமிடோபநிஷத்ஸாரத் தில்) ப்ரயோகிக்கப் பட்டிருக்கும் வரத மென்கிறபதம் ரூடி சக்தி யினால் ஸ்ரீதேவாதிராஜனைச் சொல்லுகிற தென்று இவர்களுடைய அபிப்ராயம்: 'வரத்தைக்கொடுப்பவன்வரதன்' என்கிற யோகவ்யுத் பத்தியே ப்ரஸித்தம். பகவானுடைய எண்ணிறந்த திருநாமங் களில் ஒன்றுக்காவது யோகவ்யுத்பத்தி கூடாமல் ரூடி சக்தியினால் நிர்வஹிக்க வேண்டிய ச்ரமம்கிடையாது. ஆழ்வார்களும் அந்தந்த திவ்ய தேசத்தைக்கொண்டே அந்தந்த எம்பெருமானை நிரூபித் தார்களதத்தனை போக்கி ரூடியான திருநாமத்தை ஓரிடத்திலும் பிரயோகித்தார்களில்லை. மூலக்ரந்தத்தில் [அதாவது திருவாய் மொழி முதற்பத்தில்] வேறு திவ்யதேசம் ப்ரஸ்தாவிக்கப்பட்டி ருக்க அதற்கு விருத்தமாக ஸ்வாமியின் ஸங்க்ரஹத்திற்கு [அதா வது, வ்ருஷஶைலகேவீக்ஷ்யவாஹ மென்றதற்கு] அர்த்தம் சொல் லுவது உசிதமாகாது."——இதி॥

தமக்குச் சிறிதேனும் ஶாஸ்திரவாஸனையில்லை யென்பதையே காட்டிக்கொள்ளும் இந்த வாக்யராசிகள். ததாஹி;— ரூடிசக்தி யென்றும் யோகவ்யுத்பத்தி யென்றும் இரண்டுதான் இந்த மஹா மஹோபாத்தியாயர்க்குத் தெரிந்தன போலும். யோகரூடி யென்பதைக் கனவிலுங் கேட்டறிந்திலர், பாவம்!. தேவப்பெருமா னுக்கு வரதனென்னுந் திருநாமத்தைவெறும்ரூடிசக்தியைக்கொண்டு நிர்வஹிப்பாராரு மில்லை * வரந்தரும் மாமணிவண்ணனென்று எற்கனவே திருமங்கையாழ்வாரும்* ஸமீஹிதாயாசிதாநீக்ஷித மென்று கூரத்தாழ்வானும், * கருதவரம் தரும் தெய்வப்பெருமாள் வந்தார் என்று தேசிகனும், * ஸத்யாபி ஸமீஹிதாநா ஶீக்ஷ ஷவஹாயிநே என்று மணவாளமாமுனிகளும் * நாஸெவெ தெ

வாசு வாஸுதேவா தூஹாவா வ்யாவ்யாதி—ஐத்ரீஷ—ஈவைய நீஈஷிதவ்யூஹா திகளும் பேசியிருக்கு மவற்றை நோக்கினல் யௌக வ்யுத்பத்தியே விவக்ஷிதமென்று விளங்கும். ஆளவந்தாரும் * யஸ்ய ஸ்வாநுகூலயா என்னும் ச்லோகத்தால் இதுதன்னையே முதலித் தாராய்த்து. ஆக இங்ஙனே யௌகார்த்தம் நிரம்பி யிருப்பதோடு ஸ்ரீஹஸ்திசைலஶிவரராஜவாஸிஜாதனை பெருமானுக்கே இந்தத் திருநாமம் அஸாதாரணமாக வழங்கிவருவதனால் ஸம்ஜ்ஞாதி வதஸாயத்தமானமெ சக்தியும்கூடப்புகுந்து, நம்பேருளாள னுக்கு யௌகரூடமான திருநாமமிது—என்று ஶாஸ்த்ரியவஸாணி யிலே நிர்வஹிக்கப்படுகிறது. ஸம்ப்ரதாயஸரணியும் இதுவே காணும். ஆனவனு, "பகவானுடைய எண்ணிறந்த திருநாமங்களில் ஒன்றுக்காவது யோகவ்யுத்பத்தி கூடாமல் ரூடிசக்தியினுல் நிர் வஹிக்க வேண்டிய சிரமம் கிடையாது" என்று இவர் எழுதியது ஸர்வஸ்வஸம்மதமேயாம். விஷ்ணுமொன்று தவிர மற்ற சிரமங்களெல்லாம் இவர்தமக்கேயுள்ளன.

இதர திவ்ய தேசத்து எம்பெருமான்கள் பக்கலிலும் ஸவிஈ வரதனென்ற திருநாமத்தைக் கொண்டும் ஆசார்யர்களுக்கு நிகழ்ந் துள்ள அநுபவமும் நன்கு பொருந்தும். யசைஸ்ஸர்வதிவத்தி ஸூபக்ஷமாகவும் ஹாவபூ பூணாரீவைசித்ரீ நிபந்தந மாகவும் இத்தகைய அநுபவங்கள் ஆழ்வார்களுக்கும் ஆசார்யர்கட் கும் அமைந்திருக்குமாற்றை அவர்களின் ஸ்ரீஸூக்திகளில் பரிசய முடையார் அறிவார். ஆழ்வானுடைய ஸுந்தரபாஹு ஸ்தவத்தில் 116, 117, 118 ச்லோகங்களிலும், பட்டருடைய ஸ்ரீரங்கராஜஸ் தவத்தில் "வடதடவைவகீஜ.........வரதம்.........வரவிஷ ஈவாஸிஷீய வரதம் பூணாதிஹாஸ" இத்யாதி ச்லோகங் களிலும் இது புலனும். * நின்றவூர் நித்திலத்தை........கண்டது நான் கடன்மல்லைத் தலசயனத்தே" இத்யாதி.

"ஆழ்வார்களும் அந்தந்த திவ்யதேசத்தைக் கொண்டே அந்தந்த எம்பெருமானை நிரூபித்தார்களத்தனை போக்கி ரூடியான திருநாமத்தை ஓரிடத்திலும் பிரயோகித்தார்களில்லை" என்றெழுதி

யுள்ள இவருடையவாக்கியங்களின் கருத்தை இவரேதாம் தெரிந்து கொள்ள வேண்டும். எதுக்காக இதை எழுதுகிறார். உண்மையில் இது அஸங்கதமும் அர்த்தமற்றதுமான வார்த்தையே. எப்படியாவது ஆகுக. இதைக்கொண்டு எதைஸாதிக்க எதை பாதிக்க வருகிறார் இப்போதிவர்.

அன்றியும், திருவாய்மொழி முதற்பத்தில் வேறு திவ்யதேசம் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்க அதற்குவிருத்தமாக அந்தமுதற்பத்தைப் பேரருளாளன் விஷயமாக தேசிகன் யோஜித்தருளவே மாட்டார் என்று முஷ்டிபிடிக்குமிவர் திருவாய்மொழியின் தனியனில் கூட பிரவேசமில்லாதவர் என்று தெற்றென விளங்குகின்றது. ததாஹி;— * **வான்திகழுஞ் சோலைமதிளரங்கர் வண்புகழ்மேல் ஆன்ற தமிழ்மறைகளாயிரமும்** என்ற திருவாய்மொழித்தனியன் உபயஸம்ப்ரதாயஸ்தர்களாலும் அநுஸந்திக்கப்பட்டு வருகிறது. பட்டரருளிச் செய்ததனைப் பிள்ளானருளிச் செய்ததாகவும் சிலர்பதிப்பித்துள்ளார். அதில்நமக்கு விசாரமில்லை. இத்தனியனில், திருவாய்மொழியாயிரமும் ஸ்ரீரங்கநாதன் விஷயமென்று ஸுஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுள்ளது. இதன்மேல் கிளரும் சங்கைகளுக்கு இந்த சேட்லூரார் என்ன ஸமாதானம் திருவுள்ளம் பற்றியிருக்கிறாரோ தெரிகின்றிலோம். அதற்கு என்ன ஸமாதானமிவர் சொல்லுவரோ அதுபோன்ற ஸமாதானம் * **ஹயஶிரஸ தவைவீக்ஷ்யவாந்** ஏமென்பதற்கும் ஒக்கும். * **யச்ச்ரோ ஹயோஸ்ஸோ கோஷ: ஸஹிஹாஸோவிவாஸஸ: ஐத்யாதி.** ஆகவே இவர்செய்த **ஶ்ருத்யபஹாரம்** அயுக்தம்.

சில **ஶ்ருதிவாக்யங்கள் ப்ரகரணாநுரோதேந அந்யாந்யார்த்தங்** களாயிருக்கச் செய்தேயும் **விநியோகப்ருதக்த்வந்யாயத்தாலே ஸம்ஸ்காரார்த்தங்களாய்** ஓரோ கருமங்களிலே ஆசார்யர்களால் நியமிக்கப்படுவதுபோலவே அருளிச்செயல் விஷயத்திலுமுண்டு. ஆகவே, [* அபர்வறுமமரர்களதிபதி * அருளாழிப்புட்கடவீரவர் வீதியொருநாளென்று அருளாழிபம்மானை * மணிமை வானவர் கண்ணனை] என்றுள்ள **ஶ்ரீஹயக்ரீவஸாந்நித்யஸூக்தி ஸந்தெஸ ஸூசகஸூக்த்தைத்** திருவுள்ளம்பற்றியும், பேரருளாளனுடைய ஸந்நிதியொன்றில் மாத்திரம் நம்மாழ்வாருடைய திருக்கோலத்தில்

ஸ்ரீஹஸ்ஸூக்திகளை * அயர்வறுமமரர்களதிபதியவனவன் துயரறுசுடரடி தொழுதெழென்மனனே! என்ற பாசுரத்திற்கிணங்க விலக்ஷணமான கஸ்தூரம ஸ்ருதிஸம்யாந ஸூக்திகளாக அமைந்திருப்பதற்கு அடியறியுமாஸ்திகர்கள் உபதேச பரம்பரையாக உரைத்துப் போரும இதிஹாஸத்தைத் திருவுள்ளம்பற்றியும் தேசிகன் முதற் பத்து முழுவதையும் பொருளாளந் கிறத்திலே யோஜித்தருளினது சாலப் பொருந்தும். இவ்வகைக்கு உபவாதகங்களாகப் பல பல ப்ரமாணங்கள் காட்டலாம். தச்ச தத்ஸயாஸ்ய.

இன்னமும், சேட்லூரார் எழுதுகிறார்— "அயர்வறு மமரர்களதிபதி இத்யாதிபதங்கள் இன்னம் அநேகம் திவ்ய தேசங்களிலும் ஸாதாரணமாகையினால் அவைகளைக்கொண்டு நிர்வஹிக்கப்பார்ப்பதும் யுக்தமாகாது"—இதி॥ தத்ரவக்தவ்ய:.

"* அயர்வறுமமரர்களதிபதி யென்றது பரத்வத்தைப் பேசும் பிரகரணத்திலுள்ளதாதலால் ஒரு திவ்ய தேசத்தையும் பற்றியதன்று" என்று இவர் எழுதியிருந்தால் அது ஒருவழியாயிருக்கும். அதற்கு ஒரு திவ்யதேசத் தெம்பெருமான் பக்கலில் அந்வயம் கொள்ள இவர் தாமும் இசைந்த பின்பு அந்தப் பதம் நம் தேப்பெருமாளையன்றி வேறொரு பேய்ப் பெருமாளையும் பற்றாதென்பது திண்ணம். திருவிருத்தம் முதற்பாசுரத்தில் * இமையோர் தலைவா! என விளிப்பதும் நம் தேவபிரானையே. பெரிய திருமடலில் திருப்பதிக் கோவையில் * என்னை மனங்கவர்ந்த வீசனை, வானவர்தம் முன்னவனை என்றதும் நம் தேவபிரானையே. அந்த வட்டமே இதனை வற்புறுத்திக் காட்டும்.

இந்த ப்ரகரணத்தில் இந்தச்சேட்லூரார் * யஸ்யாஸ்ரவ தஜ ஜஹாதித்யாதி ஆழ்வான் ஸூக்தியை ஸங்கதியின்றியே உபஜீவித்துக்கொண்டு "இல்லாதனை இருப்பதாக நிரூபித்து ஒரு பெருமை பெறப் பார்ப்பது ஹாஸ்யாஸ்பதமாகும்" என்றெழுதியதும் ஸ்வஸ்யைவஹாஸ்யதாஹாஸ்பதத்வாவிஷ்காரஹேதுரபூத்॥ இவர் தம்முடையகுடியிருப்பிடமான அயிந்தை க்ஷேத்ரஹாரத்திற்கு இல்லாத பெருமைகளை ஏற்றிவைக்க விரும்பி ஆகாசதாண்டவஞ்செய்கிறாரே, அப்படி நாம் செய்கின்றிலோம்; செய்ய ப்ரஸக்தியுமில்லை.

இன்னமும் சேட்லூரார் எழுதுகிறார்— "இப்படியாகில் தேவப்பெருமாளுக்கு மஹிமை குறையாதோவென்னில், அவருடையமஹிமைக்கு வேறுகாரணங்கள் இருக்கிறபடியினாலே குறைவு வராது... ஆழ்வார்கள் தேவப்பெருமாளுடைய பரிபூர்ண சோபையிலீடுபட்டு அது வாசாமகோசரமாக இருந்ததினால் அதைவர்ணிக்காமல் போய்விட்டபடியினாலே தேவப்பெருமாளுக்கு ஒருகுறைவும் வாராது"— இதி. ஶ்லோ॥ உபவிஶ்ய ததோ ராமே ஸம்ஸ்தூய ஸஹோக்ஷ ததः। கிம் கரிஷ்யதி ஜ்யேஷ்டஸ்யாயம் ஶேஷ ஸர்வ ஸாயீ வாஸः॥ ஆழ்வார்கள் தேவப்பெருமாளுடைய பரிபூர்ண சோபையில் ஆழங்காற்பட்டார்களென்று இசைந்தான பின்பு மற்ற பேச்சுக்களெல்லாம் * ஸஸ ஸாதா வம்ஶ்யா * வம்க்திவாவ நவவாஸம் ஸ ஸதேவ ஸேவிநீ ஸஸ. என்னுமாபோலே உபந்யஸ்தவிதங்களா மத்தனையிறே. ஆழ்வார்களின் ஸநாவாக்யங்களுள் ஏதேனுமொரு கரணத்திற்கு இலக்காகுமத்தனையேயிறே எம்பெருமான்களுக்குத் தேட்டம். உண்மையில் த்ரிகரணங்களுக்கும் இலக்கானவரே பேரருளாளன். * தாஷ்டாந்த்யாயத்தாலே இவர் சொற்படிக்கே இசைந்தாலும் மற்ற எம்பெருமான்களிற்காட்டிலும் மிகையான ஏற்றம் விளங்கா நின்றதேயன்றி எட்டனையும் குறைபாடில்லை. அன்பில், ஆதனூர், திருக்கண்டியூர் முதலான தலங்கள் ஒரு ஆழ்வாருடைய ஒரு துணுக்கையில் ஸம்பந்தித்த மாத்திரத்தினாலேயே திவ்ய தேசங்களாய்ப் பரிகணிதங்களாகக் காணாநின்றோம். அத்தலங்களிலுள்ள எம்பெருமான்களை ஆழ்வார்கள் ஸேவித்தார்களா இல்லையா? என்று விசாரிக்கப்புகுந்தால் ஒரு நிர்ணயமும் பெறமுடியாது. ஊர்ப்பெயர்களை உரைத்தவளவேயுள்ளது. அங்ஙனன்றிக்கே ஸகல ஆழ்வார்களும் தேவப்பெருமாளை ஸேவித்தார்களென்றும் வடிவழகில் ஈடுபட்டு மெய்மறந்தொழிந்தார்களென்றும் அடிக்கடி எழுதாநின்ற இச் சேட்லூரார் ஒரு நிலையில் நில்லாதே காடுபாய்ந்து ஒன்றோடொன்று முரண்படும் மொழிகளை வரைகின்ற வாற்றைக்கண்டால் * ந தாவக வசநாஹோயம் ஶோசநீயஃவாஸம் ஹ்ருஶ்டி என்னுமத்தனையே.

ஸத்யோக்தம்ஸவதி॥ * பாஷ்யகார ஹோமஜ்ஞவங்களென்றும் * கோயில் திருமலை பெருமாள்கோயிலென்றும் நாடெங்கும் சிறப்பாக அநுஸந்திக்கப்படுமவை மூன்றே திருப்பதிகள். இங்ஙனே மூன்று திருப்பதிகளை மாத்திரம் விசேஷித்துக்கொண்டதற்கு நிதானமேதென்னில்; ப்ரபந்நஜநகூடஸ்தரான நம்மாழ்வார் தமது ப்ரதமப்ரபந்தமான திருவிருத்தத்தில் மேற்சொன்ன மூன்று திருப்பதிகளை மாத்திரமே அநுபவித்ததேயாம். அதில் பெருமாள்கோயிலாகிய காஞ்சியை எவ்விதமாக அநுபவித்திருக்கிறாரென்றால் * ஸக்ஷம்வேகவதீதீரே ஹஸ்திஶைலே விஜ்ரும்பதே। உபாயஸ்ஸர்வ ஸ்வயம்வ்யக்தம் பரம்மஹ:” என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்வதற்கு அவலம்பநமாக ஸ்ரீயதோக்த காரியையும் பேரருளாளனையும் விடாமல் அநுபவித்திருக்கிறார். முதற்பாட்டில் * இமையோர் தலைவா! என்று பேரருளாளனை அநுபவித்தாரென்னுமிடம் முன்னமே மூதலிக்கப்பட்டது. * நானிலம் வாய்க்கொண்டு என்ற இருபத்தைந்தாம் பாட்டில் ஸ்ரீயதோக்தகாரியை அநுபவித்தார். இதில் “கால் நிலந்தோய்ந்து விண்ணோர் தொழுங் கண்ணன்வெஃகா” என்றருளிச்செய்தது, தேவப்பெருமாளுடைய தலைமைக்கு நிருபகர்களான விண்ணோர்களே வெஃகாவிலும் வந்து தொழுகிறார்களென்றும், விண்ணோர்தொழுங் கண்ணனாகிய தேவப்பெருமாளே வேறொருமூர்த்தியாகி வெஃகாவிலுமுள்ளாரென்றும் விளங்கக்காட்டினபடி. இங்கே அமைந்துள்ள ஆழ்பொருள் இவர் போல்வாருடைய மதிக்கு இறையும் எட்டாதது.

ஸஹ்ருதஃ இந்த ஸ்ரீகாஞ்சி திவ்யதேசத்தின் ஒப்புயர்வற்ற மஹிமைக்கு ஏற்ப இதனை முன்னே சுட்டி “பெருமாள்கோயில் கோயில் திருமலை” என்றே வ்யவஹாரம் ப்ரவ்ருத்தமாக வேண்டியிருந்தும் இதனை இறுதியிலே வைத்து வ்யவஹாரம் நிகழ்வதானது * ஸ்வல்பாச்தரம்பூர்வம் என்ற வடமொழி வியாகரண நியமத்தை அநுவியாநம்பண்ணுகிறபடி போலும் என்று நிர்வஹித்தார்கள் சிலர். பெருமாள் கோயிலைப்பேசினபின்புவேறொரு திருப்பதியைப் பேசலாகாதென்கிற திருவுள்ளத்தினாலாம் என்று நிர்வஹித்தார்கள் பலர்.

ஆழ்வார்களுள் தலைவர்களான முதலாழ்வார்களுள்ளும் முதல்வரான பொய்கையாழ்வாருடையவும் ஆசார்யர்களுள் தேசிகனுடையவும் திருவவதாரஸ்தலமாய் ஸகல ஆசார்யர்களும் போரவுகந்த விடமாய், விசிஷ்டு எம்பெருமானர் வீற்றுப்பெற்ற தலமாய், * முத்தி தரும் நகரேழில் முக்கிய மாங்கச்சி என்றும் * காசி முதலாகிய நன்னகரியெல்லாம் கார்மேனியருளாளர் கச்சிக் கொவ்வா என்றும் * ஸத்யம் ஶபே வாரணசைலநாத வைகுண்டவாஸேபி ந மேபிலாஷ: என்றும் அநந்யஸாதாரணமாய் தேசிகன் பேசலான தலமுமாயுள்ள ஸ்ரீகாஞ்சீ மஹாபுரியை இந்தச் சேட்லூரார் பொருமையினால் திவ்ய தேசமன்றென்று கூறி எவ்வளவுதான் இழித்துரைத்தாலும் இத்தலத்திற்கு விளைவதொரு குறையில்லைகிடீர். "கழுதை மேய்த்தாகிலும் கச்சிவாஸம்பெறாய்" என்றும் "திருவநந்தஸரஸில் நீராடாதகாயம் வெங்காயம்" என்றும் தொன்று தொட்டு வழங்கும் பழமொழிகள்போல இச் சேட்லூராருடைய அயிந்தை கிராமத்திற்கு ஒரு மொழியேனுங் கிடைக்குமோ?

திருமங்கையாழ்வாரொருவர் * கூந்தல்கமழுங் கூடலூரையும் ஏசரின்ற எவ்வுளூரையும் பாடினாப்போலே வடிவழகைப்பற்றி வாய் திறவாதே மாங்காயையும் தேங்காயையும் செங்நெலையும் சேல்களையும் வருணித்து ஒருபத்துப் பாசுரம் பாடியிருக்கிறாரென்கிற இவ்வளவையே கொண்டு திருவரங்கம் பெரிய கோயிலோடு ஸமமாகத் திருவயிந்திரபுரத்தை இவர் எழுதிக்கொள்வது சிரிப்புக்குறுப்பு. இது ஸ்ரீதேசிகன் போரவுகந்ததலமென்று திருப்பித் திருப்பியெழுதுகிறார். நம்போல்வார் ஏதோ ஆரோக்கியத்தையும் மற்றுஞ் சில காரண விசேஷங்களையுங்கருதி மதனபல்லி, நீலகிரி, குற்றாலம், கொடைக்கானல் என்றாற்போன்ற சிலவிடங்களைக் குடிகொள்ளுமா போலே ஸ்ரீதேசிகனும் சில ஸௌகர்யங்களை அபிமானித்து ஔஷதியை உகந்தாரென்றும், அந்த ஔஷதஸக்தியினால் அந்த க்ஷேத்ரத்துப் பெருமாளுக்கும் சில வாக்குக்களைத் தந்தருளினாரென்றும் இவ்வளவையே வைத்துக்கொண்டு இவர் ஸ்வக்ஷேத்ரத்திற்கு ஏற்றங்களை ஏற்றியேற்றி யெழுதிக்கொள்வதோடு நில்லாமல் பெரியவிடங்களைப் பழிக்கவும் புகுந்தது மஹாஸாஹஸம், மஹாபாபம். புதிதாக ஸ்வாதந்த்ர்யம்கொண்டாடுமிக்காலத்தவர் சிலர் ஸம்ப்ரதாயப்ரவர்த்தகர்களைப் பழிப்பதுபோலாமிது.

ஹம்ஸஸந்தேசத்தில் இருபத்தைந்தாம் ச்லோகம் முதல் பத்து ச்லோகங்களினால் தொண்டைமண்டலத்தையும் ஸ்ரீ காஞ்சீபுரியையும் ஸ்ரீ ஹஸ்திகிரியையும் பேரருளாளனையும் [illegible]மாகப் போற்றின தேசிகன், வழிபடைவிலே திருவயிந்திரபுரத்தைப் பற்றிப் பேச ப்ரஸக்தியிருந்தும் வாய்திறவாதே [illegible] செய்தமைக்கு ஹேதுவை இவர்தாமே சிந்தித்தறிக.

* [illegible] என்று சணக்கிலே இப்பகுதியை இவ்வளவோடு உபஸம்ஹரித்துக்கொள்ள நினைக்கிறோம். ஆழ்வாராசார்யர்களின் திருவவதாரத்தினாலும் அவர்கள் எழுந்தருளியிருந்து அபிமாநித்ததனாலும் அவர்கள் வாய்கொண்டு போற்றி மகிழ்ந்ததனாலும் ஆகவிப்படி ஸர்வப்ரகாரங்களாலும் நிஸ்ஸமாப்யதிகமான பெருமை பெற்ற விடம் ஸ்ரீஹஸ்திகிரிக்ஷேத்ரமொன்றேயன்றி வேறொன்றில்லையென்று விஸதீக்ருதமாயிற்று.

[illegible]

ஸதியாக்ஷ||

[illegible]

விதயதத்பேஷணார்த்தவிசக்ஷணை:
நிகமபாஹ்யஸமயைர்நிராக்ருதா:|
[illegible]
[illegible]||
ஶேட்லூர் தாண்டவகண்டநம்
க்ருத்வா [illegible]|
[illegible]
[illegible]||.

பேரருளாளன் பெருமை விளக்கம் முற்றிற்று.

ஸ்ரீ:

சேட்லூர் தாண்டவ கண்டநத்தில்

இரண்டாவது பாகம்

ஸ்ரீ தேசிக ப்ராபாவ பரிஷ்காரர்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

"ஸ்ரீ தேசிகனும் அவருடைய ஸ்ரீஸூக்திகளும்" என்னும் புத்தகம் இனி ஆராயப்படுகின்றது. இது ஷை திருவயிந்திரபுரம் சேட்லூர் ஸ்ரீநரஸிம்ஹாசார்ய ஸ்வாமியின் உபந்யாஸமென்று வெளிவந்துள்ளது. 190-பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தில் தேசிகனுடைய சரித்திரமும் அவருடைய ஸ்ரீஸூக்திகளின் வளவர்ஷாவர்க்ரமங்களும் அவை அவதரித்த கால தேஶ காரணங்களும் மிக்க ஆராய்ச்சியுடன் வெளியிடப்படுகின்றனவாக சேட்லூராருடைய நினைவு அல்லது கனவு.

பல நூற்றாண்டுகட்கு முன்பு எழுந்தருளியிருந்த ஆசார்யர்களின் விஷயங்களை வெளியிடவேண்டுமானால் தகுந்த ப்ரமாணங்களுடன் வெளியிடவேண்டும். ஸர்வஜ்ஞா ஸதீர்த்யமான ஸமாசாரங்களில் நம்முடைய ஊஹாபோஹங்கள் யுக்திவாதங்கள் ஒன்

றும் பயன்பட மாட்டா. உதாஹரணமாக ஏற்கனவே பிராமாணிகர்களான முன்னோர்களால் இயற்றப்பட்டுள்ள திவ்யஸூரிசரித்ர வாயஹூநங்களிலிருந்து எவ்வளவு உண்மைவரலாறுகள் நமக்குக் கிடைக்குமோ அவ்வளவே வெளியிடவுரியனவாம். தான்தோன்றியாக வெளியிடப்படும் விஷயங்கள் சில அசட்டுப் பரமைகாந்திகளுக்கு உவப்பானதாக இருக்கக் கூடுமானாலும் நிஷ்பக்ஷபாதமாய் உண்மைகளை ஸோயித்து உணரவல்ல விவேகிகளின் கோஷ்டியில் அவை ஒருநாளும் விலைச் செல்லமாட்டா.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் சரித்திரபரங்களான தமிழ் வசன நூல்கள் அப்போதைக்கப்போது பல பல கிளம்பிக்கொண்டேயிருக்கின்றன. பிள்ளை லோகாசார்யர் சரித்திரம், தேசிகன் சரித்திரம், மணவாளமாமுனிகள் சரித்திரம் என்கிற இந்த விஷயங்கள் இருக்கட்டும் இவர்கட்கும் முன்னோர்களான எம்பெருமானார் முதலான ஆசார்யர்களின் சரித்திரங்களிலுமே அவரவர்கள் மனம் போனபடி பலபல $ ப்ரக்ஷேப உத்க்ஷேபங்களைச் செய்திருக்கிறார்களென்று நாம் கண்டிருக்கிறோம். ஸம்ஸ்க்ருத நூல்களாகவும் அதிலும் ச்லோகரூபமான நூல்களாகவுமிருந்திட்டால் அவற்றில் அவ்வளவாக நவீநர்கள் கைச்சரக்குகளை நுழைக்க நேருகிறதில்லை. தமிழ் வசன ரூபங்களாகவுள்ள சரித்திர நூல்களிலோவென்னில்; முதலில் வட்டிலெழுதி வைத்துக்கொள்ளும்போதே அவரவர்கள் தங்கள் தங்களுக்கு இஷ்டமான கதைகளையும் நுழைத்து வைக்கிறார்கள்; பிறகு அச்சிடுங்காலத்திலும் அத்தகைய ஸம்பவங்கள் தாராளமாக நேருகின்றன. பாஞ்சராத்ரங்கள் இதிஹாஸ புராணங்கள் முதலிய நூல்களிலுமன்றோ இப்படிபட்ட கோளாறுகள் நேர்ந்துவிட்டன.

ஒருவர் ஒருஸமயத்தில் ஒருவிஷயத்தை ஏதோவொரு காரணார்த்தமாகக் கல்பனை செய்து ப்ரசாரத்தில் விட்டுவிட்டால் அது நாளடைவில் மஹாப்ராமாணிக விஷயம்போல விளக்கம் பெற்றுவிடுகின்றது. ‘கடா கன்று ஈன்றதெ’ன்றால் ‘பிடித்துக்கட்டிப் புற்

$ ப்ரக்ஷேபம்— புதிய விஷயங்களைச் சேர்த்துவிடுதல். உத்க்ஷேபம்—உள்ள விஷயங்களை நீக்கி விடுதல்.

சுமை வாங்கிப்போடு' என்பாரைப்போலே, ஆராய்ச்சியின்றியே கல்பிக்கப்படுகின்ற வம்புவரலாறுகளையும் ஆதரிக்கப் பல அசடர் ஏற்பட்டுவிடுகிறார்கள். இவ்விதமாகவே நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் சில விஷயங்கள் விளைந்திருக்கின்றன. "யதாயதி வாதீ பஹுஜநவிரோதீ" [உண்மையுரைப்போனை உலகம் பகைக்கும்] என்கிற நியாயம் நமக்கு எப்போதும் நினைவிலிருக்கின்றமையால் இவ்விஷயங்களில் நாம் தணிந்தேயிருக்கு மிருப்புடையோம். பிரகிருதம் சேட்லூராருடைய சரித்ரோபந்யாஸ புஸ்தகத்தை நாம் படித்துப்பார்த்த பின் உலகுக்கு உண்மையைச் சிறிது வெளியிட்டு வைப்போமென்றெண்ணி இஃதெழுதத்தொடங்கினோம்.

ஒரு ஆதாரமுமின்றியே 'முயலுக்கு மூன்றே கொம்பு, குதிரைக்குக் குளம்புகளேழு' என்றாற்போன்ற வம்புகளை ஸாதிப்பதும் உள்ள விஷயங்களை உதறித்தள்ளிவிடுவதுமே இந்தச் சேட்லூரர்க்குப் பணி என்பதை நன்கு நிரூபிக்கிறேன். பெரும்பாலும் இவருடைய எல்லாவிஷயங்களும் இப்படிப்பட்டனவே யாயினும் ஒவ்வொன்றையு மெடுத்தெழுதி வீண் போதுபோக்க நமக்கு விருப்பமில்லாமையால் பத்தெட்டு விஷயங்களைமாத்திரம் எடுத்துக் காட்டி நிற்க நினைக்கிறோம்.

தேசிகனைத் தூப்புல் வேதாந்த தேசிகனென்று உலகமெங்கும் வழங்குவது அனைவருமறிந்ததே. ஸ்ரீ காஞ்சியில் விளக்கொளியெம்பெருமான் ஸந்நிதியின் பரிஸரமான பாகத்திற்குத் தூப்புல் எனத் திருநாமம் வழங்கி வருவது விச்வப்ரஸித்தம். தூ-பரிசுத்தமான, புல்—, தர்ப்பம் என்றபடி. உஹத்தை விச்வாமித்ரமென்று வழங்கிவருவதும் உலகறிந்தது. ஆகவே, விச்வாமித்ரவம்சோத்பவர்கள் பெரும்பாலும் வாழ்ந்த இடம் என்கிற காரணம்பற்றி அந்த ஸ்தாந விசேஷத்திற்குத் தூப்புலென்று திருநாமம் வழங்கலாயிற்று. நாளடைவில் அந்த ஸ்தாந விசேஷத்தில்நின்றும் வெளியிடங்களுக்குச் சென்று சேர்ந்தவர்கள் பலர் இப்போதும் 'நாங்கள் தூப்புலிலிருந்து வந்தவர்கள்' என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறார்கள். அங்குச் சில க்ஷேத்ரபாகங்கள் இப்போதும் 'தூப்புல் பட்டரை' என்று வியவஹரிக்கப்படா நின்றும் சாஸனங்களில்

எறியுமிருக்கின்றன. கந்தாடை, ஈச்சம்பாடி, சேட்லூர், முடும்பை, கிடாம்பி முதலான—ஸ்தலவிசேஷங்களைப்பற்றின நாமங்களே குலப்பெயராகவும் வழங்கி வருதல்போலத் தூப்புற் குலமென்கிற வ்யபதேஶமும் உண்டாயிற்று. அநேகமாய்க் குலநாமங்கள் ஊரடியாகவேகாண்கின்றன. உண்மை இங்ஙனமிருக்கும்போது, இந்தச் சேட்லூரார், ஷி சரித்திர விமர்சத்தில் (பக்கம் 131ல்)—“தூப்புலென்பது ஸ்வாமி அவதரித்த க்ஷேத்திரத்தின் திருநாமமென்று இப்பொழுது சிலர்சொல்லுகிறார்கள். பிள்ளையந்தாதியில் பலஇடங்களிலும் தூப்புல்குலமென்றே வ்யவஹரித்திருப்பதனாலும்........ இந்தப் பக்ஷம் அங்கீகரிக்கப்படவில்லை” என்று எழுதுகிறார்.

ஆழ்வானுடைய ஸந்ததியாரின் குலம் கூரகுலம் என வழங்கப்படுகிறது. வேதாசார்ய பட்டரருளிச்செய்த க்ஷமாஷோடசியின் முடிவில் “ஸ்ரீவத்ஸாங்க மிஶ்ராணாமந்வயே கூரஜந்மநாம் ஸூநுநா ஹோவதீர்ணா:” என்றுமுள்ளது. இதைக்கொண்டு இவர் கூரமென்று க்ஷேத்ரமே கிடையாதென்றும் சொல்லப்புகுவர்போலும். பிள்ளையந்தாதியில் தூப்புற்குலமென்றே பலகாலும் பேசப்பட்டிருக்கிறதென்றும் தூப்புற்குடியென்றே வியாக்கியானமுள்ளதென்றும் இவரெழுதுவதும் அஸாரம். வடமொழியிலும் தென்மொழியிலும் நரம்பு அறியாமையை நன்கு காட்டிக்கொண்டபடியாய்த்து. குலமென்னும் வடசொல் வம்ஶம் தேஶம் க்ருஹம் முதலிய பல பொருள்களையுடையதென்பது ஸாதாரண கோஶங்களிலும் வ்யக்தம். ஶூத்ரகுலம் ராஜகுலமித்யாதி ப்ரயோகங்களுமுண்டே * [illegible] தமிழில் குடியென்கிற சொல்லும் இத்தகைத்தே. காரைக்குடி அரியக்குடி தூத்துக்குடி பரமக்குடி.—திருக்கண்ணங்குடி புள்ளம்பூதங்குடி திருவெள்ளியங்குடி திருக்குறுங்குடி புளிங்குடி மன்னார்குடி.

ஆரியர்காள்! இவருடைய அஜ்ஞாநவிலஸிதங்களிலோ துராக்ரஹவிஜ்ரும்பிதங்களிலோ இது ஏகதேசமான விஷயம். இதை ஒரு விஷயமாக நாம் எடுத்துக் காட்டுவதும் இதற்கு மறுப்புரைப்பதும் வீணன காரியம். ஆயினும் இதை என் எடுத்துக் காட்டினேமென்றால், ஸ்ரீகாஞ்சீ க்ஷேத்ரத்தில் இவர்க்குண்டான

ஈர்ஷ்யா பரீவாஹம் வெகு சில்லரையான விஷயங்களிலும் இவரை வைதண்டிகராக்குவிக்கின்றது காண்மின்! என்று காட்டுதற்கே யாம். தேசிகனுக்குத் தூப்புல்வேதாந்த தேசிகனென்று காஞ்சீபுரத்தையிட்டுத் திருநாமம் வழங்குமேற்றத்தைப் பொறுக்கமாட்டாத தன்மையே இவரை இந்த விசாரத்தில் தூண்டிற்றும் விபரீத நிர்த்தாரணம் செய்வித்ததும். 'தூப்புலென்று திருவஹீந்திரபுரத்திற்குப் பெயர்' என்றே இவர் எழுதிவைத்துவிடலாமே.

ஒரு வேடிக்கை பாருங்கள்:—இச் சரித்திர விமர்சத்தின் முடிவு பாகமானது இவருடைய உத்ஸாஹவிவேக ஞான காஷ்டையில் நின்றிருக்கிறது. தேசிகன் திருநாட்டுக் கெழுந்தருளினது திருவரங்கத்தில் அன்று; திருவயிந்திரபுரத்தில்தான் என்று ஸ்தாபிக்கத் தலைகீழாக நட்டுக்கொள்ளுகிறார். ஸ்வாமி ஸ்ரீரங்கத்தில்தான் பரமபதித்தாரென்று குருபரம்பராதிகளில் நிரூபிக்கப் பட்டிருக்கிறதாம். அதையும் தாமே எழுதுகிறார். ஆனால் அவர்கள் ஔசித்யம் நோக்காமல் ஏதோ தவறுதலாய் எழுதிவிட்டார்களாம். தாம் திவ்ய சக்ஷுஸ்ஸு பெற்று அற்புதமாக ஆராய்ந்து உண்மையுரைக்கின்றாராம். இற்றைக்கு அறுநூறு வருஷங்களுக்கு முன்பு நடந்த விஷயத்தை முன்னோர்கள் ஒருவாறு எழுதி வைத்திருக்க அதை தூஷித்துவிட்டு, விவேகிகள் இசையக்கூடிய ஒரு யுக்தியுமில்லாமல் தாமொரு தாந்தோன்றி நிர்த்தாரணம் செய்வது இவர்க்கன்றி மற்றொருவர்க்கும் அடாது. தேசிகன் மூத்ரஸங்கா பஹிஸ்ஸங்கா விஸர்ஜந நிஷ்டீவந ப்ரக்ஷாளநாதிகள் செய்தருளினதும் திருவயிந்திரபுரத்தில்தானிருக்கவேணும், அதுவும் இவர் தம் வீட்டுப் புழைக்கடையிலே தான் ஆயிருக்கவேணும் என்று எழுதவும் இனி ஸந்நத்தராகுவர் போலும்.

ஆரியர்காள்! இவர் தாமெழுதுகிற சரித்திரநூல் எந்த முன் புஸ்தகத்தை அவலம்பித்து எழுதப்படுகிறதென்பது விளங்கவேண்டும். உபோத்காதத்தில் (பக்கம் 129ல்) வைபவ ப்ரகாசிகை முதலான சில நூல்களைக் குறிப்பிட்டுள்ளார். அவற்றில் பரஸ்பர விரோதங்கள் இருப்பதாகவும் தாமே ஸ்பஷ்டமாக எழுதுகிறார்.

எந்த விஷயமும் ஒரு புஸ்தகத்தில் கூறியபடி மற்றொரு புஸ்தகத்தில் கூறப்படவில்லையென்று காட்டுகிறார். ஸமகாலீநர்களான சில விமர்ஶகர்கள் எழுதியுள்ள சரித்திரமும் ஸ்வாமி தேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளோடுவிரோதிக்கின்றதென்றும் கூறியிருக்கிறார். ஆகவே இவர்க்கு முன்னோர்கள் எழுதிய ஒரு புஸ்தகமும் இவர்க்கு ப்ரமாணதயா உபாதேயமாகவில்லையென்று நன்குவிளக்கப்பட்டதாயிற்று. நையாயிகர்கள் ஒருநியாயம் சொல்லுவர்கள்—“த்வயோர் விப்ரதிபந்நாவிஷயே த்வயோர் ஸந்தேஹஸ்ஸ்யாதி” என்று. அப்படியே ‘நம்முடைய நிர்ணயணந்தான் ஒன்று இருக்கட்டுமே’ என்று இவர் துணிந்து எதையும் ஸூக்ஷ்மமாக எழுதிமுடிக்க இழிந்துவிட்டார். திருநாமமோ ‘தேசிகதர்சநாசார்யர்’ என்று விலக்ஷணமாகக் கொடிகட்டிப் பறக்கிறது. தாம் எது சொன்னாலும் எது எழுதினாலும் யாரும் தலையாட்டவே கடமைப்பட்டவர்களென்றும் நிச்சயித்துக்கொண்டார். அந்தோ! கலிக்கேடு.

தொட்ட விஷயத்தை ஒருவாறு முடிப்போம். தேசிகன் திருவயிந்திரபுரத்தில்தான் திருநாட்டுக்கெழுந்தருளினார் என்பதை ஸாதிக்க இவர் எழுதுகிற ஆச்சர்ய யுக்திகளை அநுவதிக்கவும் லஜ்ஜிக்கிறேன். தேசிகன் கடைசியாக எழுதின க்ரந்தம் விரோத பரிஹாரமாம். அதில் அஹீந்திர புரதேவநாதனைப் பற்றின மங்கள ச்லோகங்கள் உள்ளதனால் அது திருவஹீந்திரபுரத்திலேயே அருளிச்செய்யப்பட்டிருக்கவேணுமாம். அதற்குப் பிறகு தேசிகன் ஸ்ரீரங்கமெழுந்தருளுகைக்குப் போதுமான அவகாசமில்லையாம். விரோத பரிஹார க்ரந்தம் ஸ்ரீரங்கத்திலேயே அருளிச்செய்யப்பட்டதென்றும் தேவநாதனை நெடுநாளாகப் பிரிந்திருந்தமையால் அவனுடைய ஞாபகம் வர அப்பெருமான் விஷயமான மங்களம்செய்யப்பட்டதென்றும் ஆகவே ஸ்ரீரங்கத்திலேயே தேசிகன் பரமபதித்தாரென்றும் சிலர் சொல்லுகிறார்களாம். அது பொருத்தமுடையதன்றாம், ஏனென்றால், [இதைத்தான் விவேகிகள் ஊன்றி நோக்கவேண்டும்:] ஒரு திவ்ய தேசத்திலிருந்துகொண்டு மற்றொரு திவ்ய தேசத்து எம்பெருமானை ஸ்மரிப்பது அபசாரம் என்று சொல்லப்பட்டிருக்கிறதாம். ஆதலால் தேசிகன்

ஸ்ரீரங்கத்திலிருந்து கொண்டு அயிந்தை நாதனை ஸ்மரித்திருக்கவே மாட்டாராம்; அயிந்தையிலிருந்து கொண்டேதான் தேவநாதனை உபச்லோகித்து விரோத பரிஹாரமெழுதினாராம்; அது எழுதி முடிந்ததும் அங்கேயே பரமபதித்தாரென்பது தான் மிகவும் பொருத்தமுடையதாம். அஹஹ! என்ன நிருபண அழகு!. என்ன ஸாஹஸ-பரிக்ஷணவிசக்ஷணதை!

ஒரு திவ்ய தேசத்திலிருந்துகொண்டு மற்றொரு திவ்ய தேசத்தெம்பெருமானை ஸ்மரிப்பது அபசாரமென்று எந்த தர்ம சாஸ்த்ரத்தில் நியமிக்கப் பட்டுளதோ தெரியவேணும். ஸ்ரீ ரங்கநாதன் விஷயமான அபீதிஸ்தவம் ஸ்வாமியால் திருநாராயணபுரத்திலிருந்து அருளிச்செய்யப்பட்டதென்று இவரே (பக்கம் 121ல்) எழுதுகிறார். ஆழ்வான் திருமாலிருஞ் சோலையிலிருந்துகொண்டு கோயில் திருமலை பெருமாள் கோயிலெம்பெருமான்களை உபச்லோகித்திராநின்றார். எனோ இவர் இப்படியெல்லாம் வ்யாஹத ஹாவ,ணங்கள் செய்கிறார். கதாஜநாவஸரமாக ஸ்ராஜத்திற்குச் சில பெருமைகளை ஏறிடவேண்டித் தாம் பிடித்த பிடியை ஸாதிக்கவேணுமென்ற ஆக்ரஹமானது கைபோன போக்கெல்லாம் எழுதுவிக்கும்போலும். ஸ்வாமிதேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளுள் விரோத பரிஹாரமே சரமக்ரந்தமென்பதும் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரமே அதற்கு அவ்யவஹிதபூர்வமென்பதும் மிகவும் அஸம்பவமான ஹாஷணமே. ஸ்ரீ ஸூக்திகளின் வளவரவபக்ஷம் இவர் காட்டியிருப்பது பெரும்பாலும் பொருந்தாது. ஆசார்யாதிகள் செய்யவேண்டிய விமர்சக்ருத்யத்தில் இவர் எதுக்குத் தலையிட்டுத் திண்டாடவேண்டும். ஸாரஸாரம் என்கிற தேசிகரஹஸ்யத்தின் அர்த்தத்தையே இவர் தெரிந்து கொள்ளாமல் அதை ஒரு மூலையில் கொண்டு முடக்கிவைத்தார்.

ச்லோ॥ ஸ்வணக்ஷணநிர்மாணே தக்ஷாவா நாவிதோபவா।
யதா வ்யாஹியதாணஸ்ய ஹாஸ்யோஹவதி ஹோஸ்யா॥

ப்ராமாணிகர்களே!, இவருடைய சரித்ர விமர்சத்தின் உபக்ரமோபஸம்ஹாரங்கள் இவ்வளவு ஆபாஸமானவை யென்று விளங்கவைத்தேன். நடுவுள்ள பாகமும் இதற்கு அப்பனாகவே யிருக்கு

மென்பது இனிச்சொல்லாமலே விளங்கும். ஆனாலும் முக்கியமாகச் சில விஷயங்களிலுள்ள அஸாமஞ்ஜஸ்யத்தை யெடுத்துக் காட்டுகிறேன்.

தேசிகன் க்ரந்த ப்ரவசநம் செய்தருளத் தொடங்கினது பெருமாள் கோயிலில் என்று ஏற்கனவேயுள்ள சரித்திர நூல்கள் கூறுகின்றன வென்று தாமே கூறி அதை யுக்த்யாபாஸங்களால் கண்டித்துத் திருவஹீந்திரபுரத்தில்தான் அது உபக்ரமிக்கப் பட்டிருக்கவேண்டுமென்று (பக்கம் 131ல்) எழுதுகிறார். அயிந்தை நகர்க்குவந்து மந்த்ரஸித்தி பெறுவதற்கு முன்னம் ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்திருக்க முடியாதென்றது தேசிகனுக்கு ஒரு குறை கூறினபடியேயாம். தேசிகனுக்குண்டான ஞானப்பெருமைகளெல்லாம் ஹயக்ரீவோபாஸநவைத்தினால் தானென்று இந்தச் சேட்லூரர் திருவுள்ளம்பற்றுகிறார். இவர்க்கு உண்மையான தேசிகபக்தியிருந்தால் இங்ஙனே எழுத ஒருபோதும் கைவந்திராது. * கிளிப்பிள்ளையைப் பழக்கி வைக்குமாபோலே கிடாம்பியப்புள்ளார் பழக்கி வைக்கையாலே தெளிவு பெற்றதாக ஸ்வாமி தேசிகன் ஸாதித்திருக்க அதற்கு மாறாக உபாஸனையினாலேயே உணர்த்தியை ஊர்ஜிதமாக்கிக் கொண்டாரென்று புலம்பும்படி இவர் எழுதிவைப்பது தேசிகனுக்கு க்ருதக்நதையையே ஸ்தாபித்தபடியாம். * வெள்ளைப்பரிமுகர் தேசிகராய் விரகாலடியோமுள்ளத்தெழுதிய தோலையிலிட்டனம் என்று தேசிகன் பணித்ததும் ஒன்றான ஹயக்ரீவர் தாமே கிடாம்பியப்புள்ளாராய் வந்து உபதேசித்து உய்வித்தபடியைச் சொல்லிற்றேயன்றி வேறில்லை. இது நிற்க. தேசிகன் கச்சியிலிருந்த காலத்தில் அப்புள்ளார் ஜீவித்திருந்தபடியால் அப்போது தேசிகன் ப்ரவசநம் செய்திரார் என்றதும் பிசகு. ஆசார்யர்களால் நியமிக்கப்பட்டு சிஷ்யர்கள் அப்போதே ப்ரவசநம் செய்வது ஶாஸ்த்ர ஸம்மதமும் அநுஷ்டாந ஸித்தமுமாம். எம்பெருமானார்—ஆழ்வான் முதலானாரைக் கொண்டும், பட்டர் நஞ்சீயரைக் கொண்டும், நஞ்சீயர் நம்பிள்ளையைக் கொண்டும் அப்போதே ப்ரவசநங்கள் நடத்திப்போந்தது ப்ரமாணஸித்தம். மேலும் தேசிகனுடைய ப்ரவசநத்திற்கு இடையூறாக அப்புள்ளார் கச்சியிலேயே தேசிகனோடு கூடவே யிருந்தாரென்னவும் ப்ரமாண மொன்று

யில்லை. ஆகவே முன்னைய நூல்களில் மொழிந்தபடி காஞ்சியி லேயே தேசிகனுடைய ஸம்ப்ரதாய ப்ரவசநோபக்ரமமென்பதைச் சேட்லூரார் மறுப்பது தாமிமோகம். தேசிகனுடைய அவதாரமே அயிந்தையில் தானென்று ஸாதித்துவிடவும் யுக்திகள் யோஜித்துக் கொண்டிருக்கிறாராமிவர். விரைவில் வெளிவருமாம்.

வரதராஜ பஞ்சாசத்துக்கு முந்தியே ந்யாஸதசகமருளிச் செய்ததாகப் ஸங்க்ஷேபவ்யாக்யாநத்திற் கூறப்பட்டிருப்பதாகச் சொல்லி அநாவச்யகமாக அதைக் கண்டித்து விபரீதமாக எழுதியிருப்பது வைதண்டிகவிபூஷணம். வெகு சில்லரையான விஷயங்க ளிவையென்று விடத்தக்கவை.

கவிதார்க்கிகஸிம்ஹம் என்கிறவிருது ஸ்ரீரங்கநாதனால் கொடுக்கப்பட்டதாக முன்னைய சரித்திர நூலில் உள்ளதாம்; அது உசித மல்லவென்றும் திருவயிந்தையில் தேவநாதனால் கொடுக்கப்பட்ட தென்பதே உசிதமென்றும் (பக்கம் 134ல்) எழுதுகிறார். இரண்டும் ஸ்ரீதேசிக திவ்ய ஸூக்தி விருத்தம். ஸ்வாமி தாமே ஸ்ரீபாஷ்யாவஸாநத்தில் * க்ஷமணி ஸதஸி ஸந்நிய ஸஹஸ்ரீ கவிகதககேஸரீ வேதாந்தாசார்யோ வேங்கடநாத: என்று ஸாதித்திருப் பதால், ஒரு எம்பெருமானும் கொடுத்த விருதன்று இது, ஸத ஸ்யர்களான ஸத்துக்கள் சாற்றின விருது என்பதே பொருந்தும். தேசிகனுடைய ஸ்ரீ ஸ்துதியானது ஸ்ரீரங்கத்தில் அருளிச் செய்யப்பட்டதென்று வைபவ ப்ரகாசிகாதிகளிற் கூறியிருக்கிற தாம். திருவயிந்தைத் தாயாருக்கு ஸ்தோத்ரமொன்றுமில்லாமை யினாலே இதைத் திருவயிந்திரபுரத்திலருளிச் செய்ததாகத் தாம் நிச்சயிக்கிறாராம். பெருந்தேவித் தாயார் விஷயமாகக் கச்சியிலவ தரித்ததென்று பெரியோர்கள் நிச்சயிக்கிறார்கள். ப்ரஹ்மசாரி ஐதிஹ்யம் இதற்கு ஸங்கதமான ஸம்வாதம்.

(பக்கம் 137ல்) **க்ருஷ்ணமிச்ரநிரஸநம்** என்ற தலைப்பின்கீழ் எழுதுகிறார்—; “ஸ்வாமி க்ருஷ்ணமிச்ரனை ஜயித்ததும் அவன்தா னெழுதிய ப்ரபோத சந்திரோதய நாடகத்தைக் காட்டினதாக வைபவப்ரகாசி காதிகளில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பிரபோத சந்திரோதய நாடகத்தை எழுதிய க்ருஷ்ணமிச்ரன் பன்னிரண்

டாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதிமூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இருந்தவனென்றும் அந்த நாடகம் கலி 4301 (கி. பி. 1200) வருஷத்தில் எழுதப்பட்டதென்றும் விமர்சகர்களினாலே நிஷ்கர்ஷிக்கப்பட்டிருப்பதினால் அந்தக் கவி ஸ்வாமியுடன் நேரில் வாதம் செய்திருக்கமுடியாது. ஆகவே அதே பெயரையுடைய கவி ஸ்வாமியுடன் வாதம் செய்திருக்கவேண்டும். அவன் அந்த வம்சஸ்தன் என்பது பொருத்தமாயிருக்கிறபடியினால் அப்படியே கீழ் நிரூபிக்கப்பட்டது—'' என்று.

ஆரியர்காள்! இந்த ஆராய்ச்சியை இந்தச் சேட்லூரார் தாமே செய்துவிட்டாரென்று நினைக்கிறீர்களோ? உண்மை கேண்மின். ஸ்ரீ காஞ்சீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமி தமது **பாதுகாஸஹஸ்ராவதார தத்துவ** நூலில் (பக்கம் 13ல்) இவ்விஷயத்தை விவரித்தெழுதியுள்ளார். அதற்குமுன் தேசிகன் வைபவம் எழுதியிருக்கின்ற பலபேர்களும் ஆராய்ச்சியில்லாமலே ஸம்ப்ரதாய பரம்பரையாகவே க்ருஷ்ணமிச்ரனுக்கும் தேசிகனுக்கும் நேரில் வாது நடந்ததாகவே எழுதிவந்தார்கள். இந்தச் சேட்லூராரும் இதற்குமுன் அந்தக் கதையை அட்டஹாஸத்துடன் அம்பலமடித்துக்கொண்டிருந்தவரே. அண்ணங்கராசார்யஸ்வாமி அசைக்கமுடியாதபடி உண்மையை விளக்கிவைத்த பின்பு அதன்மேல் வாய்திறக்க வழியின்றி இவ்வழியிலிழிந்தாரிவர். க்ரமேண இங்ஙனமே மற்ற விஷயங்களிலுமிவர் மயக்கம் சிதைந்து நற்றெளிவு பெறுவாரென்று ஆசாஸிக்கிறோம். எந்த க்ருஷ்ண மிச்ரனென்பவனும் நேரில் வந்ததுமில்லை வாது நிகழ்ந்ததுமில்லை. ஏற்கனவே ப்ரசாரத்திலிருந்த ப்ரபோத சந்திரோதயத்திற்கு மறுப்பாக தேசிகன் தாமொரு நாடகம் நல்க விரும்பி ஸங்கல்ப ஸூர்யோதய மிட்டருளினரென்னுமித்தனையே தத்துவம். ப்ரபோத சந்திரோதயம் பெரிய வாச்சான் பிள்ளை காலத்திலேயே ஸம்ஸ்தானங்களில் வந்து பரவினமை அந்நாடகத்திலுள்ள வொருச்லோகத்தைத் $ தனி ச்லோகியில் உதாஹரித்துள்ளதனால் விளங்குமன்றோ.

$ த்வைபாயனஸூக்த்யாதி ச்லோக வியாக்கியானத்தில் * ஸஹ ஸ்ராவ்ய ஜாநாதி க்ருஷ்ணமிச்ரநாடக ஸ்லோகோதாஹரணம் காண்க.

(பக்கம் 138ல்) பாதுகாஸஹஸ்ர வ்ருத்தாந்தம் என்ற தலைப் பின்கீழ் பழைய கந்தப்புராணங்களை யெழுதியிருக்கிறார். விபவ வருஷத்திலேயே ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி வெளியிட்டருளின பாதுகாஸஹஸ்ராவதார தத்துவ நூலை இந்தச் சேட்லூரார் பல காலும் படித்துப் பார்த்திருப்பவரே. அதில் எழுதப்பட்டுள்ள விஷயங்கள் யாவும் பிரமாணகதிக்கு ஒத்தவையென்றும் ஒருவிதத் திலும் அசைக்கமுடியாதவை யென்றும், சில நாளாகச் சிலர் கல் பித்து ஓதிவருகிற வீணான ஐதிஹ்யத்தை இனி நாமும் ஓதிவரத் தகாதென்றும் தம்முள் நிச்சயங்கொண்டு, தாம் செய்யக்கூடிய பிரஸங்கங்களை இங்கே வெகு தூரத்தில் இவர் விட்டிட்டிருந்த போதிலும் "கற்பூரப்பாத்தி கட்டிக் கத்தூரி எருப்போட்டுக் கமழ் நீர் பாய்ச்சிப், பொற்பூர உள்ளியினை விதைத்தாலும் அதன் குணத்தைப் பொருந்தக்காட்டும்" என்ற ஆன்றோர் சொற்படி நிலைபெயரகில்லாத தமது இயற்கைத் தீயகுணத்தினால் அந்த அஸம்பத்தமான ஐதிஹ்யத்தையும் ஒருவாறு காட்டிவைக்க விரும்பி, "இந்த விருத்தாந்தம் குருபரம்பரையில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது," என்ற தலைப்பின் கீழ் பிறருடைய வாக்கிய ராசிகளாக ஒரு பெருங்கதையைக் குறிப்பிட்டிருக்கின்றார். அதற் குப் பிறகு, "ஆனாலும்" என்று தொடங்கித் தம்முடைய வாக்கிய மாக 7, 8 வரிகள் எழுதியுள்ளார். அதை ஊன்றி நோக்குமிடத்து குருபரம்பரையில் உள்ளதாகக் கீழே தாம் எடுத்துக் காட்டிய ஐதி ஹ்யம் பொருந்தாததென்று இவர் தம்மாலேயே நிராகரிக்கப்பட் டதுபோல் தோற்றுகின்றது. ஆயினும் அந்த அபிப்பிராயத்தை இவர் ஸுஸ்பஷ்டமாகக் காட்டாமல் அசடான வாக்கியங்களை யெழுதி மெழுகியிருப்பதனாலும், அந்தத் தப்பான ஐதிஹ்யத்தை மூன்று பக்கங்கள் நிறைய எழுதிவைத்து மூடர்களை வஞ்சித்திருப் பதனாலும் இங்கே நாம் பாதுகாஸஹஸ்ர அவதாரத்தைப் பற் றின உண்மையை விவரிக்க வேண்டியதாயிற்று.

இந்தச்சேட்லூரார் குருபரம்பரை யென்று உதாஹரிக்கிறபுத்த கம் யார் இயற்றியது என்கிற விஷயத்தை ஆராயப்புகுவோமாயின் இது மிகவும் நவீனமாகக் கல்பிக்கப்பட்ட ஓர் அஸங்கதச் சுவடி யென்று இவர் தம்மாலேயே ஊர்ஜிதப்படுத்தப் பட்டிருக்கிறது.

பிராசீனமாக ஏற்பட்டிருந்த குருபரம்பராப் பிரபாவ நூல்கள் இரண்டும் முன்னமே லோபித்துப் போயிற்றென்றும் பிறகு கல்பித்து அச்சிடப்பட்டு இப்போது காணப்படுகின்ற குருபரம்பரா பிரபாவம் பிரமாணமாக அங்கீகரிக்கப்படவில்லை யென்றும் முகவுரையின் 8-வது பக்கத்தில் இவர் ஸ்பஷ்டமாக எழுதியுள்ளார். ஆகவே இவருடைய ஸம்பிரதாயத்தில் பிராமாணிகமான குருபரம்பரா பிரபாவநூல் கிடையாதென்பது இவராலேயே ஸ்திரீகரிக்கப்பட்டிருக்கும்போது அந்த அபத்த பஞ்சாங்கத்தின் அஸங்கதத் தன்மையை நிரூபிக்கவேண்டிய பரிச்ரமம் நமக்கு இல்லையாயிற்று. தவிரவும், ஷை குருபரம்பரையிலுள்ள வரலாறுகளைப் பலவிடங்களில் இவரே இந்தச் சரித்திர நூலில் கண்டித்தும் எழுதியிருக்கிறார். ஆக, ஸர்வப்பிரகாரத்தாலும் வஞ்சகச் சுவடியாகிய அந்த குருபரம்பரையில் ஒருவழிப்போக்கன் எழுதிவைத்த அந்த அஸங்கத வரலாற்றை இவர்தாம் உதாகரித்துக்காட்டியது வீண். உண்மையில்இந்தச் சேட்லூரர் பிராமாணிக சிகாமணியா யிருந்தால், பாதுகாஸஹஸ்ரம் என்றதலைப்பின்கீழ் இவர்என்ன எழுதியிருக்கவேண்டுமென்றால் அண்ணங்கராச்சாரிய ஸ்வாமியின் பாதுகாஸஹஸ்ராவதார தத்துவ நூலின் ஸாரப்பொருளைத் தொகுத்தெழுதி யிருக்கவேண்டும். உலகை இவர் வஞ்சித்துவிட்டாலும் நாம் உறங்குகிறோமல்லோமாகையால் அவ்வுண்மையை இங்குக் காட்டுகின்றோம். பாதுகாஸஹஸ்ராவதார தத்துவ மென்ற அந்த நூலானது வடமொழியி லியற்றப்பட்டு 28 பக்கங்கள் கொண்டதாக அச்சியற்றப்பட்டுள்ளது. அந்நூலின் தாத்பர்யம் தமிழர்க்கும் சுருக்கமாகத் தெரியுமாறு அதுதன்னிலேயே அநுபந்தமாகத் தமிழ் வசனச் சுருக்கம் வெளியிடப்பட்டுள்ளது. அதனையே இங்கு நாம் எடுத்துப் பிரசுரிக்கின்றோம்;———(அதாவது;—)

"ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் அருளிச்செய்துள்ள ஸ்தோத்திரங்களுள் 'பாதுகாஸஹஸ்ரம்' என்பது மொன்று.

இது அழகிய மணவாளனுடைய திருவடி நிலையை ஆயிரம் ச்லோகங்களால் அற்புதமாக வருணிக்கப்பிறந்த ஸ்தோத்திரம். ஸ்ரீதேசிகன் இதனை அருளிச்செய்வதற்கு யாதுகாரணம்? என்று விவரிக்கப் புகுந்த இதா ஸம்பிரதாயஸ்த்தர்கள் எவ்வாறு எழுதிவைத்திருக்கிறார்களென்றால்,—திருவரங்கம் பெரியகோயிலில் வேதாந்த தேசிகன் கவிதார்க்கிக சிங்கமென்று விருது

வஹித்து வாழ்வதிற் பொறுமைகொண்டு ஸ்ரீபிள்ளை லோகாசாரியருடைய திருத்தம்பியாரான வாதிகேஸரி ஸ்வாமி என்பவர், தாமே மஹா கவியென்றும் தேசிகனுக்கு அந்த விருது தகாதென்றும், ஓரிரவில் ஒரே விஷயத்தைக் குறித்து ஆயிரம் ச்லோகங்கள் கவிபண்ணத் தொடங்கவேண்டியது, அதில் வெற்றிபெறுமவர்க்கே விருது நிலை நிற்கத்தக்கது' என்றும் மிக்க செருக்குடன் உரைத்ததாகவும், தேசிகனும் 'அப்படியேயாகுக' என்றிசைந்தபின், வாதிகேஸரி ஸ்வாமி தாம் ஸ்ரீரங்கநாதனுடைய பாதாரவிந்த விஷயமாக ஆயிரம் ச்லோகம் இயற்றுவதாகவும் தேசிகன் அதனிலும் கீழ்ப்பட்ட பாதுகையைப்பற்றித் தாம் ஆயிரமியற்றுவதாகவும் மிக்கபெருஞ்சபை நடுவே பிரதிஜ்ஞை செய்துகொண்டு இருவரும் தங்கள் திருமாளிகையிலே சென்று சேர்ந்ததாகவும், வாதிகேஸரி ஸ்வாமி மாலைப்பொழுதே தொடங்கிப் பல சிஷ்யர்களை உடன் வைத்துக்கொண்டு எழுதத் தொடங்கிப் பொழுதுவிடியுமுன் இருநூறு முந்நூறு ச்லோகங்களே எழுதவல்லராயினரென்றும், அவையும் சுவையற்றிருந்தனவென்றும், தேசிகனோவென்னில் யோகத்தாலும் யோக நித்திரையாலும் முன் யாமங்களைப் போக்கிவிட்டுப் பின் யாமத்திலே பாதுகாஸஹஸ்ரமருளிச்செய்து தலைக்கட்டித் திருவோலக்கத்திலே அரங்கேற்றித் தமது விருதை நிலை நிறுத்திக் கொண்டாரென்றும், இன்னும் பலவகையான இழிவுரைகளை யிட்டும் அவரவர் நெஞ்சில் தோன்றியவாறெழுதி வெளியிட்டுள்ளார்கள். தென்னாசார்ய ஸம்பிரதாயத்தில் வாதிகேஸரி ஸ்வாமி என்பவர் ப்ரஸித்த பண்டிதராக எழுந்தருளியிருந்ததுண்டு, திருவாய்மொழியின் பன்னீராயிரப்படி உரை, திருவிருத்த ஸ்வாபதேசவுரை, தத்வதீபம், தீபப் பிரகாசம், ரஹஸ்யத்ரய காரிகாவளி முதலிய சில கிரந்தங்களருளிச்செய்தவரும் '**அழகிய மணவாளச்சீயர்**' என்னுந் திருநாமம் பூண்டவருமான ஆசிரியரே அந்த வாதிகேஸரி என்பார். இவரைப் பிள்ளை லோகாசார்யருடைய திருத்தம்பியாராக எழுதவதொன்றே ப்ரதிபக்ஷிகளின் ப்ரம மிகுதியைக் காட்டவல்லதாம். ஆசார்யஹ்ருதயம், அருளிச்செயல் ரஹஸ்யம், திருப்பாவை ஆறாயிரப்படி வியாக்கியானம் முதலிய திவ்ய க்ரந்தங்களருளிச்செய்தவரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்பவரே பிள்ளை லோகாசார்யருடைய திருத்தம்பியாராவர். இவர் வாதிகேஸரி என்னும் விருது வஹித்தவரல்லர். வாதிகேஸரி ஸ்வாமியோவென்னில், தம்முடைய க்ரந்தங்களில் அடிக்கடி வேதாந்த தேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளை உதாஹரிக்கக் காண்கையால் இவர் தேசிகனிற்காட்டில் மிகவும் இளையவர் என்பது விளங்கும். ஆகையாலே இவர்க்கும் தேசிகற்கும் ப்ரதிஜ்ஞாபந்த நிகழ்ச்சி கூறுவது பொருத்தமுடையதன்று. சிலர் கூறுவர்;—"வாதி கேஸரி என்றது பிசகுதான்; அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரை ப்ரதிபக்ஷியாகக்

கொண்டே பாதுகாஸஹஸ்ரம் பிறந்தது''—என்பர். பல நூற்றாண்டுகட்கு முன் நடந்தவிஷயத்தை விளம்புவதென்றால் அவரவர் மனம்போனபடியே விளம்புதல் தகாது. முன்னோர்கள் பலர் வரைந்துள்ள நூல்களை ஆதாரமாகக்கொண்டு விஷயங்கள் சொல்லுவதே ப்ராமாணிகர்களுக்குப் பாங்கு. தேசிகனுடைய வைபவத்தை விரிவாக வருணிக்கப்பிறந்த 'ஆசார்யசம்பூ' என்னும் ஸம்ஸ்க்ருத நூலிலும், சண்டமாருதம்—தொட்டயாசாரியர் இயற்றியதாகச் சொல்லிக்கொள்கிற வேதாந்த தேசிக வைபவ ப்ரகாசிகா ஸ்தோத்ரத்திலும், முன்னோர்கள் இயற்றிய பாதுகாஸஹஸ்ர வ்யாக்யாந அவதாரிகையிலும் கூறப்படாததும், கூறப்பட்டுள்ளதற்கு முரண்பட்டதுமான ஐதிஹ்யத்தை நவீனர்கள் துராக்ரஹத்தாலே கல்பித்து எழுதிவிடுமளவால் ப்ராமாணிகமான விஷயம் பழுதுபடாது. சிறந்த மஹான்களுடைய திருவோலக்கத்திலே ப்ரதிஜ்ஞைபண்ணி இப்பாதுகாஸஹஸ்ரம் பண்ணினதாக தேசிகன் தாமே அருளிச்செய்கிற ஒரு ச்லோகத்தின் வியாக்கியானத்திலாவது முன்னோர்கள் இந்த ஐதிஹ்யத்தை எழுதிவைத்திருப்பரேல் நம்பலாம். அங்ஙனமுமில்லை. யாரோவொரு கவி தேசிகன் பக்கல் வந்து செருக்குடன் சில வார்த்தைகள் சொன்னதாகவும் அவனை எதிரிட்டுக்கொண்டு பாதுகாஸஹஸ்ரம் பணித்ததாகவும் இவ்வளவே ஆசார்யசம்பூ முதலிய பழைய வைபவநூல்களிற் கூறப்பட்டுள்ளது. இந்த எதிரீட்டுக்கு இலக்கானவர் புறமதத்தவரே யன்றி ஸ்ரீராமாநுஜ ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தார் யாருமல்லர். நம்பூர்வாசார்ய பரம்பரையில் ஒரு ஆசார்யரும் செருக்குக் கொண்டவராகவோ பொறாமையுள்ளவராகவோ ஆசார்ய பதவி வஹித்தாரல்லர். எம்பெருமானார் தர்சநத்திற் படிந்த ஆசிரியர்கட்குப் பரஸ்பரம் மனவருத்தப்படவும் போர்புரியவும் ப்ரஸக்தியேயில்லை. சமம் தமம் முதலிய எண்ணில் பல் குணங்கட்குப் பிறப்பிடமாயிருந்த பூர்வாசார்யர்களும் நம்மைப்போலே கோபதாபங்கட்குக் கொள்கலமாயிருந்தனரென் றியம்புமவர் விவேகிகளாவரோ. பிறர் பொறாமை கொள்ளத்தக்க விசித்திரமான யோக்யதை பெற்றிருந்த தேசிகனிடத்தில் மற்ற ஆசார்யர்களுக்கு அஸூயை அவர்ஜநீயமாகவே யிருந்ததென்றுகொண்டாலும் ''நாண்பெரியோமல்லோம் நாம் நன்றுந்தீதும் நமக்குரைப்பாருளரென்று நாடுவோமே'' இத்யாதிகளான பல பல செஞ்சொற்களால் நைச்யாநுஸந்தாந பரமகாஷ்டையிலே நின்ற தேசிகன் ஆத்மகுணப் பெருமைக்கு விருத்தமாக நடந்துகொண்டாரென்றல் அவர்க்குப் பெருத்த தூஷணமேயன்றி பூஷணமாகமாட்டாது. முக்கியமான ஸித்தாந்த ஸ்தாபனத்திற்காக மாத்திரம் புறச்சமயிகளோடு வாதப்போர் நிகழ்த்துதல் தோஷமன்றென்றும் அது கைங்கர்ய ரூபமாகவே ஆகுமென்றும் சொல்லப்படாநிற்க, கவித்திறத்தில் வெற்றி பெறுதற்காக ஸமான ஸம்ப்ரதாயஸ்தர்களுடனே எதிரீடு

கொண்டாரென்னு மிப்பேச்சு தேசிகனுக்குப் பரமலாகவத்தையே நிலைநாட்ட வற்ரும். ஆளவந்தார் முதலானோர் "ந வயம் கவயஸ்து கேவலம்" இத்யாதிகள் பேசினதும் ஸித்தாந்த ஸ்தாபநத்திற்காகவே; அதுவும் புறச்சமயிகள் திறத்தே. கவநத்தில் மேன்மை பெறுவதென்பதை நம் பூருவர்கள் ஒரு பொருளாகவே மதித்திலர். கவி விருதுபெற்றோ, கவி விருதுபெற ஆவல்கொண்டோ, கவித்திறத்தால் பிறரை வெல்ல விரும்பியோ ஒரு பூர்வாசார்யரும் விளங்கவில்லை. ஆளவந்தார் ஆழ்வான் பட்டர் முதலிய பூர்வாசார்யர்கள் அமுதக்கடலான ஸ்தோத்ரங்களை அருளிச்செய்துவைத்தும் ஒரு மூலையிலாவது தமது திருநாமத்தைக் குறிப்பிடாமலும் கவியென்று தம்மைக் காட்டிக்கொள்ளாமலு மிருந்தனர். எம்பெருமானார், திருக் குருகைப்பிரான் பிள்ளான், எங்களாழ்வான், நஞ்சீயர், நம்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர், அவரது திருத்தம்பியார், ச்ருதப்ரகாசிகாபட்டர் முதலானோர் ஸர்வஜ்ஞர்களாயும் ஸர்வ சக்தர்களாயுமிருந்தும் கவிதாமார்க்கத்தில் கருத்தூன்றுதலின்றியே வெவ்வேறு வகையான போதுபோக்குடையரா யிருந்தனர். இப்படிப்பட்ட ஆசார்ய பரம்பரையில் வருகின்ற மஹான்கள் உபாஸநப் பெருமையினால் கவிதைகள் செய்துகொண்டும் கவிவிருது வஹித்துக்கொண்டும் போந்தவொருவரோடே மார்பு தட்டிப் போர்புரியவருவதற்குக் கனவிலும் பிரஸக்தியில்லை. ஸத்ஸம்ப்ரதாயஸ்தர்களான ஆசார்யர்களைப் பழித்துரைப்பதிலேயே நோக்குடையரான நவீனர்கள் மனம்போன போக்கெல்லாம் எழுதிவைத்துள்ள பொய்யான ஐதிஹ்யங்களால் மஹான்களின் மேன்மைக்குக் குறையொன்றும் வாராது. ஸ்ரீமத் பரம ஹம்ஸேத்யாதி தேரழுந்தூர் ஸ்வாமி யென்னும் ஸ்ரீரங்கமாண்டவன் ஸந்நிதியிலே ஓரடைவில் இது விஷயமான ப்ரஸ்தாவம் விளைந்தபோது அவ்விடத்து நியமனங்கொண்டு பாதுகாஸஹஸ்ராவதார தத்துவமென்னும் இவ்வடமொழிநூல் வெளியிட நேர்ந்தது. ஸ்ரீ தேசிகனருளிச் செய்த ந்யாய பரிசுத்தி யென்னும் நூலைத் தேவநாகரலிபியில் அச்சிடுவிக்கும்போதும், பாதுகாஸஹஸ்ரத்தை ஸம்ஸ்க்ருத வியாக்கியானத்துடன் தேவநாகர லிபியில் அச்சிடுவிக்கும்போதும் அவற்றில் நவீநர்கள் எழுதிச் சேர்த்துள்ள முகவுரைக்கு மறுப்பாகப் பிறந்ததாமிந்நூல்."

என்பதாம்.

இந்தச் சுருக்கத்திற்கு மூலமான வடமொழி நூலில் [—பாதுகாஸஹஸ்ராவதார தத்வத்தில்] பல பல ப்ரமாண யுக்திகளைக் கொண்டு இந்தச் சேட்லூரர் போல்வாருடைய ஊரைதிஹ்ய வாதங்களெல்லாம் தீயினில் தூசாக்கி யொழிக்கப்பட்டிருக்கின்றமையை அதிற் கண்டுகொள்க.

ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமியருளிய அமலனாதிபிரான் உரையவதாரிகையில் [திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகையில்] எழுதியிருந்த ஒரு இதிஹாஸத்தை எடுத்துக்கொண்டு ஸ்வேச்சாநுகூலமாக வீணாரவாரஞ் செய்திருக்கின்ற இந்தச்சேட்லூரர் இந்த பாதுகாஸஹஸ்ர ப்ரகரணத்தில் ஷை தத்துவநூலைப்பற்றி ஓர் அக்ஷரமும் எழுதாதது வாய்திறக்க வழியில்லாமை பற்றியேயன்றோ?

ஸூக்ருதஸூஸம்ஹத்தில் ஆசார்ய ஹ்ருதய விஷயமாக ஒரு ப்ரஸ்தாவம் எடுக்கப்பட்டு, ஷை ஆசார்ய ஹ்ருதய மருளிச்செய்தவரும் பிள்ளை லோகாசார்யரது திருத்தம்பியாருமான அழகிய மணவாளப் பெருமாள் நாயனாருக்கும் தேசிகனுக்கும் நிர்ஹேதுக விஷயீகார விஷயமாக வாதப்ரதிவாதம் நடந்ததாகவும், தேசிகன் ஏதோ தடபுடலாக சாஸ்த்ரார்த்தங்களை உபந்யஸித்து விட்டதாகவும், நாயனார் தலையிறங்கி நின்றதாகவும், அப்போது அங்கிருந்தவர்கள் தேசிகன்பால் மஹா விசேஷார்த்தம் கேட்கப்பெற்றதற்கு உகவை தலைமண்டை கொண்டு விழுந்து விழுந்து எழுந்ததாகவும், பிள்ளை லோகாசார்யர் தாமும் இதற்கு உகந்தருளினதாகவும் பிறகு அவமானம் பொறுக்கமாட்டாத நாயனார் தேசிகனோடே கவித்திறத்தில் போராடப் புகுந்ததாகவும், பாதுகாஸஹஸ்ரமுகேந அதுதன்னிலும் நாயனார் பங்கமடைந்து விட்டதாகவும் ஆக இப்படியெல்லாம் கதை தொடுத்து எழுதப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட வரலாறுகளை உண்மையான ஒரு புராதன இதிஹாஸ புஸ்தகத்தில் காட்டிவிடுவாராயின் ப்ராமாணிகர்கள் இசைந்து நிற்கத் தடையே யிராது. இப்படி யெழுதிவைத்திருக்கின்ற குருபரம் பராப்ரபாவநூல் நம்பத்தகாத நவீந கல்பனைச் சுவடி என்பதை [முகவுரை பக்கம் 8ல்] இந்தச் சேட்லூரர் தாமே எழுதிவைத்திருக்கிறாராதலால் இந்த ஊற்றெதிஹ்யங்களை இவர் தாமே கண்டித்து நின்றாராயிற்று.

ஆசார்ய ஹ்ருதயத்திலருளிச் செய்யப்பட்டுள்ள விஷயம் இன்னதென்றும், பிள்ளை லோகாசார்யருடைய திருவுள்ளம் இன்னது தேசிகனது திருவுள்ளம் இன்னது என்றும் அணுமாத்திரமும் அறியகில்லாத யஸாஜாதர்கள் வம்புக் கதைகளைக்கட்டி வெளி

யிடுமதனால் யாருக்கு என்ன ஹாநியோ? ஆசார்ய ஹ்ருதய அம்ருதக் கடலிலோ ஸ்ரீ வசநபூஷண திவ்ய சாஸ்த்ரத்திலோ பொதிந்துள்ள ஸாரதம ரத்நராஸிகளில் ஒரு அர்த்தத்தையாவது எடுத்துக் கொண்டு இந்தச் சேட்லூரார் விஷயஞ்சொல்ல வருவரேல் ஆண்மை யறிவோம். அந்த ஸரணியில் இவர்க்கு ப்ரவேசலவலேசமுமில்லாமையால் இப்படிப்பட்ட அம்மைபார்புராணங்களையும் அம்ணு பட்டை வாக்யார்த்தங்களையும் அசட்டுக்கதைகளையும் வெளியிட்டுக் கொண்டு தானே இவர் போதைப் போக்கித் தொலைக்கவேண்டும்.

இவருடைய பரமபதஸோபாநவுரைப் பதிப்பில் (பக்கம் 15) காண்மின்;—“அஜ்ஞாத யாத்ருச்சிக ஆநுஷங்கிக ப்ராஸங்கிக ஸாமாந்யாபிஸந்தி ஸுக்ருத விசேஷங்களை வ்யாஜமாகக்கொண்டு விசேஷ கடாக்ஷம்பண்ணி” என்று மூலத்திலுள்ள தேசிக ஸூக்திக்கு—“வியாஜமாகக்கொண்டு என்பதினால் அவனுடைய ஸஹஜ ஸௌஹார்த்தமே முக்யகாரணம்; இந்த வ்யாபாரங்கள் பக்ஷபாதாதி தோஷங்கள் உண்டாகாமைக்காகக் கேவலம் வ்யாஜமாக ஏற்பட்டவை என்பதும் இந்த ஸுக்ருதங்களின் விசேஷங்களினால் ரக்ஷிக்கவில்லை, பகவான் தன்னுடைய ஸஹஜகாருண்யத்தினாலேயே ரக்ஷிக்கிறான் என்பதும் தெரிவிக்கப்பட்டதாகிறது” என்று இந்தச் சேட்லூரார் விவரணமெழுதியிருக்கின்றார். இவ்வர்த்தம் ஆசார்ய ஹ்ருதயஸித்தமா? ரஹஸ்யத்ரய ஸாரஸித்தமா? ஸ்ரீவசநபூஷண ஸித்தமா? இவையெல்லாவற்றிலும் ஸமமாகவே ஸித்தமா? என்பதை இவர் நிரூபிக்கத் திறமையுடையவரோ? நிர்ஹேதுக ஸஹேதுக வாதங்களின் உள்மருமம் இவருடைய மதிக்கும் எட்டிவிட்டதோ? இப்போது இதை இவ்வளவோடு நிறுத்திக்கொள்வோம்.

(பக்கம் 111ல்) ஸமஸ்யாஸஹஸ்ரீ என்கிற ஒரு காவ்யம் தேசிகனருளிச் செய்ததென்றும் இது லோபித்துப் போயிற்றென்றும் எழுதுகிறார். இங்ஙனே ஒரு க்ரந்தமுண்டென்று இன்றளவும் ஒருவரும் ஒரு நூலிலும் எழுதிற்றில்லை. தேசிகன் ஸ்தோத்ர பாஷ்ய அவஸாநத்தில் * அஜநி ஸரஸி ஸஹ்ருதயஸ்ஸமஸ்யாஸஹஸ்ரீ கவிகதககண்டீரவஸ்ஸ்வதந்த்ரஸ்ஸ்வதந்த்ர: என்று அருளிச் செய்திருப்பதைக் கொண்டு சேட்லூரார் இங்ஙனே எழுதுகிறார்.

ஹஜ ஹஜ! ஸமஸ்யாபூர்த்திஸஹஸ்ரகர்த்தா॥ கீழ்க்குறித்த ச்லோகத்தில் ஸமஸ்யாஸஹஸ்ரீ என்றது ஒரு க்ரந்தத்தின் நாமதேயமாகக் கூறினதன்று. அது தேசிகனுக்கு விசேஷணம். நகாராஜஸமாஸம். ‘பலபல ஸமஸ்யா பூர்த்திகளைச் செய்தவர்’ என்பது இதன் பொருள். இந்த பதத்தைச் சேட்லூரார் * வஹு வ்ரீஹிஸமாஸ ஸ்தாநம் ஷஷ்டீதத்புருஷஸமாஸமாக $ ப்ரமித்து இதை ஒரு க்ரந்த நாமமாக்கி ஸஹஸ்ரகோடியிலே ஸந்நிவேசிதானர். இங்கே மற்றொரு ஆச்சரியமுங் காண்க. அதாவது—ஸமஸ்யாஸஹஸ்ரீ என்ற [தாம் உண்டாக்கின] ஒரு க்ரந்தத்திற்குப் பிறகு ஸ்தோத்ர பாஷ்யம் அருளிச்செய்யப்பட்டது—என்று எழுத வேண்டியதாகத் தாம் நெஞ்சிற்கொண்டு அதை விபரீதமாக எழுதி வைத்துள்ளார். விபரீத மல்லாததுமுண்டோ இவர் வாக்கில்?

(பக்கம் 114, 141களில்) நிகமபரிமளம் என்னுமொரு க்ரந்தம் தேசிகன் அருளிச்செய்ததாகவும் இதுவும் லோபித்துப் போனதாகவும் இதற்கு எழுபத்திநாலாயிரப்படியென்று மற்றொரு பெயரென்றும், இதன் முற்பகுதியிலே நாலாயிரத் தனியன்களுக்கும் விரிவான வுரையும், பிற்பகுதியிலே த்ரமிடவேதங்களுக்கு விபுலமான வியாக்கியானமும் இருந்ததென்றும் எழுதி இன்னமும் சில அதிகமான ப்ரஸங்கங்களையுஞ் செய்திருக்கின்றார். இப்படிப்பட்டவொரு க்ரந்தமருளிச்செய்வதில் தேசிகனுக்கு சக்தியில்லையென்று யாரும் சொல்ல வரவில்லை. எழுபத்து நாலாயிரமன்று, எழுபத்துநாலு லக்ஷப்படி, எழுபத்துநாலு கோடிப்படியும் ஒருநொடிப்பொழுதில் ஸ்ருஷ்டிக்க அந்த மஹான் வல்லமை வாய்ந்தவரே. ஆனால் இப் பெயர்பூண்டவொரு க்ரந்தம் தேசிகனருளிச்செய்ததாக ப்ராமாணிகமான தேசிக வைபவநூல் ஒன்றிலும் சொல்லப்படவில்லை. தேசிக க்ரந்த ஜாபிதாவைக் குறிப்பிட்டிருக்கின்ற ஒரு ஆசிரியரும் இங்ஙனே ஒரு க்ரந்தமுள்ளதாக ஓரிடத்திலும் எழுதிவைக்கவில்லை. இந்தச் சேட்லூரார் தம்மாலேயே கடனாவெணகவூரஜாணிகமூந மாக நிர்ணயிக்கப்பட்டிருப்பதும் [கடன் மங்கலம் வீராச்சியென்

$ இவருடைய ஸ்தோத்ர பாஷ்ய மொழி பெயர்ப்பில் ஷ்டி ச்லோகத்திற்கு இவர் செய்திருக்கிற பதவிபாகமும் பொருளுரையும் பரம விபரீதம்.

பவர் எழுதிப்போட்டதென்று விச்வப்ரஸித்தமுமான] குருபரம்பரையில் இது குறிப்பிடப்பட்டிருக்கிறதென்பது கிடக்கட்டும். இதற்கு வேறொரு ஹீநயமூலமும் இவரால் காட்டமுடியுமோ? பெரியவாச்சான்பிள்ளை யருளிய அருளிச்செயல் வியாக்கியானங்களையே தேசிகன் காலக்ஷேபஞ்செய்து உஜ்ஜீவித்திருக்கும்போது வேறொருபடியைத் தாம் இயற்ற ப்ரஸக்திதானுமில்லை.

ஆனல், ஸஹஸா ஒன்று சொல்லிவிடலாம்; நாலாயிர திவ்யப்ரபந்தங்களுக்குப் பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானங்களைக்கொண்டு தேசிகன் காலக்ஷேபஞ் செய்தருளினரென்பது அதிவாதம்; இந்தஸம்பவத்திற்கு ப்ரஸக்தியேயில்லை; திருவாய்மொழிக்குப் பிள்ளானிட்டருளின ஆறுயிரப்படியைக்கொண்டு காலக்ஷேபஞ் செய்தருளினர்; மற்ற மூவாயிர திவ்யப்ரபந்தங்களை மூலத்தின்மேல் ஸ்வாசார்ய ஸந்நிதியிலே காலக்ஷேபஞ்செய்தருளினர் என்பதே பொருத்தம்—என்று நம் சேட்லூரார் போல்வார் சொல்லப்புகுவர்கள். ஆதோவ்யதே॥ இவரைப்போல் பிரமாண விருத்தமாக ஒரு அக்ஷரமும் நாம் சொல்லவும் எழுதவும் மாட்டோம். எவ்வளவு அம்ஶம் தேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளைக் கொண்டே நிரூபிக்கமுடியுமோ அவ்வளவையே தான் நாம் சொல்லுவோம், எழுதுவோம். ப்ரக்ருதவிசாரத்தில், ஸ்ரீதேசிகன் அருளிச்செயல் வியாக்கியானங்களில் நம்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளைகளின் திருவடிகளையே சரணமாகப் பற்றினவரேயன்றி பிள்ளானுடைய ஆறுயிரப்படியிலும் அவ்வளவு அபிநிவேசமுடையாரல்லர் என்பதை ஸப்ரமாணமாகவே இங்கு நிரூபிக்கின்றேம்;—

திருவாய்மொழி முதற்பத்தில் எட்டாந்திருவாய்மொழியாகிய * ஓடும் புள்ளேறியில் எம்பெருமானுடைய ஸௌஶீல்யம் சொல்லுகிறதாக ஆறுயிரப்படியில் திருக்குருகைப்பிரான் பிள்ளானருளிச்செய்திருக்கிறூர். பெரியவாச்சான்பிள்ளையும் வடக்குத் திருவீதிப்பிள்ளையும் அதைப் பக்ஷாந்தரமாக்கி * இத் திருவாய்மொழியில் எம்பெருமானுடைய $ ஆர்ஜவகுணஞ் சொல்லுகிறது என்று

$ ஆர்ஜவமாவது ஜ்ஜுக்வம்,

அருளிச்செய்தார்கள். ஸ்ரீதேசிகன் இங்கு ஆறுயிரப்படி வ்ருத்தி ரையில் இறையும் திருக்கண் செலுத்தாதே நம்பிள்ளை திருவடிகள் நிஷ்கர்ஷித்தபடியையே ஆதரித்து * நிரவயவஸ்ரேஜாதாம் நிரவநே ஜநா: என்றும், * வ்ருத்திஜேதயா என்றும் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியிலும் * ஸஸீமம் ஸாரயம் ஸாஸஹஜநம் ஸாஜவதாண என்று த்ரமிடோபநிஷத்ஸாரத்திலும் ச்லோகமிட்டு அந்தத் திருவாய்மொழிக்கு ஸூஜவதாண மே வ்ருத்திவாகூ மென்னுமிடத்தைக் கல்வெட்டாக்கி யருளினர். ஸூஜவதாணமென்கிற பதம் ஆறுயிரப்படியில் கிடையவே கிடையாது. நம்பிள்ளை திருவடிகளின் வியாக்கியானங்களை ஸேவியாமல் தேசிகன் அதை எங்ஙனம் க்ரஹித்தார்? கூறுமின் கூர்மதியீர்!. இங்கே பரகால ஸ்வாமி பதினெண்ணுயிரத்தில்—தேசிகன் இப்படி ஆறுயிரப்படிவழியை விட்டு நம்பிள்ளை நெறியை ஆதரித்துவிட்டாரேயென்னும் திருவயிற்றெரிச்சலினால் தேசிகனை பாபிக்கமாட்டாமல் நம்பிள்ளையை நிந்திக்கிறார். அதுகிடக்கட்டும். இங்கே தேசிகன் யாருடைய திருவடிகளைச் சரணமாகப் பற்றியிருக்கிறாரென்பதை ப்ராமாணிகர்கள் ஆகாச தாண்டவஞ் செய்யாமே ஸூஜவத்துடன் நிஷ்கர்ஷிக்கவேணும். 'பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தை தேசிகன் காலக்ஷேபஞ் செய்யவில்லை, தாமே பார்த்துக்கொண்டார்' என்றே சொல்லுங்கள்; ஸம்மதமே. தேசிகனுக்கு மௌரவவ்ருத்திவத்தி எந்த வியாக்கியானத்திலே? என்பது தான் கேள்வி. பிள்ளான்வழியைப் புறக்கணித்தாகிலும் நம்பிள்ளை வழியையே நாடுகின்றார் தேசிகன்—என்பதை யாரும் மறுக்க முடியாது.

இஃது ஓரிடமேயன்று. இன்னமும் காட்டுகின்றோம்;— அதே திருவாய்மொழி முதற்பத்தில் பத்தாந் திருவாய்மொழியாகிய * பொருமாநீள்படையின் ப்ரமேயத்தைப் பிள்ளான் ஸாதாரணமாக நிர்வஹித்தார்; அதாவது—"இப்படி எம்பெருமான் தம்மோடே கலந்த கலவியால் தமக்குப் பிறந்த நிரவயிகமான நிவ்ருத்தியாலே அக்கலவியைப் பேசுகிறார்" என்று அவதாரிகையிட்டருளினர். இத்திருவாய்மொழியில் * ஓர் எண்தானுமின்றியே

வந்து இயலுமாறு என்ற சந்தையின் ஸ்வாரஸ்யத்தை நோக்கி நிர்ஹேதுக விஷயீகார பரமாகவே நம்பிள்ளை திருவடிகளின் வியாக்கியானங்களுள்ளன. இவற்றைத் தழுவியே மணவாள மாமுனிகளும் நூற்றந்தாதியில் * பொருமாழி சங்குடையோன் பூதலத்தே வந்து, தருமாறு ஓர் ஏதுவறத் தன்னை என்றருளிச் செய்தார். த்ரமிடோபநிஷத் ஸங்கதிகாரரும் * நிர்ஹேதுககடாக்ஷைகலப்ய: ஶௌரி: என்றே அருளினர். ஆனல் இப்படிப்பட்ட வ்யாஜஶிக்ஷணம் பிள்ளானுடைய ஆறாயிரப்படியில் இல்லை. இங்கேயும் தேசிகன் போயிருக்கிற வழியைப் பாருங்கள்;—த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் * அவ்யாஜோதாரஹார்தா: என்று நிர்ஹேதுகவிஷயீகாரவ்யாஜநிர்வாஹந் தன்னையே பேணியருளினர். பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானத்தை ஸேவியாமல் தேசிகன் இங்ஙனம் பணிக்க வழியுண்டோ? பிள்ளான் படியை உபேக்ஷிக்கைக்கு அடி என்? ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாராதிகளில் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்திகளை அபியுக்தஸூக்தியாக தேசிகன் ஸ்பஷ்டமாகவே உதாஹரித்திருப்பதுங் காணலாம். ஆக இவ்வகைகளாலே அருளிச்செயல் விஷயத்தில் தேசிகன் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தைச் சேமநிதியாகக் கொண்டிருந்தமை திடமாகத் தேறுதலால் நிகமபரிமள விச்வாமித்ர ஸ்ருஷ்டிக்கு நிதாந லேசமுமில்லை. இவ்விஷயத்திற்கு * ஶ்ரீஶைலஸ்வஸ்திஶ்ரீஹஸ்திஶைலஸ்திதாதி $ ஶப்தாபஶப்தங்களைக் காட்டப்புகுந்து பரிபவப் படவேண்டாவென்று முந்துறவே மொழிந்து வைப்போம். அத்தகைய ச்லோகங்களுள்ள புத்தகத்தை இவர் தாமும் ஸாகல்யேந ப்ரமாணமாக இசையவுமில்லை. பலவிடங்களில் அதைப் பழித்துத் தள்ளிவிட்டார். ஆகவே வாய்மூடி நிற்றல் வழக்கு.

இந்த ப்ரகரணத்திலே சேட்லூரார் தலைகால் தெரியாமல் அதிகமாகவே ப்ரஸங்கித்துள்ளார். பிள்ளை லோகாசார்யர் ஸ்ரீ

$ இந்த ச்லோகத்தைப்பற்றி வையாகரணர்களை வினவினல் இது பரிஹாஸ்யமான கவித்வமென்பது நன்கு விளங்கும்.

பாஷியம் முதலிய க்ரந்தங்களை தேசிகனிடத்தில் காலக்ஷேபஞ் செய்தாரென்றும், * சீரொன்று தூப்புல் இத்யாதி தேசிகத்தனியனைப் பிள்ளை லோகாசார்யர் இட்டருளினர் என்றும் பலகால் எழுதிவைத்திருக்கின்றார். இதைப்பற்றிப் பிறகு விமர்சிப்போம். ஈடு முப்பத்தாறாயிரப்படி க்ரந்தம் பிள்ளை லோகாசார்யரிடத்தில் இருந்ததாகவும் தேசிகன் ஒரு சிஷ்யரை யனுப்பி அந்த ஸ்ரீகோசத்தை வாங்கிவரச் சொன்னதாகவும் மணிப்ரவாள வைபவ ப்ரகாசிகையில் எழுதியிருக்கிறதாம்; அதை அநுவதித்து இந்தச் சேட்லூரார் எழுதுகிறார்—"ஸ்வாமி ஒருகாலும் சாஸ்திர விரோதமாக ஒரு க்ரந்தத்தை வாங்கிவரும்படி சொல்லியிருக்கமாட்டார்" என்கிறார். எந்த சாஸ்திரத்தில் என்ன விரோதங் கண்டாரோ இவர். வஸ்துதஃ இந்த வ்ருத்தாந்தமே முழுப்பொய்யானது. இல்லாத கதைகளை இவர் தாமாகவே இழுத்துப்போட்டுக்கொண்டு அவற்றை விமர்சிக்கிற பாவனையிலே இவர் எழுதுமதெல்லாம் இளிம்பே. * இங்கே **"சாஸ்திர விரோதமாக"** என்று எழுதியிருக்கிறாரே; எந்த சாஸ்திரத்தில் எந்த மூலையைக் கண்டாரிவர்? எதற்கு எது விரோதம்? ஒரு தகவலு மின்றியே * தடியடி மிடாஅடி என்னுங்கணக்கிலே கைபோன போக்கெல்லா மெழுதிவைப்ப தென்பதை இனியாகிலுமிவர் விட்டிடுவாராக. இதற்குமேல் இச்சேட்லூரார் எழுதியிருப்பதாவது—"திருக் குருகைப்பிரான் பிள்ளான்வழியாய் எங்களாழ்வானுக்கும் அவர் வழியாய் நடாதூரம்மாளுக்கும் அவர் வழியாக அப்புள்ளாருக்கும் கிடைத்த பகவத் விஷயார்த்தங்களெல்லாம் தேசிகனுக்கு ஏற்கனவே உபதிஷ்டங்களானபடியாலே **அநதிகாரிகளால் ப்ரவசனம் செய்யப்பட்ட க்ரந்தத்தை** ஸ்வாமி கண்ணெடுத்துப்பார்க்க ஸம்மதித்திருக்கமாட்டார்" என்று—. ஓய்சேட்லூராரே! நம் கேள்விக்கு நேர்நின்று விடையளிப்பீராக: கீழே நாம்நிரூபணம் செய்ததிலிருந்து தேசிகன் பிள்ளானுடைய ஆறாயிரப்படியில் நோக்கின்றியே நம்பிள்ளை திருவடிகளின் வியாக்கியானங்களிலேயே ஆதரம் பெருக நின்றார் என்பது நன்கு விளங்கிற்றன்றோ? அதனை மறுத்துரைக்க உம்மால் முடியுமாகில் ஒரு கை பாரும். அது உம்மாலுமாகாது, உந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பாராலுமாகாது. ஆமெனில் ஆகட்டும். பகவத் விஷய ப்ரஸ்தாநத்தில் தேசிகன் நம்பிள்ளை நெறியிலன்றி வேறொரு வழியில் ஈஷத்தும்

கண்ணையோ காதையோ வைத்தவரேயன்று என்பதை ஸுஸ்ப ஷ்டமாகவே நிலைநாட்டவல்லோம்.

மேலும் நடாதூரம்மாள் வழியாகவந்த அர்த்தம் அஸம்ப்ரதாயார்த்தமென்று நீரே எழுதியிருக்கிறீர். எங்கே யெழுதியிருக்கிறேனென்று கேட்கிறீரோ, கேளும். உமது ''கத்யபாஷ்ய' மொழி பெயர்ப்பின் முகவுரையை எடுத்துப் பாரும்; நடாதூரம்மாளுடைய அந்தரங்க சிஷ்யரும் அவரிடத்தில் கேட்ட அர்த்தந்தவிர வேறொரு அர்த்தத்தை நெஞ்சிலும் நினையாதவரும் ச்ருதப்ரகாசிகாசார்யரென்று ப்ரஸித்தருமான ஸ்ரீஸுதர்சநபட்டர்ஸ்வாமி சரணாகதி கத்யத்திலுள்ள வாத்ஸல்ய பதத்திற்கு ஸத்ஸம்ப்ரதாயாகதமான ஷோடசோபாயவிபாகத்தைத் தமது மஹாச்ருதப்ரகாசிகையில் அருளிச்செய்ததற்காக அவருக்கு எவ்வளவு ஸம்பாவனை பண்ணியிருக்கிறீர்? "ப்ரமாண யுக்திகளுக்குப் பொருந்தாமல் எழுதிவிட்டார்" என்று அந்த மஹான் திறத்தில் நீர் எழுதியிருக்கவில்லையா? "அதை நீக்கி ஸத்ஸம்ப்ரதாயாகதமான அர்த்தத்தை தேசிகன் வியாக்கியானித்தார்" என்கிற வார்த்தையினால் ச்ருதப்ரகாசிகாகாரருடைய அர்த்தம் அஸத்ஸம்ப்ரதாயமென்று நீர் ஸ்பஷ்டமாகக் காட்டவில்லையா? இது நடாதூரம்மாளுக்கும் அவருடைய ஆசார்யர்களுக்கும் சாத்தின பரிவட்டமல்லவா? 'இப்படி நான் எழுதவில்லை' என்று இரண்டொரு அக்ஷராஸ்யர் முன்னிலையிலே வந்துநின்று சொல்லிப்போவீரேல் ஆண்புலியேயாவீர்.

ஸம்ப்ரதாயமென்கிற பதத்தின் பகுதிவிகுதியுமறியமாட்டாத பேர்கள் ஸத்ஸம்ப்ரதாயமென்று ஒன்றைப் புகழவும் அஸத்ஸம்பிரதாயமென்று ஒன்றை இகழவும் புகுவது பரமபரிஹாஸ்யம். தேசிகனுடைய க்ரந்தங்களுக்கும் வழிகாட்டியாக ஆச்சரியமான க்ரந்தரத்நங்களை ஆவிஷ்கரித்தருளின ச்ருதப்ரகாசிகாபட்டரையே "அப்ராமாணிகமாகவும் அயுக்தமாகவும் அஸம்ப்ரதாயமாகவும் புநருக்திதுஷ்டமாகவும் எழுதுகிறவர்" என்று கைகூசாமல் எழுதிவைத்த இந்தச் சேட்லூரார் மற்ற ஆசிரியர்களை இழித்துரைப்பதில் என்ன வியப்பு? பரமபத ஸோபாநவுரையில் (பக்கம் 11ல்)—"ஆச்சான்

ஸம்பிரதாயத்தில் அந்வயமில்லாதவர்களுடைய ரஹஸ்யார்த்தங்கள் ஸ்ரீ பாஷ்யகாரருடைய திருவுள்ளத்திற்கு அநுகுணமானவைக ளல்ல" என்று வெகு துராக்ரஹத்துடன் எழுதியிருக்கின்ற இந் தச் சேட்லூரார் அந்த ஆச்சான் ஸம்பிரதாயத்தில் அந்வயம்பெற்ற ச்ருதப்ரகாசிகாபட்டரையும் தாந்தோன்றி யென்று தூஷித்த மஹாநுபாவர்கிடீர்.

ஸகூஷிஉஊஸிகஜீவநொஜ்ஜீவநளஷயமான ஈடு முப்பத் தாறுயிரப்படியை இந்த தயாஜாதர் 'அநதிகாரிகளால் ப்ரவசனம் செய்யப்பட்ட க்ரந்தம்' என்று அவலீலையாக எழுதிவிட்டார். இவர் தாம் தம்முடைய அதிகாரம் இவ்வளவென்பதைத் தாம் தெரிந்து கொள்ளாமலே ஸர்வஜ்ஞர்களான மஹாசார்யர்களை அநதிகாரிக ளென்கிறுர். ஆரியர்காள்! இவர் தமது நாமத்திலே பகவத்விஷயம் என்கிற ஒரு உபாதியைச் சேர்த்துக்கொண்டிருக்கிறுர். இந்த உபாதிக்கு என்ன அர்த்தம்? என்று நாம் கேட்டதற்கு 'பகவத் விஷயத்தில் தாம் மஹாவ்யாபகராம்; அதுதோன்ற பகவத்விஷய மென்றே தம்மை விசேஷித்துக்கொண்டாராம்' என்று சிலர் விடை கூறினர். இவரையே சிலர் நேரில்கேட்டதற்கு 'இது எங்களுடைய குடிப்பெயர்' என்று சொல்லி நெகிழ்ந்தார். இவரைச் சார்ந்தவர் கள் அங்ஙனம் சொல்லாமல் இதை அஸாதாரண யோக்யதைக்கு உரிய பட்டப்பெயராகவே பேசுகின்றனர். இப்போது உண்மை வெளிவரவேண்டும். * கூவிஜெஸிஉவேயெபழ. * பகவத்விஷய மென்பது ஒரு பொதுப்பெயர்போல இருந்தாலும் திருவாய்மொழி வியாக்கியானத்தை [விஶிஷ்ய ஈடு முப்பத்தாறுயிரப்படியை]யே பகவத்விஷயமென்று வ்யபதேசிப்பது ஸம்ப்ரதாயம். 'திருவாய் மொழி வியாக்கியானம் எதுவாயினும் அதற்கெல்லாம் பகவத்விஷய மென்றே வ்யவஹாரம்' என்றும் சிலர் சொல்லுவர்; நாலாயிர வியாக்கியானங்களுக்கும் பகவத்விஷயமென்கிற வ்யபதேசமுண் டென்றும் சிலர் கூறுவர். எதுவும் நமக்கு ஸம்மதமே. அருளிச் செயலின் வியாக்கியானங்கள் அப்படியிருக்கட்டும்; மூலமே இவர்க் குச் செவ்வனே தெரியாதென்பதையும், ஒரு பாசுரத்திற்குக்கூட உண்மையான பொருளை அந்த சாஸ்திரஜ்ஞர்கள் உகக்கும்படியான முறைமையிலே இவர் உரைக்கவல்லவருமல்லர், தெரிந்துகொண்

டாருமல்லர் என்பதையும் நான் எந்த ஸஉஸ்ஸிலும் நொடிப்பொழுதில் நிரூபிக்கத் தடையில்லை. பரமபதஸோபானவுரையில் (பக்கம் 27ல்) நான்முகன் திருவந்தாதிப் பாசுரமான "தேரித்தெழுதி வாசித்தும்" என்றதில் தேரித்து என்றதன் பொருளைத் தெரிந்து கொள்ளாமல் அதை தரித்து என ஈவவா○மாக எழுதி "மனதில் தியானித்து" என்று வேறான பொருளையும் எழுதி; பெரிய திருமொழிப் பாசுரமான * வென்றியே வேண்டிவீழ் பொருட்கிரங்கி என்றதில் இரங்கி என்பதற்கு, வாய்கொண்டு சிரிக்க வகையில்லாதபடி [பிறர்களையாசித்து] எனப்பதவுரையெழுதி, ஆயிரக்கணக்கான இவ்வகைகளாலே அருளிச்செயலுக்கும் தமக்கும் ஆயிரங்காதவழி தூரமுண்டென்று தாமே கைவிளக்கேற்றிக் காட்டிக்கொண்ட விவரது திறமையை நிரூபிக்க ஒரு கைந்நொடிப்பொழுதும் ஒரு கண்ணிமைப் பொழுதுங்கூடத் தேவையில்லைகிடீர். ரஹஸ்யங்களில் தேசிகன் உதாஹரித்துள்ள அருளிச்செயல் சந்தைகளுக்கு இவர் எழுதியுள்ள பதவுரை முழுதும் விபரீதம்; பாடமும் படுகொலை. இப்படி மருளேவடிவெடுத்தவிவர் பகவத்விஷயமென்கிற உபாதிக்கு உண்மையாக உரியவராகில் கம்பீரமாக வெளிவரட்டும். திருவயிந்திரபுரத்திற்கே நாம் வந்து சேருவோம். நாலுபாசுரம் வினவுவோம்; பகவத்விஷயத்திற்கும் இவர்க்கும் ஸ்வல்ப ஸம்பந்தமாவது உண்டென்று தேறிவிட்டால் இவரது மாளிகை வாசலில் த்வாரபாலகனாய் நின்று ஆயுளையொழிக்கத் தடைசொல்லுவேனல்லேன்; இப்படி நாம் எழுதுவதைக் காணும் சிலர் 'இவையெல்லாம் அர்த்தமில்லாத பேச்சுக்கள்போலும்' என்று நினைத்துவிடக்கூடும். வெறுமனே அப்படி நினைத்துவிடுவதில் பயனில்லை. நாம் எழுதுவது எவ்வளவு உண்மையென்பதை உவஸி காய-ஃஜ~வெ ந நிர்த்தாரணஞ் செய்துவிட ஒரு மஹாநுபாவர் முன்வருவரேல் அப்போது உண்மையைக் காட்டிக்கொண்டே தீருவோம். ஸம்ஸ்க்ருத வ்யுத்பத்தியில்லாத வொருவன் 'நான் ஸ்ரீபாஷ்ய வித்வான்' என்று சொல்லிக் கொள்ளலாமென்று விவேகிகள் அறுதியிடலாமாயின் அறுதியிடுக. "வடமொழி வேஉவிஉ-பிஷெக்ஷவெவ பகவத்விஷய திகு~வாயிவாாாய-ஃ:" என்று இவர் சொல்லிவிடுவரேல் பிறகு நமக்கு வாய்திறக்க வழியில்லைதான்.—எனக்கு ஸவ்யாவ்யாநத்

தோடே ஒரு ஸ்ரீமத்ராமாயணம் வேணும்" என்று பல நிரக்ஷர குக்ஷி பரமைகாந்திகள் பேசுவது வழக்கம். கல்யாணத்திற்கு * ஸஹகுடும்ப ஸமேதராய்வரவேணுமென்றும் எழுதுவர்கள். அப்படிப்பட்டவர்களிற் காட்டில் இவர்க்கு ஒரு வாசிகண்டிலோம். ஏனெனில், இவருடைய ஸச்சரித்ரரக்ஷை மொழிபெயர்ப்புப் பதிப்பில் (பக்கம் 162ல்) * ஸாவஹித: என்கிற மூலத்திற்கு "ஸாவதானத்துடன் கூடினவனாய்" என்று இவர் பொருளெழுதியிருக்கு மழகைப்பாருங்கோள். 'ஸாவதாந' என்ற சுத்த்ரூவ்ஷத்தின் ஸ்வரூபத்தையும் தெரிந்துகொள்ளகில்லாதவிவர், தேசிகனும் உச்சிமேல்வைத்து மெச்சும்படியான வியாக்கியானங்களை யருளிச்செய்த ஸர்வஜ்ஞஸார்வபௌமர்களை அநதிகாரிகளென்று அஞ்சாதேஎழுதி வைத்தவளவால் யாருக்குப் பரிபவம்?

'ஸகல சாஸ்த்ரங்களுக்கும் அதிகாரிகள் ஸுலபர்; பகவத்விஷயத்திற்கு அதிகாரிகளேயில்லை' என்று மஹான்கள் அருளிச்செய்வது வழக்கம். அப்படிப்பட்ட பகவத்விஷயத்திற்கு ஶ்ராவிஷயக்ஷணமுக்ஷ்ய ஶாஸ்த்ராதிவெதெஶிகரானவிவர் அதிகாரியென்றால் ஆமாமென்று தலையாட்டுவதற்குத் தஞ்சாவூர்த் தலையாட்டிப் பதுமைதான் வரவேண்டும்.

கிம் ஹ்ரியவஸா ஶூஷவிதெந? பகவத்விஷயமென்பது எதற்குப் பெயரென்று இவர்தாம் சொல்லுகிறாரோ, அது தன்னிலேயே சில கேள்வி கேட்போம்; அவற்றில் ஒரு கேள்விக்காவது இவர் விடையளித்து வித்வான்களை இசைவிப்பரேல், தோற்றோமென்று தெருவேற வருவோம். ஆனால், "வழிப்போக்கரான வம்பர்களின் வினாக்களுக்கெல்லாம் விடையளிப்பதுதானோ எனக்கு வேலை?" என்றுசொல்லிநெகிழப்பார்ப்பரிவர். * ஸம்ஹாவநாயஸ்ஹிகாயகூடீ ஸஹாஹுஜம்ஶீ என்று போற்றப்பட்ட தேசிகனுங்கூட வழிப்போக்கர்களான வம்பர்களின் வார்த்தைகளுக்கு இசைந்து எவ்வளவோ காரியங்களைச் செய்து தமது விருதுகளை நிலைநிறுத்திக்கொண்டதாக இந்தச் சேட்லூராரே எழுதியிருக்கிறானன்றோ? ஆகவே * உஹாஜநொயெந ஶதஸ வஞா: என்று கொண்டு இவர்தாமும் பரீக்ஷைக்கோ வாதவ்ரதிவாதங்களுக்கோ

இசைய ஓதவும். அயிந்தையிலுள்ள அத்யாபககக்ஷையயில் தாம் அத்யாபயிதார் என்னுமிவ்வளவுக்காகவே பகவத்விஷயமென்ற உபாதியை இட்டுக்கொண்டாரென்னில், அதற்கிணங்க வாசகத்தை வேறுபடுத்தல் நன்று.

பெரியாழ்வார் திருமொழியில் (4—8—9) * குன்றுடு கொழுமுகில்போல் என்றபாட்டில் இரண்டாமடி—நின்றுடு **கணமயில்** போல் என்பது. **கணமயில்** என்றது 'மயில்கணம்' என்றபடி. **஗ண:** என்ற வடசொல் **கண**மென்றாயிற்று. [* கணமாமயில்காள் என்ற பாசுரத்திற்போல.] இந்தச் சேட்லூரர் அருளிச்செயலை ஆசார்யமுகேந ஓதாமல் ஏடுபார்த்துத் தப்புந்தவறுமாய் க்ரஹித்தவரென்பதை இங்கு ஸ்பஷ்டமாய்க் காட்டுகிறேன் காண்மின்; மேற்குறித்த பாசுரம் பரமபதஸோபானத்தில் [இவரது உரைப் பதிப்பில் பக்கம் 120ல்] உதாஹரிக்கப்பட்டிருக்கிற அழகும் வியாக்கியானிக்கப்பட்டிருக்குமழகும் வாயால் சிரிக்கத்தக்கதன்று. திவ்ய ப்ரபந்த மூலப்பதிப்பில் **கணமயில்** என்றவிடத்து ணகரத்தின் மேல் கொஞ்சம் மைபடிந்திருந்தாப்போல் கண்டவிவர் **கண்மயில்** என்று பாடஞ்செய்து "கண்களால் நிறைந்த மயிலைப்போலவும்" என்றும் "இங்கு கண்கள் என்றது மயில் தோகையிலிருக்கும் கண்கள் போன்ற ரேகா விசேஷத்தைச் சொல்லுகிறது" என்றும்எழுதிவிட்டார். இதைக்கண்டால் அத்யாபகரென்ற உபாதிக்கும் அநர்ஹரென்னவேண்டாவா? பகவத்விஷயமென்ற உபாதி எத்தனை காதவழியில் இருக்கவேண்டும்? இனி, மேல்விஷயத்திற்குப்போவோம்.

(பக்கம் 142ல்) **ஸ்ரீமுநிவாஹநபோகம் அருளிச்செய்தல்** என்ற தலைப்பின்கீழ் ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் திருநாமத்தைக் குறிப்பிட்டு அவர் * அமலனாதிபிரான் உரையவதாரிகையில் [திவ்யார்த்த தீபிகையில்] எழுதியிருந்த சிலவிஷயங்களை அநுவதித்தெழுதி, அந்த ஸ்வாமியை நிந்தித்தும் பரிஹஸித்தும் பல வாக்கியங்கள் வரைந்துள்ளார். ஏற்கனவே இச் சேட்லூராருடைய சில நூல்களுக்கு மறுப்பாக அண்ணங்கராசார்ய ஸ்வாமி வெளியிட்டருளின ஸஞ்சிகைகளை ஸேவித்தது முதலாக * ஸுகாநாதீநி நாநாநி த்ராவஸம் ஸஞ்ஜநயந்திச என்றும் * வ்யக்ஷேவ்யக்ஷேவசஸ்யாதி யென்றும் மருண்டு பிலம்புக்கொளிந்து கிடந்தவர் மீசையில் மண்

படவில்லையே யென்பார் போன்று கண்களைப் பிசைந்துகொண்டு நெடுநாள் கடந்துவிட்டதென்று தேறி வெளிநியைக் கையிலெடுத்து நின்றார் பாவம்!. அந்தோ! கற்பூரங் கொளுத்திச் சுழற்றியெறிமின். தேசிகன், மற்ற திவ்யப்ரபந்தங்கள் கிடக்க அமலனாதிபிரானுக்கு வியாக்கியானமாக முநிவாஹநபோக மருளிச்செய்யக் காரணமென்? என்று விமர்ஶிக்கப்புகுந்த முன்னோர்கள், ஸத்யமோ அஸத்யமோ ஒரு ஐதிஹ்யத்தை எழுதிவைத்துள்ளார்கள். அதை அண்ணங்கராசார்யர் ஸ்வாமி எடுத்துக்காட்டி 'இவ்வைதிஹ்யத்தை வடவாசார்யர்கள் அங்கீகரிப்பதில்லை' என்றும் எழுதி, ஆனாலும் முநிவாஹந போகத்தின் முடிவில் * **நாண் பெரியோமல்லோம் நாம்நன்றுந்தீதும் நமக்குரைப்பாருளரேன்று நாடுவோமே** என்று விலக்ஷணமாகவே தேசிகன் அருளிச்செய்திருக்கின்றமையால் அற்கு ஏற்ப ஒரு விசேஷ காரணம் இருக்கத்தகும் என்று ஸ்வாபிப்ராயமாக நிகமநஞ் செய்திருக்கின்றார்.

அண்ணங்கராசார்யஸ்வாமி எழுதிவிட்டாரென்பதுகொண்டே அந்த ஐதிஹ்பம் உண்மைதானென்று நாம் வாதிக்க வருவோமல்லோம். சரித்திரநூல்களில் பலபல ப்ரக்ஷேப உத்க்ஷேபங்களுள்ளனவென்பதை முதலிலேயே நாம் நிரூபித்துள்ளோம். ஸர்வாத்மநா விச்வஸநீயங்களான க்ரந்தங்களில் இல்லாத ஐதிஹ்யங்களை ப்ரமாணமாகக் கொள்ளலாகாதென்பதே எமது துணிபு. ஆனால் பிரக்ருத ஐதிஹ்யத்தில் வசைகூற இந்தச் சேட்லூரார் சிறிதும் அர்ஹதையுடையாரல்லர் என்பதை மாத்திரம் திக்கனச் சொல்லுவோம். ஏனெனில்; யாவநூமொருன் திஷ்நூமொருனை நிந்திக்கவும் சிக்ஷிக்கவும் புகுவது அபஹாஸ்யமல்லவா? இவர் எழுதியிருக்கிற ஐதிஹ்யங்களில் ஒன்றுக்காவது இவர் பிரமாணங் காட்டுவாரோ? அம்மையார் புராணந் தவிர வேறுண்டோ இவரெழுதினதில்? இதுகாறும் கீழே நாம் நிரூபித்திருக்கிற ஒவ்வொரு விஷயத்தாலும் 'தப்புந் தவறுமான கதைகளை யெழுதிவைப்பதே இவர்க்குப்பணி' யென்பது ஊர்ஜிதமாயிற்று. அதேவிஷயத்தை இன்னமும் விளங்க வைப்போம்.

தேசிகனிடத்தில் பொறாமைகொண்ட சிலர் தேசிகனை அவமானப்படுத்த நினைத்து ஸ்வாமி திருமாளிகைவாசற்படியில் பழைய

செருப்புகளைக் கட்டித் தொங்கவிட்டு வைத்தார்களென்றும் அவை ஸ்வாமி தலையில் இடித்தனவென்றும், ஸ்வாமி அதற்கும் உகந்தே * வயம்து ஹரிதாஸாநாம் பாதரக்ஷாவலம்பகா: என்று அநுஸந்தித்தாரென்றும் (பக்கம் 38ல்) ஒரு கொள்பாட்டி கதை எழுதியிருக்கிறார். இதுவா தேசிகனுக்கு ப்ரபாவகீர்த்தநம்!. வாஸ்தவமறியாத அவிவேகிகள் சிலர் கட்டுக் கதைகளைக் கூட்டி எழுதிவைத்த புஸ்தகங்களில் தவிர பிராமாணிகமான ஒரு வைபவ நூலிலாவது இந்தக் கதையை இவர் காட்டுவாரோ? அன்றியும் வித்யாரண்யத்தில் நிஷித்தர்கள் மூவரும் தேசிகனை வஞ்சித்துத் திண்டாட வைத்தார்களென்கிற கதையையும் (பக்கம் 39ல்) எழுதுகிறார். ஸ்ரீரங்கநாதனுடைய அர்ச்சகரொருவர் ஏகாதசியில் ஸ்வாமி கையில் அன்னங்கொடுத்துத் திகைக்கவைத்தார் என்கிற கதையையும் (பக்கம் 41ல்) எழுதுகிறார். இன்னம் என்னென்னவோ எழுதுகிறார். இவையெல்லாம் தேசிகனுக்கு அவமானமான கதைகளேயன்றி ஒன்றுகூட பஹுமானமான கதையன்று. இத்தகைய தப்புக் கதைகளை ஏற்கனவே சில வம்புச்சுவடிகளில் நாம்பாராமலில்லை. * ஸ்ரீவஸா ஹரிதாஸாநாம். * ஸ்ரீஜெவிதஸ்யஸ்ய. இத்யாதி ச்லோகங்களையும் இவைபோன்ற தமிழ் வசநங்களையுங்கொண்ட அந்தச்சுவடிகளை இந்தச் சேட்லூரார் தாமே பலவிஷயங்களில் அப்ரமாணமென்று கழித்துள்ளார். இப்படிப்பட்ட அசட்டுக் கதைகளை மாத்திரம் வெகு காரியமாக அவற்றிலிருந்து உபாதாநம் செய்துகொள்ளுகிறார். * வயம்து ஹரிதாஸாநாம் பாதரக்ஷாவலம்பகா: என்று ஸ்வாமி ச்லோகமுரைத்திலரென்று யாரும் சொல்லவரவில்லை. பழஞ் செருப்புக் கதையைக் கட்டினால்தானே அந்தச்லோகம் இணங்கும்? இனி, * வஹ ஹஸ்திகிரீசஸ்ய வீயி ஶோயநகிஜராநு என்ற ஸ்வாமிஸ்ரீஸூக்திக் கிணங்கக் குப்பை வாரி ஐதிஹ்யமொன்று கோக்கவேண்டாவா? என்ன பரிபவம்! என்ன பரிபவம்!!

* ஸத்வவஸ்யவயா ந தஸம்ரஶேஷக்ஷகாஷ்டா நிஷ்டான ஜாஸாநுஷாஸர்கள் ஸ்ணகீர்த்தர்களுமாய் ஸ்வாமி ஸந்நிதியிலே பலர் காத்திருக்க, நிஷித்தர்களால் ஏமாந்து திண்டாடித் தெருவிலே நின்றாரென்று கதை யெழுதுவது பரமவைபவம்!. ஏகாதசி

யிலே ஸ்வாமி கையில் அன்னங்கொடுக்குமாறு சிலர் அர்ச்சகரைத் தூண்டினரென்கையும் அப்படியே அவர் கொடுத்துவிட்டாரென்கையும், மற்றொரு அர்ச்சகர்மேல் ஆவேசம் வந்து ஒரு அபூர்வார்த்தம் நியமிக்கப்பட்டதென்கையும் பாட்டிகதை என்னலாமே தவிர மஹாஸூஜன் எழுதுகிற விஷயமா இவை? இப்படிப்பட்ட தலைகாலில்லாக் கதைகளை யெழுதிவைக்குமிவர் முநிவாஹநபோக ஐதிஹ்யத்தைப்பற்றி முணிகின்றாரென்றால் இது என்கொல்? "இந்த ஐதிஹ்யம் எந்த க்ரந்தத்திலிருந்து எடுக்கப்பட்டது?" என்று கேட்கிறார். எந்த க்ரந்தத்தை ப்ரமாணமாகக் காட்டினால் இவர் ஒப்புக்கொள்ளப்போகிறாரென்பது முந்துற நமக்குத் தெரியவேண்டும். தேசிகனுடைய சரித்திரங்களை வெளியிடுகின்ற நூல்களை ஒன்று தப்பாமல் இச்சேட்லூரார் தூஷித்திருக்கிறார். ஆசார்யசம்பூ என்கிற க்ரந்தம் பெரும்பாலும் பலரால் ப்ரமாணமாகப் பரிக்ருஹீதம். அதையும் இவர் அப்பாலே தள்ளுகிறார். அதில் ஆறுவது ஸ்தபகத்தில் (பக்கம் 81ல்) அபீதிஸ்தவம் ஸ்ரீரங்கத்திலருளிச்செய்ததாக ஸ்பஷ்டமாகக் கூறியிருக்க அதை நிராகரித்து இச்சேட்லூரார் அந்த ஸ்தவம் திருநாராயணபுரத்தில் இயற்றப்பட்டதாக (பக்கம் 121ல்) எழுதிவைத்தார். அதில் ஐந்தாவது ஸ்தபகத்தில் (பக்கம் 65ல்) விரோதபரிஹார ரஹஸ்யம் அநேக க்ரந்தங்களுக்கு முன்னமே அருளிச்செய்யப்பட்டதாகச் சொல்லியிருக்க அதை நிராகரித்து அதுவே தேசிகனுடைய சரமக்ரந்தம் என்று பலதடவை இவர் எழுதியிருக்கிறார். வைபவப்ரகாசிகா ஸ்தோத்ரமென்கிற க்ரந்தத்திலுள்ள விஷயங்களையும் இப்படியே பலவிடங்களில் நிராகரித்தெழுதியுள்ளார். கிம்பஹுநா? தேசிகனுடைய சரித்திர நூல்களில் இதுதான் பிராமாணிகம் என்று ஒருசுவடியையும் சொல்லவொண்ணாதபடி ஸகல நூல்களையும் பழித்துத் தள்ளிவிட்டாரிவர். இப்படிப்பட்ட இச்சேட்லூரார்க்கு எந்த நூலை ப்ரமாணமாகக் காட்டலாம். மேலும், அந்த முநிவாஹநபோக ஐதிஹ்யம் உபதேச பரம்பரையாய் வந்ததாக இருக்கவேண்டும் $ என்று

$ 'இந்த ஐதிஹ்யம் அண்ணங்கராசாரியர் கல்பித்ததே' என்று எழுத வேண்டியதற்கு பதிலாக அந்தோ! இங்ஙனே எழுதிவைத்தார். இவரெழுதுகிறபடி அந்த ஐதிஹ்யம் உபதேச பரம்பராப்ராப்தமும் பூருவர்களுடைய க்ரந்தத்திலுள்ளதுமாம்.

இவரே (பக்கம் 144ல்) எழுதி ஸமாஹிதராய்ப் போனபடியால் உபரி வக்தவ்யமுமில்லை.

அதற்குமேல் (சேட்லூரார்) எழுதுகிறார்—"இது [முநிவாஹந போக ஐதிஹ்யம்] பூர்வர்களுடைய ஒரு க்ரந்தத்தில் * இருப்பதாகவே வைத்துக்கொள்வோம்; அப்படியாகில் இவர் பூர்வர்களுடைய க்ரந்தங்களைப் பார்த்திருப்பதாக ஏற்படுகிறதே யொழிய ஒன்றையாவது அறிந்தவராக ஏற்படவில்லை" என்று. இங்கே பார்ப்பதாவது என்ன? அறிவதாவது என்ன? அந்தோ! இவ்விதமாக அபஹாஸ்யமான மறுப்பு எழுதக் கற்றவர் இந்தச்சேட்லூரார் ஒருவரேயாதலால் கண்ணெச்சில் படாதபடி காத்துக் கொள்ள வேணுமிவரை. இவர் எல்லாமறிந்தவரென்பது கீழே ஒவ்வொரு வரியிலும் நன்கு விளக்கப்பட்டதல்லவா? இனிமேலும் விளக்கப் படுகிறபடி பாரீர்.

இன்னமும் அண்ணங்கராசார்ய ஸ்வாமியைப் பற்றி (பக்கம் 144ல்) இவர் எழுதியிருக்கிறார்—"இவருடைய பூர்வாசார்யர்கள் நிரூபிக்கிற அர்த்தங்களையே அறியாத இவர் ஸ்வாமியினுடைய ஸ்ரீஸூக்திகளின் அர்த்தத்தை எவ்வாறு அறிவார்?" என்று. ஸத்யம் ஶ்ரீ॥ நாம் கீழே அவதாரணிகையில் (பக்கம் 9ல்) விளக்கிக் காட்டி யிருக்கிறபடி இவருடைய ஜ்ஞாநவிஜ்ஞாநஸாம்ராஜ்யத்தை அலசியலசி புதறிபுதறி அண்ணங்கராசார்யஸ்வாமி வெளியிட்டிருக்கிற சேஷாவதாரச் சிறப்பு முதலிய பல நூல்களுக்கு *சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள்பாய்ந்து வாய்மூடிக்கிடந்தவிவர் இப்போது அந்த ஸ்வாமியை நோக்கி இலேசாக ஒரு வார்த்தையை எழுதிவைத்த இவ்வளவாலேயே, இவர்தம்முடைய ஞானச்சாயங்களை வெளியிட்டுள்ள அந்த ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திகளுக்கெல்லாம் கண்டனமெழுதிவிட்டதாக லாவிக்கப் பாரிக்கின்றார். அண்ணங்கராசார் ஸ்வாமிக்கு ஸ்வாசார்ய ஸ்ரீஸூக்திகளின் அர்த்தமே தெரியாதென்றும் தேசிகன் ஸ்ரீஸூக்திகளுக்கு கிம்பூத? என்றும் இவர் எழுதுகிறார். தேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளுக்கு உண்மையான உட்பொருள்களை உணர்ந்து உரைத்தருளவல்லவர் * வேதாந்த தேசிக கடாக்ஷவிவ்ருத்தபோதாய ஸ்ரீ வரவாதிபயங்கராய-லக்ஷ்மண

திவுகரான அந்த அண்ணங்கராசார் ஸ்வாமி தவிர வேறொருவரு மிப்போதில்லை என்பது ஸகலவிஜ்ஞநவிஸதீக்ருதம். தேசிக னுட்பட ஸகல ஆசார்யர்களுடையவும் ஸ்ரீஸூக்திகளின் பல பல ஸாராயங்களை வெளியிட்டு அந்த ஸ்வாமி பிரகாசிப்பித்தருளி யிருக்கின்ற நூற்றுக்கணக்கான ஸ்ரீகோசங்களில் ஒரு வழுவை யாவது இவர் எடுத்துக்காட்ட முன்வருவரோ? அப்படி இவர் முன் வரவேண்டும்படியாக அந்த ஸ்வாமி ஏற்கனவே பல ஸஞ்சிகை களால் இவரை உத்தேஜநம் செய்திருந்தும் * விஹஷணம் ஜ்ஞாந வேஷிதா நாமென்ற ந்யாயத்தையே யன்றோ இவர் அவ லம்பித்து வருகிறார். அவருடைய ஞானம் எங்ஙனேயாவது கிடக் கட்டும். தேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளின் பொருளை அறிவதில் இவருடைய யோக்யதை எவ்வளவென்பதை இன்னமும் ஆராய் வோம். ஸ்ரீயதிராஜ ஸப்ததியிலுள்ள * ஸகலகலாவிலாஸ த்வைத் ஸ்வாயே ஸாமிராஸங்யைதாநேஷ என்ற மிக ஸாதாரணமான ச்லோகத்தின் பொருளைக்கூட உள்ளபடி உணர மாட்டாதவிவர் ஸகஷாஸ்ர வஸிஹாஸ்மாகவே அதற்கு அர்த்த மெழுதியுள்ளாரென்றும் ஸதந்ஸிஷ்யோமம் ஹாவேஷ்யோமம் என்கிற சிறு விஷயங்கூட இவர்க்குத் தெரியவில்லையென்றும் அண் ணங்கராசார் ஸ்வாமி சேஷாவதாரச் சிறப்பு நூலில் விளக்கி யிருக் கின்றார். அந்த தூஷணத்தை இந்தச்சேட்லூரார் என்றைக்கு வார ணஞ்செய்துகொண்டாலும் அன்றைக்கே இவர் பாதத்தில்பணிந்து 'தேசிக தர்சநாசார்யர் இவரே' யென்று பறைசாற்ற ஸித்தனாயிரா நின்றேன். இந்த வொன்றுக்கு விடையளித்தாலும் போதுமே.

அல்பஜ்ஞனான அடியேனும் இந்தச் சிறு புத்தகத்தில் இவ ருடைய ஸந்யாஜ்ஞாநவிஜ்ரம்ஹிதங்கள் பலவற்றை யெடுத்துக் காட்டியிருக்கின்றேன். இவற்றில் ஒன்றுக்காவது இவர் ஸமா தாநம் கூறிவிட்டாலும் தேஸிகஹ்ருதயாபிஜ்ஞர் இவரே யென்று தேசமெங்கும் திரிந்து தெரிவிப்பேன். கீழ் அவதாரணிகையில் (பக்கம் 6ல்) ஸூக்ஷ்மமாக நான் எடுத்துக்காட்டியுள்ள ஸச்சரித்ர ரக்ஷா விஷயத்தை இங்கு மீண்டும் விளக்கிக்காட்டுகிறேன். ஸ்வாமி

தேசிகன் ஸச்சரித்ரரக்ஷையில் ஹவிர்வேதிதோஷயோகமாயி காரத்தில் ஹவிர்வேதிதங்களை ஸ்வீகரிக்கவேண்டிய ஆவச்ய கதைக்கு ப்ரமாணராசிகளைக் காட்டிவருமடைவிலே, மலையாள தேசங்களிலுள்ள பிராமணர்கள் சிலர் ஹவிர்வேதிதங்களைப் பரித்யஜித்தொழிகின்றார்களே, அது என்? என்று உபக்ஷேபித்துக் கொண்டு அதற்குஸமாதாநமாக * தஸ்மாத் அஹிச்சத்ர ப்ராஹ்மணீஸுராபாநாதிவத் அவந்யாயஸித்த துர்வாதநிராகரணீய: என்று அருளிச் செய்துள்ளார். அதாவது—'சில பிசகான தேசாசாரங்களை யெடுத்துக்கொண்டு துர்வாதம் செய்யலாகாது; அஹிச்சத்ர தேசத்தில் பிராம்மண ஸ்த்ரீகள் மத்யபாநம் செய்கிற ஆசாரமிருக்கிறது; அதைக்கொண்டு ஸுராபாநம் சாஸ்த்ரீயமென்று சொல்லிவிட லாமோ? அந்த தேசாசாரம் எப்படி அநியாயமோ அப்படியே மலையாளத்து ஆசாரமும் அநியாயமே—என்று ஸாதிப்பதே இங்கு தேசிகன் திருவுள்ளம். அஹிச்சத்ர மென்பது ஜநபதவிசேஷத்தின் பெயர் என்று ஸகலநிகண்டுகாரர்களும் எழுதியுள்ளார்கள். அப்படி கொள்ளாவிடில் பிரகிருதத்திற்குப் பொருத்தமுமில்லை. அஹிச்சத்ர மென்றால் 'நாய்க்கொடையை ஸாப்பிடுவது' என்று அர்த்தம்— என்று இச்சேட்லூரார் எழுதி நிர்ப்பயமாக அச்சிட்டும் விட்டார். இப்போது இவர் என்ன சொல்லுவரென்றால், 'இதுவும் ஒரு அர்த்தமாக இருக்கட்டுமே' என்பர். * அஹிச்சத்ர ப்ராஹ்மணீஸுராபாநாதிவத் என்ற ஸமஸ்தபதத்திற்கு [தம்முடைய விவரணத்திற்கிணங்க] இவர் விக்ரஹம் சொல்லி விடுவாரானால் இவரை விக்ரஹமாக வைத்து ஆராதிக்க விவாதமே யிராது. எந்த பதத்திற்கும் எந்த பதத்திற்கும் அந்வயஸம்பந்தம் பண்ணுகிறரென்பது தெரியவேண்டும். ஶப்தஶாஸ்த்ரங்களை நன்கு அறிந்தவர்களன்றோ தேசிகன்வாக்கில் வாய்வைக்கவேண்டும். மற்றொன்றும் பாருங்கள்; தேசிகனது சில்லரை ரஹஸ்யங்களில் தத்வ மாத்ருகையின் முடிவில் * அக்ஷய்யஶக்தி ஸகல நாதஸ்ய ஸந்தாநு என்றொரு ச்லோகமுள்ளது. இதில் [அக்ஷய்ய] என்பதற்கு [அழி வில்லாத] என்று [பக்கம் 251ல்] இச்சேட்லூரார் அர்த்தமெழுதி யுள்ளார். அக்ஷய. என்ற பதமும் அக்ஷய்ய என்ற பதமும் பரியாயமேயென்று இவர் நினைத்துவிட்டார். * க்ஷய்யஜய்ய ஶக்ய

யெடு॥ என்ற வாணிநீயஸூத்ரு விசேஷத்தினுல் தெரிந்து கொள்ளவேண்டிய நட்பத்தைத் தெரிந்துகொள்ளாமலே [அதாவது ஸந்திப்ரகரணம் வரையிலுங்கூட கௌமுதியை வாசியாமலே] தேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளுக்கு அர்த்தமெழுதிவிடுகிறதென்றால் * இதனில் மிக்கோரயர்வுண்டே? தம் நிலைமை இங்ஙனேயிருக்க, "தேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளின் அர்த்தம் அண்ணங்கராசாரியருக்கு எப்படி தெரியப்போகிறது" என்று இலேசாய் எழுதிவிடுவதற்கு இவரா அதிகாரி?

இன்னமும் ஒரு வேடிக்கை பாருங்கள்;—"தன்னுருக்கெடுத்து வேற்றுருக்கொண்டு" என்பது ஒரு ஸ்ரீஸூக்தி. இது பிள்ளை லோகாசார்யருடைய ப்ரபந்நபரித்ராண ரஹஸ்யத்திலுள்ளது. இதைதேசிகனும் தத்வமாத்ருகையில் உபயோகித்தருளினர். இந்த ஸ்ரீஸூக்தியின் சுவையையறியமாட்டாத இச்சேட்லூரார் * தன்னுருக் கோடுத்து=என்பதாக அவ்வாக்கியத்தை யெழுதி, [கோடுத்து—பறிகொடுத்து] என்று அர்த்தமும் (பக்கம் 219ல்) எழுதி மிகவும் ரஸாபாஸப் படுத்திவைத்தார். ஆகவிப்படி வடமொழியிலும் தென்மொழியிலும் மேலெழுந்தவாரியாய்ப் பார்க்குமளவிலும் வெறுக்கத்தக்கதான வழியிலே இவர் எழுதியுள்ள அபத்தங்கள் வாரொவராயடும். அறிவில் மிகச் சிறியவனை அடியேனே இவ்வளவு எடுத்துக்காட்டினேனெனில், மஹா ப்ராஜ்ஞர்கள் கைவைக்கப்புகுந்தால் இவருடைய சாயம் என்னுகுமென்பது சொல்லவேண்டா. வஸ்துதஃ மஹாப்ராஜ்ஞர்கள் இவரது நூல்களைக் கண்ணெடுத்தும் பாரார். ஸ்வாமி தேசிகன் ஓரிரவில் ஆயிரம் ச்லோகம் செய்வதாகப் பிரதிஜ்ஞைபண்ணித் தலைக்கட்டினுரென்கிறுப்போலே, அடியேனும் ஒருநாழிகைப் பொழுதில் இவருடைய நூலில் ஆயிரம் அபத்தங்களை யெடுத்துக்காட்டுவதாக ப்ரதிஜ்ஞைபண்ணித் தலைக்கட்டுவேனென்பதில் தடையேயிராது. அப்படிக்கு ஒரு ஸமயம் வாய்க்குமா?

அண்ணங்கராசார் ஸ்வாமி சில விஷயங்களை மறந்துவிட்டதாக இங்கே சேட்லூரார் எழுதுகிறுர். [பக்கம் 144 பாருங்கள்.] பெரியவாச்சான்பிள்ளை தேசிகனிடம் கேட்டு ந்யாஸவித்யை விஷயமாக

ந்யாஸவிம்சதியையும் அதன் வியாக்கியானத்தையும் க்ரஹித்தாராம். அதை அண்ணங்கராசார் ஸ்வாமி மறந்துவிட்டாராம். பிள்ளை லோகாசாரியர் தேசிகனை ஆச்ரயித்து ஸ்ரீபாஷ்யாதிகள் காலக்ஷேபம் செய்ததையும், தேசிகன் விஷயமாய் சீரொன்று தூப்புல் என்று ப்ரஸித்தமான தனியனை விண்ணப்பம் செய்ததையும் அண்ணங்கராசார் கேட்டதில்லையா? என்கிறார். இவற்றுக்கு விடையளிப்போம். அண்ணங்கராசார் ஸ்வாமி ஒன்றையும் மறப்பாரல்லர்; ஒன்றையும் கேளாமலிருப்பாருமல்லர். மறப்பு என்பது ஸம்யக் க்ருஹீதமானவொருவிஷயத்தைப்பற்றி நேரக்கூடியதேயன்றி ஶஶவிஷாணயொர்ந விஷயெஷு விஷாணவாநும் அபஹாஸ்யம். தேசிகனைவிடபெரியவாச்சான்பிள்ளை திருநக்ஷத்ரத்தால் எவ்வளவோ பெரியவர் என்பது எப்படி விச்வப்ரஸித்தமோ, அப்படியே ஞானத்திலும் மிகப்பெரியவர் என்பது நிர்விவாதம். பெரியவாச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்திகளை தேசிகன் உச்சிமேல்வைத்து மெச்சியிருக்கின்றாரென்பதைக் கீழே ஸஸாக்ஷிகமாகவே நிரூபித்துள்ளேன். மேற்பட்டவர்களும் கீழ்ப்பட்டவர்களைச் சிலவிஷயங்கள் கேட்கிற முறையிலேயாவது பெரியவாச்சான்பிள்ளை கேட்டதாகச் சொல்லக்கூடுமோவென்று பார்ப்போம். ந்யாஸவிம்ஶதிக்கு மூன்று வியாக்கியானங்கள் வெளிவந்துள்ளன. ஒன்றிலும் இவ்விஷயம் ப்ரஸ்தாவிக்கப்படவில்லை. வரித்ருவெவகர்களும் இதையெழுதியிருக்கவில்லை. உண்மையில் பெரியவாச்சான்பிள்ளையின் வேண்டுகோளுக்காக ந்யாஸவிம்ஶதி பணித்ததாயிருந்தால் "இன்னாருக்காக இதைச் செய்தேன்" என்று ஸ்வாமி தாமே அருளிச்செய்யாதொழியார். தத்வஸந்தேஶமென்னும் ஒரு சில்லரை ரஹஸ்யத்தின் ஆதியிலும் அந்தத்திலும்—"ஸ்வாயீநத்ரிவிஷயதாரெஷ ரஹிதாயஃ ப்ரகாஶ்யதெ। கஸ்யசித்தத்வநிஷ்கஸ்ய காங்க்ஷிதப்ரதிவத்தயெ॥" என்றும் "......கநுயொக்தும்। ஜயதீதி நிகமாந்த தெஶிகெந ப்ரதிஸம்ஜிஶ்ய தாயவாத்ஜஸ்ய" என்றும் இன்னாருக்காக இட்டதென்று குறிப்பிட்டுவைத்தாப்போலே இதிலும் குறிப்பிட்டுவைத்தேயிருப்பர். அப்படியொன்றுமில்லாமையாலே இவர் தாமாகவேகல்பித்த இந்த ஐதிஹ்யம் இவர்தாம் கதவடைத்து நடத்தும் காலக்ஷேப கோஷ்டியிலே விலைச் செல்லலாமத்தனை.

(பக்கம் 114ல் ஐந்தாவது வரியில் இவரே யெழுதியிருப்பதோடும் விரோதிக்குமிது.)

[இனி இரண்டாவது விஷயம்.] பிள்ளை லோகாசார்யர் அஷ்டாதசரஹஸ்யங்களுமருளிச் செய்து அவை ப்ரவசநத்திலும் வந்து பரந்த பின்பே தேசிகன் க்ரந்தமெழுதத் தொடங்கினரென்பது உபய க்ரந்தங்களிலும் அவகாஹித்தவர்களுக்கு அநாயாஸமாய்த் தெரியும். தத்வசேகராதிகளான பல ரஹஸ்யங்களிலே ஸ்ரீபாஷ்யார்த்தங்களைப் பொழிந்திருக்கின்ற பிள்ளை லோகாசார்யர் ப்ராயேண ஸ்வஸ்நாவஜீவநந ரஹஸ்யாதிகளிட்டருளினவரான ஸ்வாமிஸவயஸ்க தேசிகனிடத்திலே ஸ்ரீ பாஷ்யம் கேட்க ப்ரஸக்திலேசமுமில்லை. தென்னாசார்யர்களின் ஸ்ரீபாஷ்யகால க்ஷேபஸம்ப்ரதாயவரையிலே "ச்ருதப்ரகாசிகா யஸ்யை ஸம்ப்ரதாயஸ்ய வர்த்திநீ। நீதா ஸர்வதிசம் நாயேந ஜ்ஞாநாயம் தம் ச்ரயே॥" என்கிறதனியன் அநுஸந்திக்கப்பட்டுவருவதை நோக்கினல் தப்பான ஐதிஹ்யத்திற்கு ஸ்தாநம் ப்ரஸக்தியில்லை.

இன்னமும் பிள்ளை லோகாசார்யர் திருநாட்டுக்கெழுந்தருளின பின்பே தேசிகன் ரஹஸ்யத்ரயஸாரமிட்டருளினதாக இச் சேட்லூரார் எழுதுகிருர். அதற்கு முந்தியே லோகாசார்யர் தேசிகனை ஆச்ரயித்து வழிபட்டிருந்தால் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் அந்த லோகாசார்யரை நிந்தித்தெழுதிவைக்க அவகாச லேசமாவது இருக்குமோவென்று விவேகிகள் விமர்சிக்கவேண்டும். ஸ்ரீவசநபூஷணம் முமுக்ஷுப்படி முதலிய லோகாசார்ய ரஹஸ்யங்களிலுள்ள திவ்ய ஸூக்திகளை ரஹஸ்யத்ரய ஸாரத்தில் தேசிகன் மறுத்திருக்கிருரென்பதும், அந்த லோகாசார்யரை யுத்தேசித்தே *த்ருஶவேதிவக்ரோத்பன்னை: இத்யாதிகளை யெழுதினு ரென்பதும், அதற்கு ப்ரதிஸத்காரமாகவே முன்னோர் மொழிந்த முறைதப்பாமவித்யாதி திவ்ய ஸ்ரீஸூக்தி திருவவதரித்ததென்பதும் ஸர்வஸம்ப்ரதிபன்னமாயிருக்க, ஒன்ருேடும் இணங்காத ஒரு ஐதிஹ்யத்தை இவர் எழுதுவது அஸமஞ்ஜஸம்.

சீரொன்று தூப்புல் திருவேங்கட முடையான் என்ற தனியனை லோகாசார்யர் அருளிச்செய்தா ரென்பதை அண்ணங்கராசார் கேட்ட தில்லையா? என்கிறார் சேட்லூரார்.

ஏற்கனவே அண்ணங்கராசார்ய ஸ்வாமி அதற்கு மறுமொழி எழுதி வெளியிட்டேயிருக்கிறார். க்ஷுவக்ஷுத்ரஸ்லோகங்களுக்கு மறுபடியும் தெரிவிப்போம். அந்தத் தனியன் பிள்ளை லோகாசாரியர் அருளிச் செய்ததுதானென்று நிர்விவாத நிராபாய ப்ரமாணங்களினால் ஸித்தித்து விடுமாகில் அதைக்கொண்டே 'தேசிகன் லோகாசார்ய ஸஹாஸ்ரீதரே' என்பதும் கல்வெட்டாகத் தேறிவிடக் குறையில்லை. எங்ஙனே யென்னில்; தனியன் இயற்றவேண்டிய கடமையுடையார் இன்னாரென்பதை நன்னூல்காரர் சொல்லுமிடத்து, "**தன்னாசிரியன் தன்னொடு கற்றோன், தன் மாணாக்கன்** தகு முரைகாரனென்று, இன்னோர் பாயிரமியம்புதல் கடனே" என்ற ஸூத்ரத்தினால், ஆசார்யன், ஸஹபாடி, சிஷ்யன், வ்யாக்யாதா என்ற நால்வர்க்குத் தனியனியற்ற அதிகார முண்டென்று காட்டினார். தேசிகனுக்கு லோகாசார்யர் தாம் ஆசாரியர் என்னும் முறைமையினால் தனியனிட்டிருக்கலாமேயன்றி மற்ற விதமான ப்ரத்யாஸத்திகளில் எதுவுமில்லையென்பது ப்ரமாணஸம்மதவ்ருத்தி வளும். தேசிகனும் ஸ்வசிஷ்யரான ப்ரஹ்மதந்திரஸ்வதந்த்ர ஸ்வாமிக்குத் தனியனிட்டருளினாரென்பது ஸர்வஸாஹ்யபஹதம். இந்த கணக்கிலே லோகாசார்யரும் தேசிகனுக்குத் தனியனிட்டிருக்கத் தகுதியுண்டு. ஆரியர்காள்! அந்தத்தனியன் லோகாசார்யர் பணித்ததன்று என்றால், தேசிகன் லோகாசார்யர் திருவடிகளில் ஆச்ரயித்தாரென்கிற விஷயம் சிறிது ஸம்ஶயக்ரஸ்தமாகவே கிடக்கும். 'அது லோகாசார்யர் பணித்ததே' என்று நிஸ்ஸந்தேஹமாகில், தேசிகன் திருமுடியை லோகதேசிகன் திருவடிகளிற்கொண்டு முட்டவைத்தாலல்லது அதுபொருந்தமாட்டாதென்பது த்ருஹிணனாலும் மறுக்க முடியாதது. செம்மின் வாயுடையீர்!.

தேசிகனுடைய க்ரந்தங்களின் த்ராவலி, ரஹஸ்யங்களின் அவதார காலத்தை அறுதியிடுவதில் இந்த ஷேயோவிக்குச் சிறிதும்

அதிகார மில்லை யென்பதைப் பலகாலும் பகர்வோம். இவர்தாமே சில்லரை ரஹஸ்யங்களைப் பதிப்பித்தபோது 'முதல் ரஹஸ்யமான ஸம்ப்ரதாய பரிசுத்தி' என்று பதிப்பித்து வைத்தார். இவரே இப்போது அதை இரண்டாவது ரஹஸ்யமென்கிறார். இன்றளவும் ஒருவரும் சொல்லியுங் கேட்டுமறியாத ஒரு க்ரந்தத்தைத் தாமாகக் கல்பித்து அதுவே முதல் ரஹஸ்ய மென்று மெழுதி அது லோபித்துவிட்ட தென்றும் முடித்துவிட்டார். ஶ்லோ॥ ஸ்வவ்யவஸ்தித விதாநாம் ஸ்வஸ்தம் ஶிவதாஜஸஸ்॥ வந்தாத்ருஶாநாம் ஶாஸ்த்ராநாம் வஶோவீக்ஷா வ்யயாவ்யயா॥

இன்னமும் சேட்லூரார் (பக்கம் 145ல்) அண்ணங்கராசார் ஸ்வாமியைப்பற்றி யெழுதுகிறார்—"தம்முடைய பூர்வாசார்யர்களுடைய க்ரந்தங்களில் தமக்குப் பரிசயமில்லாமையைத் தாமே தெரிவித்துக் கொண்டாராயிற்று" என்கிறார். இந்த வார்த்தை அண்ணங்கராசார் ஸ்வாமியிடத்தில் பொருந்துவதற்கு எள்ளளவும் ப்ரஸக்தியில்லை. இச்சேட்லூரார் திறத்திலேயே இது செவ்வனே சேருமென்பது இந்த நமது நூலில் ஒவ்வொருவரியாலும் விளக்கப் பட்டதாயிற்று.

"அண்ணங்கராசாரியர் தம்முடைய பூருவாசாரியர்களுக்காவது ஒரு பெருமையை ஸாதித்தாருமில்லை" என்கிறார் சேட்லூரார். வாதரக்ஷாஶிக்ஷாஶௌத்திஹ்யங்களை யெழுதி வைத்து இவர் ஸ்வாசார்யருக்கு வேண்டிய பெருமைகளை ஸாதித்துவைத்திருக்கிறாரே, அதுவே போதும். இப்படிப்பட்ட ப்ரவீணரும் மற்றையோர்க்கு எங்ஙனே அமையும்?

இங்கே இவர் ஜாதி விகாஸ விசாரம் பண்ணத் தொடங்கிவிட்டார். மிகச் சிறிய விஷயங்களில் வாய்வைக்கவும் அநதிகாரியென்று விளங்கி நிற்குமிவர் பெரிய விஷயத்தில் ஸஹஸா பிரவேசிப்பதென்னோ? இவரை இலக்காகக்கொண்டு சீரிய நுண்பொருள்களை வாரியிறைக்க வெள்கி நிற்கின்றோம்.

இன்னமும் சேட்லூரார் எழுதுகிறார்— "ஆழ்வாராதிகளுடைய அர்ச்சாப்ரதிஷ்டாதிகள் கூடாதென்று அத்வைதிகள் ஆக்ஷேபித்த காலத்தில் எங்கள் தூப்புல் பிள்ளையிறே முன்வந்து அவர்களை

நிரவித்தருளியது. அக் காலத்தில் மற்றப் பிள்ளைகள் இருந்தவிடம் எங்கே?" என்கிறார். இதற்குச் சுருக்கமாக விடையளிப்போம். இவர் எங்கள் தூப்புல் பிள்ளை யென்று தேசிகனோடே தமக்கொரு உறவு சொல்லிக்கொள்வது நிர்மூலம். ஸமாச்ரயண பரம்பரையிலாவது க்ரந்த பரம்பரையிலாவது மற்று எந்த பரம்பரையிலாவது தூப்புல் பிள்ளை இவர்க்குண்டோ? அந்த பரம்பரையாகவுண்டென்னில் என்னலாம். 'வேதங்களுக்கு நாங்களே இட்டுப் பிறந்தவர்கள்' என்று சொல்லிக்கொள்ளுகிற மதாந்தரஸ்தர்கள் *ஸிஹெதூ ஸூ ரூாதாதிதாதிக்கு ஹாயகைகூஷமாயிருப்பது போலவே, தேசிகனுடைய ஸூக்திகளுக்கு இட்டுப்பிறந்தோராக அபிமாநிக்குமவர்களும் தது[illegible]நயொமக்ஷேர்களே யென்னுமிடம் வாநுஸாதும். "ப்ரதிவாதிபயங்கராசார்ய வம்ஸ்யர்களோடே ஏதேனுமொரு அந்வயம் பெற ஹாமூ முண்டாகில் தேசிகனோடே சிறிது ஸம்பந்தமுடையோ மென்று பொரிபுறந்தடவியாவது பேசிக்கொள்ளலாம்" என்று போரேற்றுப் பிள்ளை பணிப்பராம். இது நிற்க.

புறமதத்தவர்களோடே தேசிகன் வாதயுத்தம் பண்ணி வெற்றி பெற்றாரென்றும் அப்போது மற்ற ஆசார்யர்கள் இருந்தவிடம் தெரியாமலிருந்தனரென்றும் எழுதுவது நிர்மூலமும் மூலவிருத்தமுமாம். தேசிகனுக்கு அவ்வளவு வல்லமையில்லை யென்று யாரும் சொல்லவும் நினைக்கவுமில்லை. ஸாக்ஷாஜ்ஜமீஶ்வரனே வாது புரிய வந்தாலும் அவனையும் வென்று தள்ளிவிடுவாரென்பதில் யாருக்கும் விப்ரதிபத்தியிராது. ஆனால் "இல்லாத விஷயத்தை இருப்பதாகச் சொல்லி அதனால் ஒரு பெருமை பெறப்பார்ப்பது ஹாஸ்யாஸ்பதமாகும்" என்று இந்தச் சேட்லூரார் தாமே எழுதியிருக்கிறபடி இல்லாத கதைகளை வீணே எழுதி உலகை வஞ்சிக்க வேண்டா என்பதே நாம் சொல்லுவது. தேசிகனுடைய தினசர்யையில் "ஸஹா ஸூஜமீ" என்றதனால், ஸிஷாஸ்யூவநாயமாக ஸ்ரீநூவெவநகெளைகய்த்தை மாத்திரம் அவர் ஏற்றுக்கொண்டவரேயன்றி மற்றைப்படி வாத யுத்தங்களிலே தலையிட்டுக்கொள்வதைச் சிறிதும் வைத்துக்கொண்டவரல்லர் என்றே பிராமாணிக மஹநீயர் கூறுவது. ஜெஸிகவரிதூவெவகர்களுள்

கூடியமட்டும் பிராமாணிகராகச் சொல்லக்கூடியவரான ஸ்வாமி ஸம்ப்ரதாயிகளாரும் மற்றுள்ளோரும் ஆசார்யவிஜயகர்த்தாவான க்ருஷ்ணமிச்ரனுக்கும் தேசிகனுக்கும் பதினெட்டு நாள் வாத யுத்தம் நடந்ததாக மிகவிபுலமான புராணம் எழுதிவைத்தார்கள். ஆசார்ய சம்புவில் இந்த கதையே நாலத்தொருபாகம் என்றும் சொல்லலாம். அப்படிப்பட்ட கதை உளுபுளாய்க்குட்டியேயென்பதை அண்ணங்கராசார் ஸ்வாமி ஏற்கனவே ஸவிஸ்தரப்ரமாண ஸஹஸ்ரமாக நிரூபித்திருந்தார். அதையநுஸரித்தே இந்தச் சேட்லூராரும் அந்தக் கதை தப்புக் கதைதான் என்று (பக்கம் 137ல்) ஸ்தாபித்துவிட்டார். ஆனால் வேறொரு கிருஷ்ண மிச்ரநாமதேயன் வந்து வாது செய்திருக்கலாமென்று சப்பைக்கட்டு கட்டுகிறார். அங்ஙனுைலும் பிரபோத சந்திரோதய நாடகம் செய்த கிருஷ்ண மிச்ரனே நேரில் வந்து வாது செய்ததாக எழுதியுள்ள முற்கூறிய சரித்திர நூல்கள் வித்யாவாதவிஜயத்தைத் தங்களே யென்பதை மறுத்துப்பேச யாரும் வாய்திறக்க முடியாது. இப்படி அஸம்பத்தமான கதைகளைச் சில அசட்டுப்பரமைகாந்திகள் வீண்டம்பத்திற்காக எழுதிவைத்துவிட்டால் அதையெல்லாம் மெய்யெனக் கொண்டு தத்த்வாசார்ய ஸ்வாமியை ஏற்றியேற்றி வைப்பதோடு நில்லாமல் மற்ற ஸர்வஜ்ஞாசார்யர்களை ஹேளநமாகப் பேசவும் புகுவது வீணபசாரம் என்பதை மாத்திரம் இங்குச் சொல்லி நிற்போம்.

ஆழ்வார்களின் பெருமையையும் அருளிச் செயல்களின் மேன்மையையும் தேசிகனே வெளியிட்டவரென்று எழுதுகிறார். இது மிகவு முண்மையே. வைஷ்ணவர் யாரும் இதை மறுக்க மனத்திலும் நினையார். அதனால் இவர்க்கென்னவோ? பாம்புகடித்துப் பரிதபித்துச் செல்லா நின்ற வொருவனைச் சுட்டி 'எங்கள் குடிக்கரசன் செய்த செயல் என்னே!' என்றதாம் ஒரு நாக்குப்பூச்சி. * ஸாரவாதிஹம்ஸாம்புவாஹாசார்யசிஷ்யஜகத்யாதிச்லோகத்தை யெடுத்துக் காட்டுகிறார். [யே யதீந்த்ராச்ரயா: தே ஷஸி கே ஹஸ்திஹீநா:] * செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளுஞ்சிறந்த பெரும்பூதூர்ச் சீமானிளையாழ்வாருக்கு யார் ஆசார்யர்களாக

ப்ரத்யக்ஷத்தில் காணப்படுகின்றனரோ அவர்களே 'ஜ்ஞாநஹீநா:' என்றதற்கு இலக்காகத் தகுதியுடையார்.

இந்தப்ரகரணத்தில் * ஸ்வஸித்தாந்தநாசகஸித்தாந்தஸ்ய நிஜமாத்ருஷ்ய ஸஹஸ்ரம் ஸர்வஜ்ஞஸ்வாமிஸந்தர்ஸநதோ விவ்ருதிர்ஜய: என்கிற யதிராஜ ஸப்ததிஸூக்தியைச் சேட்லூரார் அண்ணங்கராசார் ஸ்வாமிக்கு ஸமர்ப்பிக்கிறார். ஏற்கனவே இதைச் ச்லோகத்தை அண்ணங்கராசார் ஸ்வாமி தமது சேஷாவதாரச் சிறப்பின் முடிவில் இந்தச் சேட்லூரார்க்கு அளித்திருக்கிறாரென்பதை யாரும் மறந்திரார்கள். அவரெடுத்துக்காட்டினச்லோகமென்பது கொண்டே இவரும் எடுத்துக்காட்டி விட்டாரேயன்றி அந்தச் ச்லோகத்தின் கருத்து இன்னதென்பது இவர்மதிக்கு எட்டிற்று இல்லையா என்று நமக்கு ஸந்தேஹமே.

அண்ணங்கராசாரியர் ஸ்வாத்மோஜ்ஜீவநஸாதநமான உபாயத்தை அநுஷ்டாநம் செய்யத்வரிக்கவேண்டும் என்று (பக்கம் 147ல்) சேட்லூரார் நிரூபித்திருக்கிறார். * நிர்ஹேதுகநிர்ப்பயோஸ்மி என்றிருப்பார் திறளிலே ஒருமிடறாகச்சேர்ந்து க்ருதக்ருத்யராயிருக்குமவர் * ஸர்வாவஸ்தாஸு ஸர்வத்ர என்றவருடைய ஸ்வபாவத்திற் காட்டிலும் ஸ்வதந்த்ரவைபவஹிதராகையாலே ஒன்றுக்கும் த்வரிக்கவேண்டிய ஆவச்யகதையில்லை. ஸ்வரூப விருத்த காரியங்களில் அநுராகமும் த்வரையும் எல்லாம் இவர்க்கே உரியன. * நிஷாநம் தத்ராவிஸ்மயவீர்யநிர்மாணநிபுணா: என்ற நம் தேசிகனுடைய ஸூக்தியில் சுவடறியாத [வ்யூஹஹ்ர்களான] தேசிகத்வேஷிகளுக்கு நாம் உரைப்பதெல்லாம் ஊமையரோடு செவிடர் வார்த்தையாமென்று விலகி நிற்போம்.

தேசிகனது தனியன்கள் விஷயமாக இவர் எழுதியிருக்கும் கல்பனைகளுக்குச் சுருக்கமான பதில் எழுதி முடிப்போம். ஸ்வாமி தேசிகனுக்கு * ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: என்கிற ஒருதனியனே ப்ராமாணிகமும் ப்ராசீநமுமாகும். மற்றைத் தனியன் விச்வாமித்ர ஸ்ருஷ்டியே யென்பதில் விவேகிகள் ஈஷத்தும் ஸந்தேஹிக்கமாட்டார்கள். தேசிகனுடைய திருவவதாரஸ்தலத்திலும் மற்றும்

திவ்ய தேசங்களிலும் தலைகாட்டமாட்டாததும், தலைகாட்டத்தகா தென்று * காருள்ளளவும் கடல் நீருள்ளளவும் வேத முள்ளளவும் வேதகீத னுள்ளளவும் விலைச் செல்லவல்ல ராஜஶாஸநங்களாலே நிரஸ்தமும், அந்த ஶாஸநத்தைக் கடந்து நடக்க முயன்றார்க் குக் கைகண்ட பலனளித்ததும் இங்ஙனே எஞ்ஞான்று மழிக்கவல் லதும், அயிந்தை குடந்தை யழுந்தூரெவ்வுளூர் முதலிய நாலெட் டுத் தலங்களில் மாயச்செயல்களாலே சில நாளாகவே வந்துபுகுந்த தும், மற்றும் பல வகைகளாலே ஸர்வஸார்வதாராஜநிக்ரஹ ஹ்ருதயாநஸாக்ஷிகமான ஒரு வ்ருத்தத்தைப் பற்றிப் பெருமையாக எழுதிக்கொள்வது வைஷ்ணவர்களுக்கும் ஸஜ்ஜநாதிகளுக்குமே க்ஷதிஜாக்ருஷ்டவாஜநகமாயிருக்குமாதலால் ஶிஷ்டஸஜ்ஜநாபவாதந்யாயத்தாலே இதில் இவ்வளவோடு விரதராவதோம்.

நாம் இப்போது ப்ரத்யவேக்ஷ்யமாகக் கொண்ட புத்தகம் காலோடு தலையீறாக அக்ஷரங்களாலும் ஶப்தங்களாலும் விஷயங்க ளாலும் ஸர்வாத்மநா அஸம்பத்தமென்பது இதில் மிக விரிவாக வே நிரூபிக்கப்பட்டாயிற்று. அஸாரமயமான அந்தப்புத்தகத்தில் பத்தெட்டு பக்கங்கள் ஸாரமாகக் கொள்ளப்பட்டன. அதாவது— இந்தச் சேட்லூராருடைய ஜ்ஞாதிகளுள் ஒருவரான ஸ்ரீஸுந்தர ராகவாசார்ய ஸ்வாமியினால் தேசிகனுடைய கவித்வத்தைப்பற்றி மிக்க ஆராய்ச்சியுடன் எழுதப்பட்டு ‘மூன்றும் அநுபந்தம்’ என்று சேர்த்து அச்சிடப்பட்டுள்ள விஷயம் உண்மையில் ஸஹ்ருதயஹ்ருதயஹாரியே. ஜயாபிலாஷிகள் செய்யக்கடவ காரியம் இத் தகைத்தாகவன்றோ இருக்கும். யேநகேந ப்ரகாரேண ப்ரஸித்தஃ புருஷோ பவேத் என்பதையே கொண்டு உலகை வஞ்சிக்கப் புகுமவர்கள் இனியாகிலும் உள்ளடங்கி நின்றால் அழகாகும்.

உபஸம்ஹாரம்.

ஷ புத்தகத்தில் “நாலாம் அநுபந்தம்-ஸ்வாமியின் கல்யாண குணங்கள்” என்ற தலைப்பின்கீழ் ஏதோ எழுதி வருகின்றவிவர் ஸ்வாமி தேசிகனுடைய கல்யாணகுண பூர்த்தியைப்பற்றி எவ்வள வோ ஆச்சரியமாக எழுதவேண்டியிருக்க அங்ஙனம் ஓரக்ஷரமும்

எழுதாமல், *ஶ்ருணுஷ்வாவதாநேந என்றதையும் குறிக்கொள்ளாமல் மிகவும் அச்லீலமான வாசகங்களைக்கொண்டு புத்தகத்தை முடித்திருக்கின்றார். “ வ்யாஸோக்தே வ்யஸநார்ணவ ஶோகஶ்லோகாஸுதிநோக்த்யுதிஃ புஷ்ட்யா பஹுஸங்கடே நிவதிதா வாஸீக்ருதோதிதஃ” என்பதே இவரது முடிவுவாக்கியம். அதன் பிறகு * ஸ்ரீரஸ்து கூட கிடையாது. வ்யஸநமும் ஶோகமும் ஸங்கடமுமாகவே நூலை முடித்து வைத்தார். தத்தந்ந்யாயத்திலே த்ருஷ்டிபோலும், நிமநாநந்தவைபவமும் கைமேலே பெற்று நின்றார்காண்மின்.

அந்த முடிவிலே ஸ்ரீ தேஶிக ஹ்ருதய ஜ்ஞ ஜ்ஞவ ஜ்ஞ ந ஹ்ருதர்களான ஸதாசார்யர்களையும் ஸ்வாமி தேசிகனையும் தூஷிப்பதில் நோக்காக ஐந்தாறு விஷயங்களைக் குறிப்பிட்டு “இவர்கள் கதியே இப்படியானால் மற்றவர்களைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லையல்லவா” என்று எழுதி, மேலே சில ஶ்லோகாவஶேஷங்களையும் எழுதிவைத்தார்.

(1) ஸஹஸ்ரநாமத்திலே * விகர்த்தா என்னும் திருநாமத்துக்கு பாஷ்யமருளிச் செய்யாநின்ற பட்டர் “ஸூர்யஹர்ஷ ஶோகாத்யாவேஷி வார்யத்வஸ்த்ரதோஷஃ. கந்யா வாதார்வதார்விந்தாதயோ ரணாஃ கயஸ்ய ஸ்யுஃ?” என்று அருளிச்செய்திருக்கும் ஸ்ரீ ஸூக்திகளை தூஷிக்கிற முறைமையிலே இவர் எழுதியுள்ள வாக்கியங்கள் அநுவதிக்கவும் தகாதவை யென்று விடப்பட்டன.

(2) பெரிய பிராட்டியாரை ஜீவகோடியிலே சேர்த்துப்பேசி விட்டார்களென்று சில ஆசார்யர்களை நிந்திக்கிறார். கதோ வாந்தே! ஸ்வாமி தேசிகன் ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் ஜீவபரிச்சேத ஆரம்பத்தில் பிராட்டிக்கும் பொருந்தும்படியாகவே ஜீவலக்ஷணம் அருளிச் செய்தார். அவ்விடத்திற்கு வியாக்கியானஞ் செய்தருளாநின்ற ரங்கராமாநுஜ மஹா தேசிகன் அந்த ஜீவலக்ஷணத்திற்குப் பிராட்டியை லக்ஷ்யமாகாதபடி செய்துவிடலாமென்று பார்த்து ஒருவழி

யில் நுழைந்தார். அதில் தாமே மிகவும் க்ருதார்த்தியடைந்து, ஸ்ரீ ஜீவாநுஸம்பவவிசேஷதோ நதோஷ:. என்று முடித்துப் போனார். கண்ணுடையாரெல்லாரும் ஸ்ரீகோசத்தையெடுத்துக் காணவேணும். இதில் தாத்பர்யத்தின் ஸ்வாரஸ்யம் நோக்கவேணும். பிராட்டிக்கு ஜீவகோட்யநுஸம்பவம் கொள்ளாவிடில் தோஷம் வரத்தான் வரும் என்று நன்கு காட்டப்பட வில்லையா? அந்த ரங்க ராமாநுஜ மஹா தேசிகன் திருவடி வாரத்திலே * வகார வகாரி தி க்ரியாதிஸாவர்ண்யாத் தாயநம்॥

(3) ஆழ்வாரை நித்யஸம்ஸாரியென்று சொல்லி விட்டார்களாம். க்ஷந்தவ்யம்॥ எவ்விதமாகச் சொன்னால் உள்ளபடி ஆழ்வார்க்குப் பெருமையாகும் என்பது இவர்க்குத் தெரியுமோ? ஆசார்யஹ்ருதயாதிகளிலுள்ள ஆச்சரிய விபுல நிரூபணங்களை இவர்போல்வாரை நோக்கி வெளியிடுதல் தகாதென்று விடுத்தோம். தேசிகனோடு மற்ற ஆசார்யர்களோடு வாசியற எல்லாரும் இவ்விஷயத்தில் ஏககண்டர்களே யென்பது இந்த சங்கிடு குட்டைக்குத் தெரியாது. குருபரம்பராஸாரத்தில் "* வஹ்வேர்த்தவேஷ ஹதேஷ தேஷதே க்ளவ்யஹ: கநவ்யவிஸ்ய கபதே யத்தீஹிதவ்யாத:. என்கிறபடியே பராங்குச பரகாலாதிரூபத்தாலே அபிநவமாக ஒரு தசாவதாரம் பண்ணி" என்றருளிச் செய்திருப்பதன் கருத்தையறிவதற்கு இவரார்கொல்? இங்கு ஸ்வாமி உதாஹரித்துள்ள ச்லோகத்தை ப்ரக்ருத விஷயத்திலே ஸங்கமநம் பண்ணிப்பார்த்தால் மருமம் புரியும்.

(4) ஆளவந்தார் தமது ஸ்தோத்ரரத்நத்தில் ப்ரபத்தியை அநுஷ்டித்துப் பிறகு அதற்காக அநுசயித்தார் என்று சொல்லியிருக்கிறார்களாம். இந்த தூஷணம் இவர் யார் பேரில் கொடுக்கிறாரென்பது தெரியுமோ! ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனையே இவர் இங்கே தூஷிக்கிறாரென்பது வெளிப்படை. எங்ஙனேயென்னில்; தேசிகன் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸாங்கப்ரபதநாதிகாரத்தில் "இதுக்குமேல் * மமநாதயதஸ்தி என்கிறச்லோகத்தில் இஸ் ஸமர்ப்பணத்தைப்பற்ற அநுசயம் பண்ணிற்றும்" என்று ஸ்பஷ்ட

மாக அருளிச் செய்துள்ளார். அவ்விடத்திலே இந்தச் சேட்லூர ரும் (பக்கம் 44ல்) "பஶ்சாத்தாபப்படுகிறதும்" என்று அர்த்த மெழுதியுள்ளார். ஆளவந்தார் தாம் பண்ணின ப்ரபத்திக்குத் தாமே பச்சாத்தாபப்படுகிறார் என்கிற விஷயம் ரஹஸ்யத்ரய ஸாரத்திலேயே யிருக்கும்போது அந்த மஹானைத்தானே இவர் தூஷித்தாராக வேண்டும். அந்த ரஹஸ்யத்ரய ஸாரத்திற்கு அருமையான வியாக்கியான மருளிச்செய்து விட்டதாகச் சொல்லிக் கொள்ளுமிவர் அவ்விடத்திலே என் வாய்மூடி நெகிழ்ந்தார். இவரையே இலக்காகக்கொண்டு அண்ணங்கராசார்ய ஸ்வாமி வெளி யிட்டருளின ஸ்தோத்ரவ்யாக்யாந சோதநத்தில் (பக்கம் 168 தொடங்கி 5 பக்கங்களில்) இவ்விஷயம் வெகு அழகாக நிரூபிக்கப் பட்டிருப்பதால் அதற்கு வாய்திறக்கமாட்டா தொழிந்தவிவர் இப் போது இங்கே நாகீட்டுதல் என்னோ? தேசிகதூஷகர் தேசிகதர்ஶ நாசார்யராம்.

(5) * ஶ்ரீகேஶவஹூ நம்ஶஷ்யம் ஹாஷ்யம்தா வாஶனந மென்ற [ஶநவா] நிர்மூலோக்தியையடியொற்றி எழுதியுள்ளதும் அந்த காரிகையோடொக்கக் கழியுண்ணும்.

(6) திருக்குருகைப்பிரான் பிள்ளானை யஃகூஷந என்று யா ரோ சொல்லுகிறாராம். கீழே (பக்கம் 50ல்) நாம் நிரூபித்தபடி யே பிள்ளானுடைய ஆறாயிரப்படியில் கண்செலுத்தாதே நம்பிள்ளை திருவடிகளின் வியாக்கியான ப்ரக்ரியைகளிலேயே தேசிகன் திரு வுள்ள மூன்றியிருக்கிறாரென்பதற்காக அந்த தேசிகனையே பழித்த வாறுமிது. தேசிகன் பிள்ளானை யஃகூஷநவாக ஒருகாலும் நினைக்க மாட்டார். அவருடைய ஸ்ரீ ஸூக்தியில் தேசிகனுக்கு ஊற்ற மில்லாமைக்குக் காரணம் வேறு. ஶநூவிஷூஃ.

(7) * விஷ்ணுசித்தசெஷக ஹொக்தா என்று யாரோ சொல் லுவதாக தூஷிக்கிறார். இதுவும் ஜயாஸதகத்தில் * ஜயிதிஷதி ஶஷ்ரதாம் வுயாநெ ஜிதஶொஷாநிதாாநு விவிநதீகவழ! ஶவாாயஶஸெதாவக்ஷணக்ஷிஃ கஜொகாஜவெ! கயம் ஹவிதீ? என்றும் * ஹா நூாஸஹூவுபவவுஜிந வூாஹூத ஷூதஃ என்று மருளிச்செய்த தேசிகனையே தூஷித்தபடியிறே.

அந்தோ! அவருடைய வைபவஞ் சொல்லுவதாக இழிந்து அவருக்கு அவஜ்ஞாவஹங்களான [illegible]ங்களை யெழுதிவைத்தது போதாமல் அவருடைய ஸித்தாந்தங்களையும் தூஷித்துத் தலைக்கட்டினதொரு சுவடியைக் காண்பதும் அதிலுள்ளதை அநுவதிப்பதும் அதற்கு விடைகூறுவதுமாகியவிவை மஹாபாபமென்று வெறுத்து, இவ்வளவு அவஜ்ஞா[illegible]த்திற்கும் அநுஶயித்து ஸ்ரீ தேஶிகதிவ்யசரணாரவிந்த[illegible] நிக்ஷிப்த[illegible]னாய் உபஶாந்தனாகின்றேன். .... *

[illegible] சேட்லூர் [illegible] ॥

சேட்லூர் தாண்டவகண்டநக்ருத்யம் [illegible] ॥

ஸ்ரீகௌஶிகக்ருஷ்ண[illegible] சேட்லூர் தாண்டவகண்டநே ।
[illegible] ॥

சேட்லூர் தாண்டவகண்டநத்தில்
இரண்டாம்பகுதி
முற்றுப்பெற்றது.

இப்புத்தகம் கிடைக்குமிடம் :—
தி. அ. ஸ்ரீசைல கிருஷ்ணமாசாரியர்,
வடவண்டை மாடவீதி,
சின்னகாஞ்சீபுரம்.

Due Date	Return Date	Due Date	Return Da